சித்தன் போக்கு-சிவன் போக்கு



- Dr. Muhiyideen Katheeja Qadhiri(MD)

சித்தன் போக்கு-சிவன் போக்கு:1

^நாதன் நீ! **நவநாத சித்தன் நீ!**^முத்தன் நீ!நாதாந்த ^மூர்த்தி நீயே!நற்குணம் குடிகொண்ட பாதுஷாவான **குருநாதன் முஹ்யித்தீனே!**
-**தேவரீர் குணங்குடி அப்பா**.

(^அருகன்,சிவன்,குரு,மூத்தோன்,முனிவன்/ஒலி,இந்திரியம்).

அர்வாஹ்,அஜ்ஸாம்,ஃபர்ஸக்,

பஃத் @ஆன்ம ,ஜட,தடை,மீளும்-உலகங்களை அறிவோம்.குர்ஆனிலும் நால்வகை அறிவுகள் பொதிந்திருப்பதாக-இமாம் ஜஃபர் ஸாதிக் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பகர்வர்:

இபாரத்/சொற்பொருள்,இஷாரத்/குறிப்புகள்,லதாயிஃப்/நுட்பங்கள்,ஹகாயிக்/மெய்ம்மைகள்-என்ற தொடர் படித்தரத்தின் இறுதியை- சித்தர்களான மஸ்தான்கள் மூலம் மட்டுமே அறிய இயலும்.அவர்களது இலக்கணம் என்ன???

ஆசையும் அன்பும் அறுமின்-அறுத்தபின், ஈசன் இருந்த இடம் எளிதாகுமே! **(திருமூலர்)**.

பற்றுக பற்றற்றான் பற்றினை**(திருவள்ளுவர்)**.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!அன்பெனும் வலைக்கு உட்படும் அமுதே!**(திரு அருட்பா)**.

சித்தம் தெளிந்து-ககன மார்க்கத்தில் ஊர்ந்து-மூல ஜோதியில் கலந்து-சிவனை சித்தத்தில் அடக்கி-முக்தி அடைந்தவனே-சித்தன்.

ஸித்/ஸிது/சித்து/சிந்தை/சிவத்தை அறிந்தவன் =அனைத்தையும் உணர்ந்து கொள்ளும் தன்மை.

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு, *இதமுற்ற பாச இருளைத் துறந்து,* ***மதம் அற்று** 'எனது' "யான்" மாற்றிவிட்டு ஆங்கே,* *#திதம் உற்றவர்கள் சிவசித்தர்தாமே!* ***(திருமந்திரம்:2525)***
*#உறுதி சிறந்து மனம் தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்**(வால்மீகர் சூத்திரஞானம்).***
அந்நெறி இந்நெறி என்னாது அட்டாங்கத்து, *அந்நெறி சென்று சமாதியில் நின்மின்**(திருமூலர்).***
சாத்திரத்தை சுட்டெரித்தோன்/சித்தத்தை அடக்கியோன்/ஜெகமெலாம் சிவமென்று இருப்போனே-சித்தன்.
*கடவுளைக் கண்டு தெளிந்தவனே சித்தன்**(தமிழ்க் கலைக் களஞ்சியம்/தெ.பொ.மீ)**.*
சீரப்பா சித்தருடை(ய) மூலங்காணச், *செகத்திலே எவர் அறியப்போரார்? ஐயா!**(போகர் ஜெனன சாகரம்:314)**.*
காணரிதே எவராலும்- இரு சுவாசம், காண்பவனே *சிவசித்தன் அவனேயாகும்**(வான்மீகர் ஞானம்-16:13)**.*
*நேரான (சிவ) தீட்சை பெற்றோன் சிவமுத்தன்**(கோரக்கர் பிரம்மஞான தரிசனம்).***
மாயத்தைக் கண்ட சித்தர்-மதியதைப் பெருக்கிக் கொண்டு, *^காயத்தில் இருக்கும்போதே-கர்த்தனைக் கலந்து கொள்வார்,* *^நேயத்தை விட்டபோது-நேர் சிவம் தன்னைச் சேர்வார்**(சுப்பிரமணியர் சுத்த ஞானம்:61)***
*^உடல்,ஆகாயம்."**வாலையை**" பூசித்தவன் சித்தன்**(கொங்கண நாயனார்:74)**.*
*சாத்திரத்தைச் சுட்டு எரித்தால்-அவனே சித்தன்**(அகத்தியர் ஞானம்:2)**.*
செகமெலாம் சிவம் என்று அறிந்தோன் சித்தன், *சிந்தை தெளிந்திருப்பான்-அவனே சித்தன்**(வான்மீகர் ஞானம்:2)**.*

ஞானத்து அதிபரானவன் 💧 சித்தன்(**கோரக்கர் நமனாசத் திறவுகோல்**).
சித்தாய்க் கந்தமணம் வீசிடவும் காட்சியாகக், காசினியில் சாவு இவனுக்கு இல்லையாமே!(**கோரக்கர் தனி நூல் தொகுப்பு:5**).
சித்தாகிய ஆன்மாவிற்கும் & ஜடமாகிய உடலுக்கும் இடையே பிணைந்திருக்கும் போலியான முடிச்சுதான் ஜீவன் **-ஃபக்கீர்ஷா.**
வேட்கை விட்டார் நெஞ்சில்-மூடத்துளே நின்று முத்தி தந்தானே- **திருமந்திரம்:2614** (வேட்கை -பற்று).
சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன், சாத்திரக் குப்பையும் தணிந்தேன்... சாத்திரக் குப்பைகள் எல்லாம் பாத்திரம் அன்று.... சாதி சமயச் **சழக்கை** விட்டேன்....சாதியும் மதமும் சமயமும் பொய்யென- ஆதியில் உணர்த்திய அருட் பெருஞ் ஜோதி....சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே-தனி நடராஜ என் சற்குரு மணியே! (**வள்ளலார்**). (சழக்கை -அறியாமை, பொய், குற்றம், தளர்ச்சி.)
சோதி எனும் சற்குருதான் ஓ வந்தாரப்பா, சொல் அறிய வேணும் என அடுத்தேன்(**அகத்தியர் அமுதக் கலைஞானம்:1060**).

சித்தர்களின் சற்குண இயல்புகளாக-வாய்மை மௌனம் பசி பணிவு மனநிறைவு பொறுமை திருப்தி பரிசுத்தம் நாணம் நாணயம் நீதி தயாளம் தனிமை இறையாதரவு இறைவேட்டல் ஏக்கம் புலனடக்கம் மனநிறைவு நன்றியுடைமை மெய்ம்மை நேசம் ஞானம் ஒழுக்கம் எளிமை சாந்தம் மென்மை கற்பு அமானிதம்- காத்தல் ஈகை விருந்தோம்பல் அரவணைத்தல் குறைவான-பேச்சு சுயபரிசோதனை கலந்துண்ணல் நட்புடைமை மலர்ந்த-முகம் பிறர்நலம்-பேணல் புண்படுத்தாமை கோபம்-தவிர்த்தல் சகிப்புத்தன்மை மனதை-பக்குவப்படுத்தல் ஏற்பது-இகழ்ச்சி....

போன்ற ஈமானின் கிளைகளான 79பண்புகளும் வரையறுக்கப் பட்டாலும்,அவற்றுள் இரண்டு மட்டுமே அனைத்திற்கும் வேராக மறைந்து நின்று மணம் பரப்புகிறது.

அந்த இரு குணங்களையும், ஸூஃபித்துவத்தில் அதன் தாக்கத்தையும் தொடுவது காலத்தின் கட்டாயம்.ஏனெனில் இந்த இரு பாடங்களில் மட்டும்தான்- அனேகம்பேர் வருடக்கணக்கில் தேர்ச்சி பெறாமல் உள்ளனர், குருநாதர் வேடம் தரித்தவர்கள் உட்பட.

இஸ்லாத்தின் ஆறாவது கடமையாக ஞானிகள் பகர்வது:பேணுதல்/வரஹ் @ சந்தேகமானவற்றைத் தவிர்ப்பதாகும்.

தவிர்ப்பவனாக இரு,மீக்குயர்ந்த பக்தனாக மிளிர்வாய்(நபி மொழி).

இறையை அன்றி மற்றவற்றைத் தவிர்ப்பதே:வரஹ்- இப்றாஹீம் நபி & ஷிப்லி நாயகம்.

13900/1

அவசியமற்றதையும் உபரியானதையும் தவிர்ப்பது-என விளம்புவர் இப்னு அத்ஹம் ஞானி.

அனுமதிக்கப்பட்ட எழுபது விடயங்களைத் தவிர்த்தார்கள்,முதல் கலீபா.அனுமதிக்கப்பட்டதில் 90 விழுக்காடுகளை புறந்தள்ளினார்கள்,இரண்டாம் கலீபா.உடைமை அனைத்துமே-மாநபி போட்ட பிச்சை என வாழ்ந்தார்கள் மூன்றாம்.கலீபா.உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியப்படாத அனைத்திலிருந்தும் 100%ஐ ஒதுக்கினார்கள், நான்காம் கலீபா அவர்கள்.

தவிர்ப்பதே-துறவின் துவக்க நிலை .

இறையை விட்டும் உன்னை திசை திருப்பும் அனைத்தையும் களைவதே துறவு- ***அபூ ஸுலைமான் தாரானி ரஹ்மதுல்லாஹ்.***

ஆகுமானவற்றிலும்- அவசியமானதை மட்டும் நுகர்வதே வரஹ்,என்பதே ஹன்பலி ***இமாம்-ஸரியுஸ் ஸிக்தீ-கௌதுல் அஃளம்*** *போன்ற மாபெரும் மகாத்மாக்களின் மனோலயம்.*

அகத்தில் இறையைத் தவிர -வேறெதையும் நுழைய விடாமல் இருப்பதே வரஹ்,என்பர் ***யஹ்யா பின் முஆத் இறைநேசர்***.

கண நொடியும் விழிப்புடன் இதயத்தை கண்காணிப்பதே -யதார்த்த துறவு என இலக்கணம் வகுத்தவர்கள், ***யூஸுஃப் பின் உபைத் ரலியல்லாஹ் அவர்கள்***.

இறையை மறக்கடிக்கச் செய்யாத உணவு மட்டுமே ஆகுமானது,என ரத்தினச் சுருக்க விளக்கம் தந்தவர்கள் ***ஸஹ்ல் பின் அப்தில்லாஹ் வலியுல்லாஹ்***.

மார்க்கத்தின் அடிப்படையே தவிர்த்தல்தான்- ***ஹனீஃபா பின் அலி அலைஹிஸ்ஸலாம்.***

முழுமையான தவிர்ப்பின் தூசளவு எடையானது-ஆயிரம் தொழுகை நோன்பைக் காட்டிலும் வீரியமானது- ***ஹஸனுல் பஸரீ இமாம்***.

ஒரு வறஃ-ஆயிரம் கறாமத்துகளை விட மேலானது-நபிமொழி.

என்னிடம் மிக நெருங்கியவர்கள்-தவிர்த்தல் மற்றும் துறவைக் கைக்கொண்டவர்களே- ஸெய்யதினா மூஸா நபிக்கு இறங்கிய இறைத்தூது.

ஸுஹ்த் @ துறவு வழங்கப்பட்ட ஒருவரைக் கண்ணுற்றால்-அவரது அண்மையை பற்றுங்கள்,அவர் ஞானம் நிரப்பப்பட்டவராவார்**(நபி மொழி).**

ஒரு படைவீரன் அருந்தத்தந்த ஒரு மிடறு தண்ணீரினால்-முப்பது வருடங்கள் வேதனையை சுமந்தேன் **-அபூபக்கர் தக்காக் வலியுல்லாஹ்**.

துறவு என்பது-மனதளவில் உலகை துறப்பதாகும் -**ஞானி அபூ உதுமான்**.

பேதமுறா வண்ணம் மனம் பற்றற்று வெறுமையாக இருப்பதும்,உலகின் சுவடுகளை இதயத்திலிருந்து அழிப்பதுமே-துறவு(**ஜுனைதுல் பகுதாதி ஆண்டகை**).

உன்னை நீ துறப்பதே -மெய்த்துறவு(**தின்னூனுல் மிஸ்ரி நாயகம்**).

துறவி என்ற அரசன்-வெறுமையான மனதில் மட்டுமே தங்குவான்(**பிஷ்ருல் ஹாஃபி மஹான்**).

நன்மை அடங்கலையும் ஒரு வீட்டில் வைத்த இறைவன்-அதன் சாவியாக துறவை ஆக்கினான் (**ஞானி ஃபுளைல் இப்னு இயாள்**).

ஸூஃபித்துவம் என்பதே-நற்குணம்தான்(**அல் கத்தானி**).

கண்ணியமான பண்புகளே ஸூஃபித்துவம்(**முஹம்மத் இப்னு அலிய்யுல் கஸ்ஸாப் வலி**).

மேலான குணங்கள் அனைத்தையும் கைக்கொண்டு-கீழான குணங்களைக் களைந்து-விழிப்புடன் மனநிலையை கண்காணிப்பதே-ஸூஃபித்துவம்(**அல்லாமா முஹம்மதுல் ஜுரைரி**).

மனிதப் பண்புகள் மறைந்து போகும் நிலையே -ஸூஃபித்துவம்(**அபூ யாகூபுல் மஜபீலி ஞானி**).

ஸூஃபித்துவத்தின் வேர்ச் சொல்லான ஸஃபா என்பதன் பொருள்-மேலான/தூய்மை/படித்தரம்.இதன் எத்ர்ப்பதம் அழுக்கு/இழிவு/கீழ்த்தரம்.

உன்னில் உன்னை மரணிக்கச் செய்து-பற்றின்றி இறை தன்னில் உன்னை வாழவைப்பதே ஸூஃபித்துவம்(**ஜுனைதுல் பகுதாதி**).

இறையுடன் தனிப்பவரே ஸூஃபி(**மன்ஸூர் ஹல்லாஜ் நாயகம்**).

எதையும் நீ பற்றாமல் இருப்பதும்- உன்னை எதுவும் பற்றாமல் இருப்பதுமே ஸூஃபித்துவம்(**ஞானி ஸம்னூன்).**

சுய இச்சைகளைக் களைந்து இறை நியதிக்கு-முற்றாக வளைந்து கொடுப்பதே ஸூஃபித்துவம்(**ருவைம் பின் அஹ்மதுல் பகுதாதி**).

*மனிதர்கள் மீதான நம்பிக்கையை துண்டிப்பதே-ஸூஃபித்துவம்****(மஃரூஃபுல் கர்கீ நாயகம்)****.*

*விரட்டி அடிக்கப்படினும்- காதலியின் வாசலில் நிலைத்திருப்பதே-ஸூஃபித்துவம்****(அபூ அலிய்யுர் ருத்பரி).***

*தூய மனமே -ஸூஃபித்துவம்****(தாவூத் தாயி மஹான்)****.*

*மனித பந்தத்தை உதறி- இறை சன்னிதானத்தில் நெருங்கி இருத்தலே-ஸூஃபித்துவம் ****(முஹம்மது அபூபக்கர் ஷிப்லி நாயகம்)****.*

*இறையின் கல்யாண குணங்களைப் பூண்டவரே ஸூஃபி****(அபூ மன்ஸூர்)****.*

*எதனைக் கொண்டும் அசுத்தமாகாமல் இருப்பவரே-ஸூஃபி****(அபூ துராபுன் நக்ஷபந்தி)****.*

*இறையிடம் முற்றாக சரணடைதலே-ஸூஃபித்துவம் ****(அல்லாமா அல் முஸய்யின்)****.*

*அனைத்திலிருந்தும் தன்னை அழிப்பவரே-ஸூஃபி****(அல் ஹூஸ்ரி)****.*

*மனதில் உதிப்பாகும் அகநிலைகளில் கவனம் செலுத்துபவரே-ஸூஃபி****(அபுல் ஹஸனுல் ஹிர்கானி வலி)****.*

*உள் எதிர்ப்பு உணர்வுகளை மழுங்கச் செய்வதே-ஸூஃபித்துவம்****(அபூ ஸஹ்லுஸ் ஸூலூக்கி)****.*

*தெய்வீகப் பாய்ச்சலான மெய்ச் சுடர்களால் துடைக்கப் படுபவரே-ஸூஃபி****(ஸரிய்யுஸ் ஸிக்தி நாயகம்)****.*

*சித்தர்கண அதிபதியாக -முந்நாள் ****முத்து நபியையும் முச்சுடர் முஹ்யித்தீனையும்**** மூடலாக சித்தர்கள் சித்தரிப்பர். அந்தப் பாடல்களுக்குள் நுழையுமுன்-மாநபியின் யதார்த்தத்தை சற்று விளங்குவது உசிதமானது:*

*எனை தரிசித்ததலில்தான் ****ஈமானின் அகமியம்**** பொதிந்துள்ளது,நான் உங்களது ஆத்மாவின் தந்தையாவேன், என்னைக் கண்டவர்- ஹக்கையேக் கண்டார்****(நபிமொழிகள்)****.*

13900/2

நபியே!* நிச்சயமாக நீங்கள் மீக்குயர்ந்த நற்குணத்தின் மீது இருக்கின்றீர்கள்****(குர்ஆன்/68:4)****.*

*மாநபிகளாரின் இதர சிறப்பியல்புகளை வழுத்தாமல்-அவர்தம் சற்குணத்தை மட்டும் புகழ்ந்ததில் பல சமிக்கைஷகள் உள்ளன****(அபூ அலி தக்காக்)****.*

*உமது ஆடைகளைத் தூய்மையாக்குவீராக என்ற 74:4ஆம் மறை வசனத்தின் மறை பொருள்-சற்குணமே(**ஹஸன் பஸரீ இமாம்**).*

*மன்னிப்பைக் கைக்கொண்டு நன்மையை கட்டளையிடுக -என்ற இறுதி மறை 7:199 வசனத்தின் அகப்பொருள்-நற்குணமே(**அபூ ஹஃப்ஸ் ஞானி**).*

*தனது அருட்கொடைகளை புறத்திலும் அகத்திலும் நிரப்பி உள்ளான்(31:20) என்பது முறையே-இறைக் கட்டளைகளையும் நற்குணத்தையும் சுட்டும்(**தப்ஸீர் மனாவி**).*

*நபியிடத்தில் உள்ள அழகிய முன்மாதிரி(33:21)என்பது சற்குணமே(**தப்ஸீர் குர்துபி**).*

*மனிதர்களில் பெரும்பாலோரை சுவனத்தில் நுழைவிப்பது-இறையச்சமும் நற்குணமும்தான்(**haakim**), நற்குணங்கள் அமையப் பெற்றவரே-பூரண இறை நம்பிக்கைக் கொண்ட இறைவிசுவாசி(**thirmithi-1162**), நற்குணங்கள் நிரப்பப்படவே யான் வெளியானேன்(**baihaki 10/191**),மீஸானில் மிகக் கனக்கும் வஸ்து-நற்குணமே(**ahmed 26245**) ,புன்சிரியினாலும் நற்குணத்தாலும் பிறரை மகிழ்வியுங்கள்(**r.saaliheen**),கெட்டவிதி என்பது-துர்க்குணம், மக்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள்(**thirmithi 1987**),உம்மால் செய்ய இயலாத-மௌனத்தையும் நற்குணத்தையும் கைக்கொள்க, பகலில் நோன்பு நோற்று-இரவில் நின்று வணங்குபவரின் பதவியை-நற்குணமுள்ள ஒருவர் அடைந்து கொள்கிறார்(**aboodawood**), சகோதரரின் தேவையை நிறைவேற்றக் கிளம்புவதானது-ஒரு மாத இஃதிகாஃபை விட மேலானது(**tirmidhi saqeer 2/106**) ,நற்குணமானது-இறைக்கொடையாகும், மாநபியை விட மிகுதி புன்னகை பூத்தவரை-நான் பார்த்ததில்லை(**tirmidhi 3641**), குணத்தால் சிறந்தவரே-**இறைக்குப் பிரியமானவர்** (**tabrani**),எனக்கு மிகப் பிரியமானவரும்-மறுமையில் எனக்கு *மிக நெருக்கமானவரும்* -*

*நற்குணமுடையவரே(**ahmed 6768**)- (**நபிமொழி சாரம்**).*

*...உண்மையாளர்களுடன் சேர்ந்து இருங்கள்(**அல் குர்ஆன் 9:119**)*

*இதயத்தை சுருக்கும் சுய இச்சைகளின் வெளிப்பாடே-தீயகுணம்(**ஷகீகுல் பல்கீ வலி**).*

*எனது யாதார்த்தத்தை-என் றப்பைத்தவிர வேறு **எவரும் அறியமாட்டார்கள்** ,என்பதனை என்னை நன்மாராயம் சொல்பவனாக அனுப்பி வைத்தவன் மீது சத்தியமிட்டுச் சொல்கிறேன்(**ஹதீஸ்**).*

கோடானு கோடி மறையாலும் அறியாக் குணம்,

*குடி கொண்ட கருணை வடிவே!(**குணங்குடி மஸ்தான் ஆண்டகை:219**).*

அறிவதற்கு அரிய **இலாஞ்சனை** நபியே!**(குறமாது)**.

(இலாஞ்சனை -கீர்த்தி,முத்திரை.)

பல அறிவாகரமாய் நின்றிடும் குருவாம் இறஸூலே.....ஆதி முச்சுடர் எனும் புனித வாசரே!...,

சுத்த ^சைதன்னியமான இறஸூலே!**(மெய்ஞ்ஞானச் சிந்து)**.

^ஞானம்,அறிவு,ஆத்மா.

ஆதி நபியார் முடி-அறிவின் மேலும் மிக்கோர் **(மிஃறாஜ் வளம்)**.

பண்டை மறைநூல் முடிவில் நின்ற-^பரத்தின் தூதை **(முதுமொழிமாலை).**

^இறை,உடல்.

நான்மறை தேடிய தீன் நபியை**(ஞானப்புகழ்ச்சி)**.

பூதலத்து உறைந்த பல்லுயிரின் ,**கருவினும் கருவாய் (சீறாப்புராணம்:2)**.

சகல உயிர்க்கும் தாய் என வந்த,அஹ்மது இறஸூல்**(மதீனக் கலம்பகம்).**

அனைத்துள உயிர்கட்கு எல்லாம் நடுமதி மூலமான,நபி மஹ்மூதைப் போற்றி!, அலிப் எழுத்து அஹ்மதாய்-அனந்த சீவன் ஆனதும்**(திருநெறி திரட்டு).**

கருணை மணியான கண்ணை மூடி, **முக்காலம் அதான முஹம்மதிலே** ,

முடுக முடுகும் என்று அல்லாஹ் சொன்னான்....ஆலம் ஸகீரானது-அஹ்மதுவாம்,

ஆலம் கபீரானது- முஹம்மதுவாம் **(வேதபுராணம்:138,118)**.

அலிபுக்குள் முளைத்த மீமின்-**அஹ்மது நபி றஸூலுல்லாஹ்வே**!...,
முகம் ஒரு மூன்றும்* பெற்ற-அஹ்மது **நபியுல்லாஹ்வே!(பெரிய முகியித்தீன் மாலை:3).**

ஆலம் பலதுமே ஒன்று கூட்டி,

அண்ணல் முஹம்மதின் கோலம் பூண்டு**(ஆஷிக்கு அவதார மாலை)**.

ஆலநபி இருந்தாளும் தலம் எங்கே? சிங்கி-அவர்,

அண்டத்துக்குள்ளே அரசாட்சி செய்வாரே! சிங்கா**(மெய்ஞ்ஞான மாலை)**.

*வஸ்து மயமாய் நிறைந்த முஸ்தபா முஹம்மதே!**(மெய்ஞ்ஞான சிந்து)**.*

*நபியே! நீங்கள் இல்லையெனில்- என் ரட்சகத்தன்மையை வெளிப்படுத்தியிருக்க மாட்டேன்-என்ற இறைப் பிரகடனம் இல்லாது போயிருந்தால்-சோலைகளில் இந்த வண்ணமும் இல்லை,நட்சத்திரங்களில் இந்த ஒளியும் இல்லை-**அல்லாமா இக்பால்**.*

கவ்ஸைன் எனும் மிஃறாஜில் சென்று,

***கௌதுஸ்ஸமதானி** காட்சியை நோக்கில்**(ஞானாந்த ரத்தினம்/பக்கம்:80)**.*

*ஓதும் உமது உயரம் **வயதினை** -யாரும்,*

*ஒருபோதும் கண்டதில்லை**(குறமாது)**.*

***அரூபி சொரூபி** என்று என்னத்தைச் சொல்லலாம் தாயே?-அது,*

*அல்லாஹ் முஹம்மத்-தாத்தும் ஸிஃபாத்தாகும் மகளே!**(மகுஷூக்கு மாலை:41)**.*

பார்க்க முடியாத சுடர்-பண்பாக வந்ததைப்,

*பார்க்க வலு தாரும் நபியே! & குருநாதராய் வந்த **குத்புல் அப்துல் காதிர்** நீரே! இறை அருள்வழி சேரும் நல் அண்ணல் ஹமீதே என் பீரே!**(ஸூஃபி ஸெய்யது ஆஸியா உம்மா)**.*

ளாஹிராய் பாத்தினாகி ^நவநீதம் கொண்டு முன்னம்,

*ஆஃகிறாய் அவ்வலாகி அவற்றிற்குச் சதாகத்தாகிய **நபியே!(பெரிய முஹ்யித்தீன் மாலை:17)***

^நெய்

13900/3

ஓம் என்ற குண்டலி **நடுநிலை நாயகமே**! வையம் எல்லாம் ஈன்ற **வாலை மஹ்மூதா! பதப்பொருளே! (இல்லத்துறவு:ப.1)**.

வில் சுடரின் புருவத்தே மலங்கள் அகற்றி மாசிலாது ஒளி வளர்க்கும் யோகரே!... **வள்ளல் முஹம்மதே! (ஞானானந்த ரத்தினம்:ப.130)**.

உடலுற்ற தாயாய் நம் உள் உயிராய் -உள் உயிர்க்குள் சிறந்து,

அடலுற்ற தாயான நல் அஹ்மதுவாம்! & முந்திக் கிருபை பெருகி -முத்தான முஹம்மதை , **நீ அஹ்மத் ஆனவனே!** , நீயே-புவிக்குள் றஸூலாக வந்தவன்

(ஞானப்புகழ்ச்சி:320,11,593,140).

அன்னையாய் எவர்க்கும் முன் அமைந்தவரை,

ஆதிநாயகன் தன் தூதர் ஆனவரை**(மதீனக் கலம்பகம்:64)**.

முத்து ஒன்றினாலே-முழுதும் படைத்தானே மயிலே**(பெண்புத்தி மாலை:ப.20)**.

சிறந்த திரை எல்லாம் **காதிரியே!** ,

தெளிந்த ஒளிவெல்லாம் றஸூலின் நூறே**(வேத புராணம்:716)**.

அவ்வலாகி அஹதாகி வஹதாகி வாஹிதுமாகி,

சமதாகிச் சூழ்ந்து அதிலே

தாகிப்பாகி நெஞ்சே மோகி உறவாகி ..,

நாமம் ஒப்பின்-மஹ்மூது வேந்தரையே நாடுதே

(மெய்ஞ்ஞானச் சிந்து).

அலிபு லாம் மீமாய் வந்தது என்ன?,

அது அஹதிய்யத்து வஹ்தத்து வாஹிதியாகும்**(மகுஷுக்கு மாலை)**.

நூர் முஹம்மது என்ற ஒளியில்-நுட்பமுடன் இவ்வுலகைச்,

சீர் பெறவேதான் படைத்த சீர் அறிவது எக்காலம்?(நீதிநெறிச் சாரம்).

^ஏம எழுவகைத் தோற்றம் எல்லாம்-

இறஸூல் நபியைக் கொண்டு ஆனதுவே(**வேதபுராணம்).**

^இன்ப,பொன்.

முஹம்மதே! **முஹம்மதே!,என்று -ஆன நும் திருநாமத்தை** அடிக்கடி உரையாது நின்றேன்(**சீறாப்புராணம்-53:30**).

ஆசை நபி பேரைப் பாடிப்பாடி, அறுஷும் குறுஸும் நின்று அசைந்தாடுமே(**பி.மாலை:482).**

குருநபியை மடியில் வைத்துக்-கொஞ்சி நல பஞ்சணையில்,

கூடி விளையாடி நான்-கூடுமணல் கூடாய்(**குறமாது**).

ஓது முஹம்மது பாதம் அனுதினம்,

உகந்து கும்மி கொட்டுங்கடி-மிக,

மகிழ்ந்து கும்மி கொட்டுங்கடி (**மெய்ஞ்ஞான மாலை**).

மதீனா வாசனார்-^கதவம் என் நேசமே(**மதீனக் கலம்பகம்**).

^காவல்.

உம்முள்ளே இருக்கும் நன்னபியை(**alquraan 49:7**).

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை,

அவனோடு ஒப்பர் இங்கு யாவரும் இல்லை-**திருமூலர்.**

சோதித்த பேரொளி ○மூன்று ●ஐந்து என நின்ற,

ஆதிக்கண் ஆவது அறிகிலர்-**திருமூலர்**

(○சிவம்+சக்தி+விந்து/●சதாசிவம்+ஈசன்+அரன்+அரி+அயன்).

நெஞ்செழுத்தாலே நினையாமல் அந்த,

*நிசம் தெரியுமோ? வாலைப் பெண்ணே!**(கொங்கணர்)**.*

*முந்தி கண்டு கூடுவதும் எந்தக் காலம்? மூடரே!^மதுவை உண்டு மேலே பாரே**(சட்டைமுனி)**.*

^அமுதம்.

*நாலு மறை முடிவில்-நற்குரு பாதமடி -**அகப்பேய்ச் சித்தர்**.*

***வெட்டவெளிதன்னை** மெய் என்று இருப்பார்க்கு,*

*பட்டயம் ஏதுக்கடி? -**குதம்பைச் சித்தர்**.*

***பொய் வேதம்** தன்னைப் பாராதே-அந்தப்,*

போதகர் சொற்புத்தி ஓத வாராதே,

*மைவிழியாரைச் சாராதே-**கடுவெளிச் சித்தர்**.*

*ஆதி அந்தம் வாலையவள் இருந்த வீடே.....சோதி அந்த **நடுவீடு*** பீடமாகிச்-சொகுசு பெற வீற்றிருந்தாள் துரை பெண்ணாத்தாள்.....பத்து வயது ஆகும் இந்த ^வாமி தடனே-**கருவூரார்.***

(^வாமம்).

*மூல முதல் அறிந்து சிவ சிவ,முத்தி தரும் சுழுமுனை அறிந்து-ஞான வெட்டியான்....நாத விந்து அர்ச்சனைகளில் நாம் துதிப்போம்:**28,40/திருவள்ளுவர்.***

ஆரும் அறியார்-அகாரம் அவன் என்று,

*பாரும் உகாரம் படர்ந்திட்ட நாயகி-**திருமந்திரம்:1721.***

மனம் அடங்கக் கல்லார்க்கு-வாய் ஏன்? பராபரமே!

....விண்ணே விண் ஆதியாம் பூதமே நாதமே,

*வேதமே வேதாந்தமே!-**தாயுமானவர்**.*

அண்ணாக்குத் தன்னை அடைந்து அங்கு அமிர்து உண்ணல்,

விண்ணோர்க்கு வேந்தனுமாம்....

சிந்தையுள் நின்ற சிவன் அருள் பெற்றக்கால்-

பந்தமாம் பாசம் அறும்-ஔவைக்குறள்.

***குணங்குடியார் மஸ்தான்** சாகிப் போல்,*

*குவலயத்தில் உந்தனுக்கு வரமும் தந்து(**போகர் ஏழாயிரம்:4/702)**.*

சித்தரெல்லாம் வாழி! சுத்த சிவமே! நந்தீஸ்வரனே!....

சித்தர் கணமெல்லாம் எனக்கு அருள் இரங்கவும்....

சித்தர் கணத்தோடு சேர்ந்திடச் செய்யுமோ?....

*சித்தர் கணமும் வாழி! சின்மயமும்தான் வாழி!... -**குணங்குடி மஸ்தான் ஆண்டகை**.*

***ஆகம வலையில் சிக்கி** ...மந்திர ஜப தபங்கள் செய்து-மனமது வேறதாகி, ஒரு பயனும் காணமாட்டாத மாந்தர்-**சச்சிதானந்த சுவாமிகள்**.*

*கூறியதோர் **வாலையின் மூன்றெழுத்தைக் கேளாய்**,*

***(இறைவிப்பெண்)**குறி அறிந்து பூசை செய்து பின்பு*
கேளாய்...மைந்தனே! இவளை நீ பூசை பண்ணத்-

*தேறியதோர் ^புவனைதனின் எழுத்தைக் கேளாய்(**சட்டைமுனி ஞானம்)**.*

^சக்தி, தேவி.

தேடு- ஒத்த ***நாகைநாதர்*** *சீரடி சிந்தை தேர்ந்தே,*

ஓடைத் தாமரையின் பூப்போல் உயர்வர் நற்பெரியோர் நெஞ்சே...

சிறந்த சிற்பரத்து ***நாகை லிங்கரைத் தெரிசி*** *நெஞ்சே-****கணபதி தாசர் நெஞ்சறி விளக்கம்.***

மனிதனுக்கு மேல்- ஒரு தெய்வமும் இல்லை.... புராணங்கள் யாவுமே - பொய்மையின் குன்று....சாத்திரம் என்பது சண்டைச் சரக்கு... தோத்திரக் குப்பைகள் மூடர்கள் கூச்சல்.... வேதாந்தம் என்பது வெறும் வெத்துவேட்டு- ***தங்கவேல் உலோகாயதச் சித்தர்.***

*துறவி-இவ்வுலகில் அந்நியன், ஞானி-மறுவுலகில் அந்நியன்-****அன்நஸ்ராபாதி*** *வலி.*

13900/4

---

*தீயினுள் ^தெறல் நீ! பூவினுள் *நாற்றம் நீ!*

கல்லினுள் மணியும் நீ! சொல்லினுள் வாய்மை நீ!

அறத்தினுள் அன்பு நீ! மறத்தினுள் மைந்து நீ!

வேதத்து மறை நீ! பூதத்து முதலும் நீ! வெஞ்சுடர் ஒளியும் நீ! திங்களுள் #அளியும் நீ!

*அனைத்தும் நீ! அனைத்தின் உட்பொருளும் நீ!****(கடுவன் இளவெயினார்/மூன்றாம் பரிபாடல்:63-68/கிமு 540 ஜூன் 25 புதனன்று பாடப்பட்டது)****.*

^தெறிக்குதல்,

**வாசனை,*

#குளிர்ச்சி.

நின் வருதலும் ***ஒடுக்கமும்*** *மருத்தினுள,*

அதனால் இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்,

ஏமமார்ந்த நிற்பிரிந்து ***(பரிபாடல்:33-35)****.*

இவையும் அவையும் உவையும்,

இவரும் அவரும் உவரும்,

எவையும் எவரும் ***தன்னுள்ளே***

*ஆகியும் ஆக்கியும் காக்கும்****(நம்மாழ்வார்)****.*

உலகெலாம் உணர்ந்து ஓ(து)தற்கு அரியவன் ***(பெரிய புராணம்)****.*

*பரம் பரஞ்சோதி பரனே! போற்றி!****(சிலப்பதிகாரம்)****.*

செங்கணானும் பிரமனும் தம்முளே,

*எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்****(அப்பர்/தேவாரம்:6173)****.*

அப்பனே ஆவியோடு ^ஆக்கை,

புரைபுரை கனியப் புகுந்து நின்றுருக்கிப்,

பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே! ***(திருவாசகம்).***

^உடம்பு.

*உமை பாகம் ஆகத்து அணைத்தாய் போற்றி!ஊழி "****ஏழான****" ஒருவா போற்றி!,*

'மூவாய்' பிறவாய் இறவாய் போற்றி!முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி!,

தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி! எங்கும் பரந்தாய் போற்றி!,

...தேடித் தேடொணாத் தேவனை -என்னுளே,

*தேடிக் கண்டு கொண்டேன்****(திருநாவுக்கரசர்)****.*

^ஊனார் உடல் புகுந்தான்-உயிர் கலந்தான்-உளம் பிரியான்,

*.....பாசவேர் அறுக்கும் '**பழம்பொருள்**' தன்னைப்,*

பற்றுமாறு அடியனேற்கு அருளி....

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதியை

(மாணிக்கவாசகர்)

^சிவன்.

சிவனுடைய வழி அறிவதில்,

குருவின் வழி முதலிடம் பெறும்,

....வழிபாடுகள்- குருவின் பாதைக்கு,

ஏறுமாறானவை,

...குருவின் சொல் இன்றேல் ,

அது வழிபாடு ஆகாது,

தலையற்ற முண்டத்திற்கு,

முடிசூட்டும் இரட்டைக் கேடர்களைக்,

கூடல சங்கமர் ஏற்பாரா?.....

ஒளியோடு ஒளி அரியணையில் ,

ஏறிய பொழுது அண்ணல் கூடலை,

சங்கமன் மட்டுமே அறிவான்,

*ஒளியை ஒளி "**மணந்து**" விளையும் கூட்டத்தை**(பசவண்ணர்:70,71,72,957).***

சாத்திரங்கள் வேண்டா-சதுர் மறைகள் எதுமில்லை,

தோத்திரங்கள் இல்லை-உளம் தொட்டு நின்றால் போதுமடா!...

சுத்த அறிவே-சிவம் என்று கூறும்,

*சுருதிகள் கேளீரோ?**(பாரதி)**.*

*கற்பனை கடந்த ஜோதி-கருணையே உருவமாகி-**சேக்கிழார்**.*

ஏதும் ஒன்றறியாப் பேதையாம் பருவத்து,

என்னை ஆட்கொண்டு எனை உவந்தே,

ஓதும் இன்மொழியால் பாடவே பணித்த,

*ஒருவனே! என்னுயிர்த் துணைவா!(குருநாதனே!)-**இராமலிங்க அடிகளார்**:3828.*

வேறுபடும் சமயம் எல்லாம் புகுந்து பார்க்கில்,

விளங்கும் பரம்பொருளே! நின் விளையாட்டு அல்லால்,

மாறுபடும் கருத்தில்லை-முடிவில் மோன,

*வாரிதியில் நதித் ^திரள் போல் வயங்கிற்றம்மா! **(தாயுமானவர்:கல்லாலின்-25 ,***

***Similar to திருவருட்பா:2118)**.*

^குழியம்,திரட்சி.

உற்பத்தியும் பிரளயமும்- சப்தத்தினாலேயே,

பின்னும் உற்பத்தியாவதும்-

சப்தத்தினாலேயே-குருநானக்.

அடைய முடியாத ஆழத்தில் விதையை தூவுக-ஆழ்ந்த தியானத்தில் உட்கார்க-கபீர்தாஸ்.

*எல்லா ஜகத்திலும் ஆத்மா உள்ளது,அது சத்திய வஸ்து,அதுதான் ஆன்மா,அதுதான் நீயாக இருக்கிறாய்**(சாந்தோக்யம் உபநிசத்து-8:7).***

முத்தனை முதல் ஜோதியை முக்கண்,

*அப்பனை **முதல் வித்தினைச்** ,*

சித்தனை சிவலோகனைத் திருநாமம் பாடி-திருவாசகம்.

*ஜெகம் எலாம் சிவம் என்றே- அறிந்தோன் சித்தன்-**வால்மீகி.***

மூலமாம் குளத்தினில் முளைத்து எழுந்த ^கோரையை,

(அதி)காலமே எழுந்திருந்து நாலு கட்டு அறுப்பிரேல்,

*பாலனாகி வாழலாம்-பரப்பிரமம் ஆகலாம்-**சிவவாக்கியார்.***

^புல்

இகம் பரம் இரண்டிலும்,

உயிருக்கு உயிராகி எங்கும்,

*நிறைகின்ற பொருளே!-**தாயுமானவர்.***

*தானாகித் தான் **முடிந்த சூட்சம்** தன்னை,*

தரணியில் அறியாமல் தான்தான் என்றே,

ஊனாகி நின்ற திரு உடலைக் காணான்,

*உடலில் நின்ற அட்சரத்தின் உறுதி காணான்-**நிஜானந்த போதம்**.*

பேசும் எழுத்துடன்-பேசாத எழுத்துறில்,

*ஆசான் பர நந்தியாம்(**ஔவை குறள்**).*

பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்,

*கூசாமல் கட்ட(**கொடிப் பாட்டு**).*

***வாலைக்கு** மேலான தெய்வமில்லை....*

*காணாத **வாலையைக்** கண்டு கொண்டால்- காட்சி,*

*காணலாம் ஆகாயம் ஆளலாமே!(**கொங்கணச் சித்தர் வாலைக் கும்மி**:74,78).*

வாலையவள் சித்தர் தேவி-நயமான சித்தருக்குத் தாயாக நின்றாள்....

நண்ணப்பா நாற்பத்தி அஞ்சு(வயது)க்குள்ளே,

நலமாக லட்சத்து எண்ணாயிரம்தான் போடே....

வையப்பா மதனவல்லி வசியமாவாள்,

மகத்தான வாலைப் பெண் சித்தியாச்சே!...

வறந்திட்ட வாலைக்கு வயதோ? கேளு,

*வளமாகப் பத்து ஆறு வயதுமாமே!**(தன்வந்திரி சித்தர் நிகண்டு 300:82,83,85,18)**.*

கூறியதோர் **வாலையின் ௐ** *மூன்றெழுத்தைக் கேளாய்,*

குறிப்பாக அறிந்து பூசை செய்து பின்பு கேளாய்,

மாறியதோர் திரிபுரை

*卐எட்டெழுத்தைக் கேளாய்**(ஸ்ரீரங்கம் சட்டைமுனி ஞானம்4:3)**.*

ௐ *அஉம் hoo*

卐 ن ي د ا ي ي ح م திரிபுர சுந்தரி

ك ا و س ن م ا ي.

13900/5

---

*...உதவியாளர்களான மெய்யாளர்களைப் பற்றியவர்களே-வெற்றியாளர்கள்**(குர்ஆன்/5:55-56, 66:4)***

*அழகிய வார்த்தையும் தர்மமே**(muslim)**, உங்களில் மிக நல்லவர் நானே**(mishkaath 226)** -நற்குணங்களின் தாயகம் நபிகளார்.*

இன்ஸான்தான் வெளியில் வரக் கோலமது-**தாத்துல் முஹம்மதிய்யா குதுறத்து றப்புல் அற்பாபாமே (மகுஷூக்கு மாலை:2)**.

நானே-நீ, நீயே- நான், நாம் இரண்டும் ஒன்றானால்-

தேனின் ருசியது போல் தெவிட்டாய் நீ பூரணமே!

(பட்டினத்தார்)

வாளான விழி உடைய பெண்ணைச் சேரும்,

மயக்கம் அற்று நிற்பது எப்போ? மனமே ஐயோ!**(கைலாயக் கம்பளிச் சட்டை முனி:6)**

அறைந்திட்ட வகை ஏது?உப்பே ஆதி,

ஆகாச விந்துவினால் ஜனித்த பிண்டம்**(சூரியானந்தர் சித்திரம்:2)**

போ(கு)ம் வாயு சிவம்-உள்ளே புகுதல் சக்தி**(சங்கரனார் ஞான சரநூல்:41)**

சரம்=சீவன், பிராணன், மூச்சு, சுவாசம், உயிர், உயிர்ப்பு, ஆவி, காற்று, மனம்.

ஒருவர் செய்த பாவபுண்ணியம் ஒருவருக்கு இங்கு,

உண்டு என்று சொல்லுகின்ற ஊமை நெஞ்சே!,

தருகும் அவரவர் உயிர்க்குத் துணை யார்?**(சிவானந்த போதம்)**.

மாதா பிதா சுற்றம் என்று மயங்கினையே!,

நீதான் தனுவாகி நின்றனையே!**(குருஞான சம்பந்த சுவாமிகளின்- சிவபோக சாரம்:15)**

தனு=இறைவி வழி வந்தோன், உடல்.

இறந்தும் பிறந்தும் இளைத்தேன்-இனி யான்,

மறந்தும் பிறவா வரம் தா!**(குருஞான சம்பந்த சுவாமிகளின்-சொக்கநாத வெண்பா:10)**.

கரு இருந்த (இருதயப்) பதி அதுதான் மைந்தா!மைந்தா!,

*கண் காணத் தோன்றுமடா!கருவைப் பாரே!**(அருணாசல குரு நிஜானந்த போதம்).***

தரணியில் சில பேர்-தாமரை இலை தண்ணீர் எனத் தவித்தனர் அப்பா!,

*பாருலக ^தீதல் தேடியும்-குருவின் பதம் அடையாமலும் மாண்டார்**(புலஸ்தியர்-100).***

^தீந்துபோதல், கருகுதல்

(சிவகுருவை) ஓதி நீ நெஞ்சே! கேள்-ஓர் எழுத்து மந்திரத்தால்,

*ஆதியாய் எங்கும் அமர்ந்தானை **(பட்டினத்தார் ஞானம்:97)**.*

நிற்குணம் தன்னிலே தள்ளுடா தள்ளு,

*நிறைந்த பரிபூரணத்தால் தள்ளுடா**(காயக்கப்பல்:4)**.*

பிர்ம சொரூபத்தை நாடு-உன்,

*கர்ம வினையோட வழிதனைத் தேடு-**கல்லுளிச் சித்தர்**.*

பையூரிலே இருந்து பாழூரிலே பிறந்து,

*மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடு அறியேன்-**அழுகணி சித்தர்.***

*பாங்கான முப்பூவை அறிய வேணும்...நடுவைப் பாரு-**தட்சிணாமூர்த்தி சித்தர்.***

*சென்றுமே **யாகோபு** என்று கூறி-சிறப்புடனே அன்னத்து செய்துமல்லோ,*

*தின்றிடவே ரொட்டி அது தானும் ஈந்து-சிறப்புடனே **ஹஸன் ஹுஸைன்** என்று கூறி,*

வென்றிடவே உபதேச விருப்பமுடன் மறுங்குமார் ஓதினரே-போகர் ஏழாயிரம்.

*பாரப்பா விந்துவைத்தான் மணியாய்ச் செய்யப் பாடுகிறேன்-**வரரிஷி.***

தொல்லைப் பிறவி தொலைக்கார்க்கு முத்திதான்,

*இல்லை என்று ஊது குழல்-***இடைக்காடச் சித்தர்.**

ஆவி பாழ் போகாது-அடங்கி இருந்தபின்,

*ஓவியம் ஆகும் உடம்பு-***ஔவைக்குறள்***.*

*இறந்தாரை எல்லாம் எழுப்ப வல்லேன்-***வள்ளலார்***.*

எல்லாம் பொய் என்றே எனைக்காட்டி எம்பிரான்,

*சொல்லாத பேரறிவுதான் சொல்லி-***சீகாழிச் சிற்றம்பல அடிகளாரின் துகளறு போதம்.**

தவநிலை கண்டு தன்வழி செல்வோர்க்கு-ஜெபமாலை எதற்கு?....

பற்பல மார்க்கம் பகர்ந்திடும் வேதங்கள்-கற்பனையாகுமடி....

வேதியர் கட்டிய வீணான வேதத்தைச்-சோதித்துத் தள்ளடி....

*அப்பதியும் மெய்ப்பொருளாம் கூடு கூடு-ஆனந்தக் கோட்டையில் அம்மனையை மவ்வே-***கும்பலைச் சித்தர்.**

சித்தித்தால் சிவன் வேறே இருக்கிறானோ?,

தேகத்தில் ஓடவிட்டால் சிவன் வேறப்பா!...

காணுவது குருவினிடம்-கருவைக் கேளு....

குருவாகி அகில நிரந்தரனுமாகிக்-குலவுகின்ற பரம்பொருளின் பாதம் காப்பே....

ஆமப்பா! இரு விழியின் மத்தியில்தான்- அப்பனே! மூக்குநுனி அடிவாரத்தில்,

நேமப்பா ஈசன் வீற்றிருக்கும் பீடம்-தன்வந்தரி பகவான்.

வெட்ட வெளியான மணிபீடம் பாரு-ஆரப்பா! அந்த இடம் இருந்து கொண்டு-அங்கொன்று மலர் பறித்து அர்ச்சித்து ஓதே-**கணநாதர்.**

தாம் என்ற சிவமாகி-சிவத்துக்குள்ளே,

சத்தியமாய்-சத்திக்குள் விந்துவாகி,

நாம் என்ற விந்துவுக்குள் நாதமாகி,

நாதத்தில் **சதாசிவனார் நாட்டம்** காணே!-**போக மகரிஷி**.

ஏறினேன் சவுதகிரி வட்டம் ஏறி,

ஏகாந்த வெட்டவெளியைப் பார்த்து மைந்தா-**புலிப்பாணி முனிவர்.**

வெளியல்லோ வாய் இருக்க நாவும் பேச,

வார்த்தை என்ன? **புருவமையம்** நாவும் ஆச்சே- **காடைப்பிள்ளை முனிவர்.**

ஊணும் அந்த ரேசகத்தில் புருவமையம் **-சூரியானந்தர்.**

அறிவான வஸ்துவல்லோ-பிர்மரூபம்,

அபரம் என்றும் பரம் என்றும் துவிதமாகி,

பிரிவான சுடராகி-சுடர் மூன்றாகிப்,

பேசரிய வெளியாகி வெளியிலேதான்-வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு.

வெட்டவெளி அப்பால்-பின் ஒன்றுமில்லை-**கொங்கணர்**.

தானாகி நின்றதுவே பர சொரூபம்....கோனாகி குருபதம் வெளிதானாச்சு,குருவான பரவெளியைக் குவியம் உற்றே-**கடைப்பிள்ளை சித்தர்.**

அருள் வெளியின் உட்பொருளை ஆராய-மோனக்,

குரு மொழியை அன்றி இல்லை-கோதை எனும் மாங்குயிலே-**சதோகநாதர்.**

முன் தீர்க்கதரிசிகளின் காலத்தில்-தானே ^தீனை செவ்வையாக்கியதாக பண் இசைக்கிறார்-**மாசித்தன் முஹ்யித்தீன்**.

^மார்க்கம்

6

பாவ ^அபானம் அற்று......பரத்தினுள் பொருந்தி,

*சாவ அனுபவம் தன்னிலே-சொக்கி நீ வாழ்வாயே-**ஆதிநாதர்.***

^மூலாதாரம்,குதம்.

*நாதாந்த வெட்ட வெளியில் இருப்பதுவே-நல்லறம்-**கல்லுளிச் சித்தர்.***

*வெட்டவெளி அதன்றி மற்றோர் தெய்வமில்லை-**சிவவாக்கியார்**.*

நாடிக் கொண்டு அம்பைப் பொருத்து-அந்த,

*நாதாந்த வெட்டவெளிக்குள் நிறுத்து-**கஞ்சமலைச் சித்தர்**.*

சுற்றி அலைவதில்லை சூட்சம் சூட்சம்,

*சுழியிலே-(சுக்கான்)முனை இருந்தால் மோட்சம் மோட்சம் -**அகத்தியர பெருமான்.***

மறப்பான மூன்று உடலும் இழந்த முத்தர்,

*மன வெளியாம் பெருவெளியில் **மருவலாலே -சிவானந்த போதம்**.*

ஊமை எழுத்தை அறிய-எட்டோடு ●இரண்டு சேர்த்து எண்ணுவீர்....

*சிவன் ஆனந்தப் பற்றே- பற்று எனப் பற்றினேனே(**வடலூர் வள்ளலார்)**.*

●ا ٥

Himm/Haa/ஹம்

*எட்டிப் பிடித்துக் கொள்-இரண்டெழுத்தை (**கொங்கணச் சித்தர்.**...*

பழக்க வாசியைப் பார்த்துக் கொண்டு வாலைப்,

*பாதத்தைப் போற்றடி- வாலைப் பெண்ணே:**19,89**).*

சோதி தன்னைப் பதினெண் பேரும் ஒளித்து நூலில் பேசி,

சித்து ஞான மர்மம் மிகக் காட்டிடாமல் ஏகி,

ஓதியதன் உண்மை தன்னை யோக ஞானதேகி,

உரைத்தே நித்தம் மந்திரத்தை அனுதினமும் நேசி,

*... *ஆதி மந்திரம் இது* தன்னாலே சித்தர் அனேகம் வீசு,*

*அம்பிகையின் பாதத்து ஆணை! அறைந்திட்டேன் சந்யாசி**(கோரக்கர் நமனாசத் திறவு கோல்).***

பூசித்திரு மூலமுதல் மந்திரத்தைப் போற்றி!,

*புகன்றிடுவேன் லெட்சமுரு ஆவர்த்தி கொல் போற்றி!**(அம்ச பீஜாட்சரம்)**.*

ஆதி அந்தம் வாலை அவள் இருந்த வீடே,

ஆச்சரியம் மெத்த மெத்த அதுதான் பாரு,

சோதி அந்த ***நடுவீடு*** *பீடமாகி....*

பத்து வயதாகும் இந்த ^வாமிதானே...

ஆம் இவளை அறிந்தவர்கள் சித்தர் சித்தர்(கருவூரார் பூசா விதி:1,2).

^பார்வதி

கடை விரித்தேன்-கண்டு கொள்வார் இல்லை,

*மணிக்கதவைத் திறவாயோ? மறைப்பை எல்லாம் நீக்கி**(வள்ளல் பெருமானின் இறுதி வார்த்தைகள்)**.*

ஓயாத இஸ்லாம் வாசி-உயர்மதி தனக்குள் நின்று,

தேயாது ஈமான் கொண்டு -சிந்தையில் கலக்கம் அற்று,

பாயாத கொம்பு ^இரண்டும்-பரிவுடன் இணக்கமானால்,

*அசானும் அவனேயாகும்-அல்லாஹ்வும் அவனேயாகும்-**குணங்குடி மஸ்தான் ஆண்டகை.***

^பாயும் 21600 சுவாசம்/ஸோ @ உள்மூச்சு +ஹம் @ வெளிமூச்சு).

நவிலவே இருபத்து ஓராயிரத்து அறுநூறு சுவாசம்,

*நலமாகப் படிக்குது என்று-சிவன் சொல்லக் கேட்டு**(தன்வந்தரி சித்தர் நிகண்டு 300:4)**.*

ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது-

*அகத்தில் நீ இலையோ? அருணாசலா!**(ரமண மகரிஷி)**.*

*சுத்த வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு **(கடு வெளிச் சித்தர்)**.*

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்,

சகல உயிர் சீவனுக்கும் அதுதான் ஆச்சு,

புத்தியினால் அறிந்தவர்கள் புண்ணியோர்கள்,

பூதவித்தில் **கோடியிலே ஒருவர்** *உண்டு,...*

ஆரப்பா(சுழியில்)நிலை நிற்கப்போறார் ஐயோ!,

ஆச்சரியம்!கோடியிலே ஒருவன்தானே.

***(அகத்தியர்)**.*

*சேர்ந்து இருந்தேன்-சிவமங்கைதன் பங்கனை.....அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே....ஆசை விடவிட ஆனந்தம் ஆமே.....**தான்** பற்றப் பற்ற-தலைப்படும்தானே-**திருமூலர்**.*

ஆகும் பராபரையோடப் பரையவள்....

ஆயிழையாளொடு ஆதிப் பரமிடம்.

(திருமந்திரம்:1224, 1220)

பரை-ஆற்றல்,

பராபரை-பேராற்றல்.

பரமாயப் பராபரையே!(பராபரை மாலை/வீரை அம்பிகாபதி).

பராபரையே!வேதப் பழம்பொருளே!இறைவியே!மெய்ஞ்ஞான வித்தே!மெய்ச்சுடரே!தூய சுடர் மூன்றான சூக்குமமே!பரப்பிரம வித்தையே!**(மீனாட்சியம்மை கலி வெண்பா).**

ஆதி பராபரையே!தற்பரையே!முச்சுடரே!முப்பொருளே!**(சத்தியநாத சித்தர்)**.

ஒரு பாகம் கொண்டு ஆளும் பராபரையே-**சிவசித்தர்:**87.

ஆன்மீகத்தின் முதல் படியில் கால் வைப்பவர்கள் மிக மிக எச்சரிக்கையாக பயணப்படுதல் வேண்டும். .0001° சாய்வாக பாதத்தை நுழைத்தாலும்-இறுதியில் தானாகவே வெளியேற்றும் புராதன எஸ்கலேட்டர் இது.

சித்தர்கள் அனந்தம்பேர் இருப்பினும்-ஒரு சிலர் மட்டுமே மூடலாக இல்லாமல் நெற்றிப் பொட்டில் அடித்தாற் போல் பாடியுள்ளனர்.அவர்களுள்: <u>மச்சரேகை சித்தர்,அபூஸாலிஹ் மணிபிரான், முத்துப்பேட்டை பீர் மஸ்தான்,வடலூர் வள்ளலார் ,சாலை ஆண்டவர்கள்</u>...போன்றவர்கள் முன்னணியில் உள்ளனர்.

மூடலாகப் பாடியவர்களுள்: <u>பீரப்பா-குணங்குடியார்- ஞானியாரப்பா-மோனகுரு - நூஹப்பா-றஸூல்பீவி-திருமூலர்-பரஞ்சோதியார்</u>...

முதலானவர்கள் முதல் பந்தியில்

அணி வகுக்கின்றனர்.எனினும் இவர்களது பாடல்களின் விளக்க உரைகளில்-மூலமும் அசலும் மிகுதி சிதைக்கப்பட்டுள்ளது,என்பதை கவனத்தில் கொள்க!.

குரு தொட்டுக் காட்டாத வித்தை-சுட்டுப் போட்டாலும் வாராது , குருவே-சிவம் எனக் கூறினன் நந்தி**(thirumandiram)**, சற்குரு பாதத்தை நம்பு**(pattinathaar)**,நாகை நாதர் அடிதனைப் பணிவாய் நெஞ்சே!**(menjaanat tangam)**,கிட்டுமோ?? குருவின் பாதம்!!!**(paampaati chiddar)**.

சற்குருநாதர்கள்- யாருக்கும் வலை விரிப்பதுமில்லை, தன்னை வெளிப்படுத்துவதும் இல்லை.பரஞ்சோதியாரை சந்திக்க மகாலிங்கம் & வேதாந்த மகரிஷி குழுவினர் வந்த சமயத்து-அசைவ உணவை உண்பதாக பாவித்து,அவர்களை அண்டவிடாமல் செய்தார்.

தான் ஒழிந்தால் *இங்கு யார் உண்டு? நல்வாழ்வு தருபவனே!வினைகள் அணுகாதவனே! இரு வினைக்கும் எட்டாது இருப்பவனே!**(பீரப்பா நாயகம்/ஞாபு:294,489,497)**.*

என்னையே நான் அறிய-இரு வினையும் ஈடழித்துத்- ***தன்னை அறியத்*** *தலம் எனக்குச் சொன்னாண்டி**(பட்டினத்தார் அடிகள்:21)**.*

கீதையில் வரும்- ***அனன்யம்*** *-என்ற வட மொழி சொல்லிற்கு இரு அர்த்தங்கள் உண்டு:*

1.அன்னியம் அற்ற பக்தி.இறையைத் தவிர உள்ள -அன்னியப் பொருட்களில் மனம் லயிக்காத தன்மை.

*2.இறையும் நாமும் அன்னியர்கள் அன்று என்ற -பேதமற்ற நிலையில்-இறையுடன் ஒன்றுவது.இரண்டற்ற ஒன்றான ஒருமைப்பாடே-அனன்யம் பக்தியாகும்.நதியானது- கடலுடன் கலந்து கூடுவதைப் போன்றது இது.னயம்= நான் இல்லை**(உருது அர்த்தம்)**.*

சித்தர் சொற்படி சித்தாந்தம் *கண்டு,*

தெளிந்து கொள்ளடி வேதாந்தம்-ஞானக்கும்மி.

*உம் நூற்கள்-என்னைச் சுற்றிலும் உள்ளன, "**நான்**" -என்ற நோய்க்கான மருந்து அதில்தான் உள்ளது-**ஸூஃபிக்கவிதை**.*

*மனிதர்கள் உடுத்துவதை உடுத்து,அவர்கள் உண்பதை உண், **'அந்தரங்கத்தில் காததூரம் அவர்களைவிட்டும் விலகிநில்'** -**அபூ அலி தக்காக் வலியுல்லாஹ்**.*

*உண்மையாளன்-ஒரு நாளில் 40முறைகள் மாற்றப்படுகிறான், நயவஞ்சகன்-ஒரே மனநிலையில் 40ஆண்டுகளைக் கடக்கிறான்-**ஜுனைதுல்பகுதாதி ஆண்டகை**.*

*காதலின் அகமியமானது-காதலியான இறையிடம் தனக்குள்ள பங்கை மறந்துவிடுவதாகும்-**அபூ யாகூபுல் ஸூஸி வலி**.*

*காதல் என்பது-பிற நேசங்களை இதயத்திலிருந்து அகற்றுவதாகும்-**முஹம்மத் இப்னுல் ஃபள்ல் வலி**.*

சமீப காலமாக கவர்ச்சியான தோற்றங்களில்- ஞான விளக்க கிரந்தங்கள்/ஆக்கங்கள் பதியப்படுகின்றன. இவர்களில் பலருக்கும் -அகீதா @ கொள்கை சம்பந்தமான விஷயங்களிலும்-குன்குதாத் சம்பந்தமான விடயங்களிலும், ஆர்வமும் ஆரோக்கியமான தெளிவும் இல்லை.

*அனைவரையும் ஒருசேர அரவணைக்கும் முதிர்ச்சியற்ற -இந்த '**கூட்டாஞ்சோறு**' குருநாதர்களின் பார்வை-உங்கள் மீது பதியாமல் காப்பதே-உங்களின் ஆயத்தான நிலையாகும்.*

*இறுதி காலத்தில்-பள்ளிகளில் நேர்வழி இராது,வேத விற்பன்னர்களே-ஆகக் கேடு கெட்டவர்கள்...**(ஹதீஸ்)**.*

قُلْ اِنْ كَانَتْ لَـكُمُ الدَّارُ الْاٰخِرَةُ عِنْدَ اللّٰهِ خَالِصَةً مِّنْ دُوْنِ النَّاسِ فَتَمَنَّوُا الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ

*"இறையிடத்தில் உள்ள மறுமையின் வீடான சுவனம்- உங்களுக்கே சொந்தமானது- மற்ற மனிதர்களுக்குக் கிடையாது,என்று உரிமை கொண்டாடுவதில்-நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், மரணத்தை விரும்புங்கள்**(குர்ஆன்: 2:94)**.*

மரணித்த மனிதனின் தன்மையை கைவரப் பெற்றவர்களே-சித்தர் குழுவினர்.

*சித்தர்கள் என்றால்- ஏதோ ஒரு குறிப்பிட்ட மதத்தில் மட்டும்தான் இருப்பவர்கள் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கும் மடமாந்தர்களே இங்கு அதிகம்.மெய்ப்பொருள் அறிந்து- தேகசித்தி செய்து- யோக சித்தி அடையும் மனிதர்கள் அனைவருமே சித்தர்கள்தான்**(சுடுகாட்டு வெட்டியான்).***

இறைத்தூதர்களாக-இறை நேசர்களாக இருந்தவர்களை- இந்தியாவில் சித்தர்களாக பாவிக்கிறோம்.சித்தர்களையும் சித்தர் நூல்களையும் விளங்கிக் கொள்ளாதவரை -உலகில் உள்ள அத்தனை ரகசியங்களும் ரகசியமே அன்று.

ராமதேவர் என்கிற சித்தர் தமது பாடலில்- தான் குளிகை பூண்டு மக்காவிற்கு சென்றதாகவும்-மாநபியவர்கள் அரவணைத்து ஆதரித்ததாகவும் கூறுகிறார்.அவரே பின்னாளில் யாக்கோபு என அறியப்படுகிறார்.

வைத்துமே பிசுமில்லாஹிர் ரஹ்மான் என்று
வகையான கலிமாவை ஓதி தீரு,
மைத்துமே நாளொன்றுக் கொன்று தானும்
நாடியே முப்போதும் தொழுது போற்று,
பைத்துமே இப்படிக்கு தொழுதாயானால்
பதிவாக நபிமார்போல் இருக்கலாமே,
கைத்துமே களங்கோடு ^செந்தூரங்கள்
கனிவாக பொருளாகும் கண்டுகொள்ளே -**ராமதேவர்**.
^பாஷாணம்.

Hasidism @ பிரபஞ்சத்தில் இறையே வியாபித்துள்ளான் & cleaving to God @ சதா இறையுடன் பிணைந்திருத்தல் என்பதே-யூத மதத்தின் கப்பாலா & ஹசீத் இயக்கத்தினரின் இரு அகப்பரிமாண கோட்பாடுகள்.

கிறிஸ்துவத்தில்- ஜேக்கப் போகிமியர், பாராசல்ஸ் போன்ற பல சித்தர்களும் இருக்கிறார்கள்.

போகரை (போயாங்) என்ற சீன நாட்டவர் என்று கூறுகிறார்கள்.

ரோமானிய நகரை சேர்ந்தவர்தான்-ரோமரிஷி.

பூனைக்கண் சித்தர்-எகிப்து நாட்டைச் சார்ந்தவர்.

மெய்ப்பொருள் அறிந்த சித்தர்கள் - ***தஸர்ருஃபாத்*** *@ பல்லுடல் எடுத்து உலகெங்கும் ரகசியமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.*

இதனால்தான் சங்க கால தமிழர்களுக்கு- மதத்தைப் பற்றிய கவலை இல்லை.

ஏனென்றால் அவர்களுக்கு ***இறைவியே பெரிதாக*** *இருந்தது.கிட்டாத சாகா குருகுலக் கல்வியை கற்பதே -அக்கால இலக்காக இருந்தது.*

என் மதம் என இறுகப் பிடித்துக் கொண்டு - இறையை நழுவ விட்டு விட்டோம்(!?).

எனது விரல்களைக் குதறாதே, யாம் சுட்டும் இடத்தை நோக்கு ***(wisdom of saints/osho)****.*

20பக்க ஹழ்ரத் இத்ரீஸ் ஷாஹ் அவர்களின் முன்னுரையுடனும் +200 எழுதாத பக்கங்களுடனும் வெளிவந்த கிரந்தமே-book of the book.மௌலானா ரூமியின் கரங்களில் தவழ்ந்த இந்த செவ்வியல் மூலநூலின் சாராம்சம் வருமாறு:

8

வார்த்தைகளையும் ஒலிகளையும் இழந்தால் மட்டுமே-வெறுமை என்ற மௌனம் நிகழும்.அதுவே அகத்தூண்டலின் தூய வெட்டவெளியாகும்.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَالَّذِيْنَ هَادُوْا وَالنَّصٰرٰى وَالصّٰبِـِٕيْنَ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

*ஈமான் கொண்டவர்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும் -நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் மீதும்,இறுதி நாளின் மீதும் நம்பிக்கைக் கொண்டு நற்செயல்களைச் செய்கிறார்களோ?-அவர்களது கூலி நிச்சயமாக இறையிடம் இருக்கிறது;அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை;அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்**(குர்ஆன்:2:62 & 5:69)***

*இந்த மறை வசனம் குறிப்பிடும் "**அமலன் ஸாலிஹன்**" @ நற்செயல் எது?என்பது குறித்து-எந்த தப்ஸீரிலும் ஞான கிரந்தங்களிலும் தெளிவான விளக்கம் இல்லை.ஈமான் கொள்ளாதவர்களும்-உய்யும் ஒப்பற்ற வழி இங்கு ஒழிந்துள்ளது.பொருள் அற்ற நிலையில் இருந்த மானிடன்**(19:67, 76:1)**இதனை உணர்வதில்லை.*

*சத்திய இஸ்லாத்தில்-"**குத்பு நாயகம்**" என்ற அநாதி கதாபாத்திரம் வந்ததன் அகமியமும் -எந்த கிரந்தங்களிலும் கோடிட்டுக் காட்டப்படவில்லை, மாசித்தர்களின் பாடல்களைத் தவிர.*

*லா இலாஹ இல்லல்லாஹ்வை அறிந்து கொண்டவனும் சுவனம் நுழைவான்**(நபிமொழி)**.*

உமது தொடர் கசப்புகளுக்குக் காரணம்-எனது சீடரான கிருத்துவ துறவி மீது-தாங்கள் உமிழ்ந்ததே,என தப்ரேஸ் வணிகரிடம்-ஸமா இசையில் நனைந்து கொண்டே மௌலானா ரூமி நாயகம் எச்சரித்த நிகழ்வு நாம் அறிந்ததே.

*மனச்சேட்டையை துறக்கும் கடுமையான பயிற்சியில் ஈடுபடாமல்-தனது சிந்தனா சக்தியால் கிரகிக்க இயலும் என்ற மழுங்கிய கண்ணோட்டம் உடையவனே காட்டுமிராண்டி**(தாந்தா பதவி நாயகம்)**.*

சுபாவநிலை @ மனச்சார்புகளை அடக்க வெல்லாமல் ஆன்மீகத்தில் குதிப்பதால் -எதிர்மறை விளைவுகள் மட்டுமே மிஞ்சும்.

*அக விழிப்படைந்த ஞானியரின் அறிவைப் பற்றிய புரிதல்-வேதியர்களுக்கு வழங்கப்படவில்லை-**கஸ்ஸாலி இமாம்**.*

*இமாம் ஹுசைன் அலைஹிஸ்ஸலாம் அவர்களின்-மூன்று மீன்களின் கதையும்,இதனையே உணர்த்துகிறது**(tales of the dervishes)**.*

நடுவணையைப் பார்த்தவனே சித்தனாகும்...குருமுறையை ஆசாரங்கள் நேசித்தார் வல்லவர்கள் சித்தரானார்**(காகபுசண்டர்:93)**.*

எண்ணையும் எழுத்தையும் படைத்தது-இறை,அதனை ஒளிர்ந்திடச் செய்பவன்-குரு.இதனை அவதானிக்கத் தெரியாதவர்களே-ஃகுத்றத்தை இறையுடன் முடிச்சு போடுகிறார்கள்.

வேதத்தில் சொன்ன விதிப்படியே   *யான் அடங்க,*   *போதத்தைத் தந்தருள்வாய் பூரணனே!- **முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் புலவர்**.*

قادر

****வல்லான்**** -எனும் பெயர் உமக்குளதல்லாது,*

மற்றவர் தமக்கும் உளதோ??? முஹ்யித்தீனே!---குணங்குடியார்.

9

<u>சித்தன் போக்கு சிவன் போக்கு:2</u>

இந்த தொடரின் முற்பகுதியை எழுதிய சமயத்து-பலரும் அதிமுக்கிய சித்தர் பாடல்களை மட்டும் அடையாளப்படுத்தும்படி பணித்தார்கள்.

ஏற்கனவே உச்சி முகந்து மேற்கோள் காட்டிய பாடல்களைத் தவிர்த்து-இதர சித்தர்களும் சிலாகிக்கும் சீர் பாடல்களில் சிலதிற்கு மாத்திரம் சிரமாலை இடுவோம்.

(வெளி+உள் சுவாசமான) ஹம்+ஸம்/ஸோஹம் @ சுவாசம்/அஜபா ஒலிகள் @ இட/சந்திர+ பிங்/வல/சூரிய+ சுழுமுனை சுவாசக்கலை குறித்து- ***பூரண ஆனந்தரின் சிவயோக சாரத்தில்*** மிகுதி குறிப்புகள் உள்ளன.ஆசனங்கள்,அப்பியாசங்கள்,ஆசன திசை,ஆசன வஸ்திரம்,உணவு வகை- பழக்கம்,இரேசக பூரக லக்ஷண @ மூன்று நாடிகளை திரிகரண சுத்தி செய்யும்/வசப்படுத்தும் முறைகளும் இதில் வரையப்பட்டுள்ளன.

மனம் ஒடுங்கினவனுக்கு இது தேவையன்று.மற்றவர்கட்டு-வாயுவை நிறுத்தும் இந்த கும்பக கட்டுப்பாடு பயனளிக்கும்.

இயற்கையின் மூல வடிவமான கருவின் உருவ அமைப்பே- ஓங்காரம் /ஓம்/ஹூ/பிரணவத்தின் - வரி வடிவமாகும்.**هو**

இதில் இருந்தே-பிற வரி வடிவங்கள் துளிர்த்தன.

எகிப்திய பிரமிடுகளில் எழுதப்பட்டிருந்த சங்கேத எழுத்துக்களின் அர்த்தத்தை-இந்த ரீதியில்தான் முதலில் கண்டு பிடித்தார்கள்-தின்னூனுல் மிஸ்ரி மஹான் அவர்கள்.

சிவ சிவ என்னச்-சிவகதிதானே(**திருமந்திரம்**).

நமச்சிவாயாலே-ஞானமும் கல்வியும்(**அப்பர்**).

يا من سواك

யாமன் ஸிவாக(**பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சி:440**).

சிவாயநம போலவே- சிவாயம்நம என்றொரு மந்திரம் உண்டு. சிவன்/ ஈசன்+ சிவை/ ஈசுவரி @ இரண்டு சிவர்களை வணங்கல் எனப் பொருள்.

தூலமாகிய பருஉடம்பை விட்டு-நினைவெனும் நுண்ணுடலாகிய சூட்சமத்திற்குள் புகுதுவதே-ராஜயோகம் என்பர் சித்தர் பெருமக்கள்.

அல்லாஹ் றஸூல் முஹ்யித்தீன் @ முச்சுடரில் லயமாதலையே-ராஜயோகம்/நீடுபதம் என மாசித்தர்கள் அழைப்பர்.

இதனை உய்த்துணர்வதற்குரிய சித்தர் பாடல்கள் அனந்தம். எனினும் சிக்கலான முடிச்சுகளின் மேல் முடிச்சுகள்-மேற்படி பாடல்களில் தொடர்வதால் அவதானிப்பது வெகு சிரமம்.சான்றாக கடுவெளிச் சித்தரின் ஒரு பாடலைக் காண்போம்:

°நந்தவனத்தில் ஓர் •ஆண்டி,
○நாலாறு மாதமாய்க் ●குயவனை வேண்டிக்,
கொண்டு வந்தாண்டி ஒரு □தோண்டி-அதைக்,
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்தாண்டி.
°பூலோகம்
•பற்றற்ற பரதேசியான ஆன்மா
○பத்து
●பரமன்
□மண்பானையான உடம்பு.
^ஈரைந்து மாதமாய் வைத்த சூளை...அரைக்காசுக்கு ஆகாது...எரி மண்ணிற்கு இரையாகும்....
[3]ஆதார முதலிலே பாம்பதாக-ஆனந்த வயலிலே படம் விரித்தே,
*[2]உகார முதலிலே ஒத்து ஒடுங்கி-ஓடி [1]அகாரத்தின் நாவை நீட்டி...**(பாம்பாட்டிச் சித்தர்)**.*
^10

இதே ரீதியில் மெருகேறிய-அகப்பேய் சித்தரின் பாடல்களையும் காண்போம்:

விந்து நாதமடி அகப்பேய்-மெய்யாக வந்ததடி....

*[1]அகாரம் ...எழுந்ததடி...[2]உகாரம் கூடி...உருவாகி...[3]மகாரம் மாயை...^மலமது...*சிகார மூலமடி ...*

இந்த வித்தைகள் எல்லாம்...எம் இறை அல்லலடி-அந்த விதம் வேறே...ஆராய்ந்து காணாயோ?.

[1,2,3]=هاهوهي

அகங்காரம்-புத்தி-மனம் @ உகார அகார மகாரம்.

^பந்தம், பற்று, தாது, மூளை.

*சிவ.

[1]ஹா [2]ஹூ [3]ஹீ [4]ஹய்யுன்-என்பது முஹ்யித்தீன் மாசித்தனின் உட்சாடணங்களில் ஒன்று.

[1]=அறியவேண்டும்

[2]=மெய்ப்பொருள்**(raazi imam)**

[3]=ஓதுக*(alfiyya)*

[4]=நித்திய ஜீவிதன்.

லாஹா அல்லாஹ்-என்பது முதல் கலீபா அவர்களின் விர்துகளில் ஒன்று**(buhari)**. ஹா அன்தும் உலாயிக...என துவங்கும் மறை வசனம் ஒன்றும் உள்ளது.

ஆனந்த அனுபூதி நிலையைப் புறக்கோலங்களாலும் பொய்ம்மை சடங்குகளாலும் அடையப்பெற இயலாது என்பதை, சித்தர்களின் கீழ்வரும் பாடல்களில் காணலாம்:

கள்ளப் பெருமக்கள் காண்பர் கொலோ என்று,

உள்ளத்தின் உள்ளே ஒளிந்திருந்து ஆருளே? **(திருமந்திரம்)**.

உட்கலந்த ஜோதியை...,

என்னிலே இருந்தது ஒன்றை...,

நீயலாது வேறிலை...,

எனக்குள் நீ -உனக்குள் நான் இருக்குமாறு....**(சிவவாக்கியார்)**.

அன்பெனும் மலர் தூவி-பரமானந்த தேவன் அடியனை மேவி...,

மெய்க்குரு சொல் கடவாதே...,

வேதாந்த வெட்டவெளிதனைத் தேறு...**(கடுவெளிச் சித்தர்)**.

10

சீரொருவர் தெரியாமல் மதங்கள் பேசித்,

*திருவான உச்சியிலே சேரா மற்றான் **(காகபுசுண்டர்:4)**.*

மெய்க்குருவை பணிந்து நின்று ஆடு பாம்பே...,

*நீடுபதம் நமக்கு என்றும் சொந்தம் என்றே ஆடு பாம்பே**(பாம்பாட்டிச் சித்தர்)**.*

சித்தர்கள் போற்றிய வாலைப் பெண்ணாள்...,

எங்கும் நிறைந்தவள் வாலைப் பெண்ணாம்...,

ஆதி வாலைப்பெண்...,

நந்திநீசர் பொற்பதம் காப்பாமே...,

பார்த்துக்கொள் உன் உடலுக்குள்ளே...,

விந்தையாய் வாலையை பூசிக்க-முன்னாளில் விட்ட குறை வேணும்...,

முதல் தெய்வம் நீ...வாலைப்பெண்ணே...,

தாய்வீடு கண்டவன் ஞானியடி...,

ஓம் என்ற அட்சரம்தானும் உண்டு-அதற்குள் ^ஊமை எழுத்தும் இருக்குதடி...,

^هم

ஹூம் எனும் ஒலி.

*(**கொங்கணர் வாலைச் சித்தரின்-வாலைக்கும்மி**).*

*பின்னையும் கன்னி-என மறை பேசும் ஆனந்த ரூப மயிலே-**தாயுமான சுவாமிகள்.***

பெண் ஆசைதனை அடுக்காமல்-வழி பேணிப் பாரடி ஞானப்பெண்ணே...,

^சந்தைப் பேட்டையிலே-எதிரிதான் வந்து தட்டுகிறான்...,

முச்சுடர் வட்டமே சக்கரமாம்-அது மூக்கு நுனியிலே சுழுமுனையாம்-அச்சுடர் வட்டத்துள் இருந்தவனே குரு-ஆனந்த நந்தியாம் ஞானப்பெண்ணே!...,

°நந்தி இருந்தது வன்னி வட்டம்- அதில் நாட்டம் புருவமத்தியான திட்டம்...,

*@பீடம் இருப்பது ₹ மையத்திலே-பலிபீடம் இருப்பதும் ****குய்யத்திலே***...,

குதிரை கட்டிய லாயத்திலே-மனக்கோட்டையிலே சந்தைப் பேட்டையிலே...,

சுகபந்தம் இருக்குது நெஞ்சுக்குள்ளே-வீம்பை அடக்கி உயர்ந்தக்கால்-பரி வேடிக்கை பார்க்கலாம்...,

எங்கள் குரு சட்டை மாமுனி...,

பூரண ●கும்பமுனி...,

*"****மச்சமுனி****" தீட்சையில் செப்பின...,*

~உப்பை அறிந்தவனே ***(இரச)****வாதி-சகத்து உப்பை ஒழித்தவனே யோகி...,*

உப்பை விடுவதும் ஆசையடி-அன்னம் ஒரு பொழுது உண்பதும் ஆசையடி-

செப்பன் உண்ணாத மனோன்மணி ***(வாலைத்)****தேவனைச்-*

சேர்ந்து கும்மியடியுங்கடி...,

சமய பேதமும் ஆசையடி...[4]மமதை அற்று இருக்கின்ற [5]மமதையை வாழ்த்தி...,

தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி [6]வத்தே-

சாத்திரப் பொத்தலை மூடுங்கடி...,

ஆறு ஆதாரமும் தொல்லையடி-அதற்கு அப்பாலே ஒன்றும் இல்லையடி...,

[7]சொல்லினும் [8]கல்லினும் நில்லாதே-பிரம சோதியை ஆதியைத் தூ(ய) வெளியை-

வல்லவத் [9]தற்பிரகாச மவுனத்தை...,

(ஞானச் சித்தர் மதுரை வாலைச்சாமியின் ஞானக்கும்மி)*.*

^புருவ நடு மையம்/வன்னி சுழுமுனைச் சுடர்/சந்திர சூர்யர் கூடும் தலமான அக்கினி முச்சந்தி.

●அகத்தியர்

@யோகநிலை

₹ நடுநாடி

**குறியிடம்.*

~முப்பு

4.கர்வம்

5.தன்னிலை,தனிமை.

6.வஸ்து,பரம்பொருள்.

7.பாடல்கள்

8.சிலைகள்

9.சுய வெளியான மோனவெளி.

தத்=அது.

°م

அசுரர்கள்-தேவர்கள் என்பன-உடலில் உருவாகும் சக்தி உருவகங்கள் மாத்திரமே என்பர் சித்தர்கள்.

*குரு=வெளிச்சம்,தொட்டு உணர்த்துகிறவன். *மெய்குரு + #ஞானகுரு என இருவர் உளர்.*

**உடல்.*

#ஒளி.

*குரு இருப்பதும் நெஞ்சத்துள்ளே **(மாசித்தன்)**.*

*கேளாத மறை ஓசையை-கீதக்கண்ணாடியில் கேட்டு நின்றேனே **(திருமூலர்)**.*

*எனது நேசனின் இதயமே-யான் இருக்கும் அரியாசனம்**(ஹதீஸ் குத்ஸி)**.*

*இதனால்தான் -அதாவுல்லாஹ் இஸ்கந்தரி நாயகத்திடம்-அவர்கள் சேகரித்த 20000நூற்களையும், கோர்வை செய்த 300 கிரந்தங்களையும் - **அலிய்யுல் ஃகவ்வாஸ் ஆண்டகை அவர்கள்**,தீயிலிடச் சொன்னார்கள்.*

போகரின் மாணவரான-சங்கம் அழிய சாபமிட்ட சங்ககால இடைக்கடார் சித்தரிடம்-திருமாலின் அவதாரங்களில் நனிசிறந்தது எது? என கேட்டதற்கு,அவரது நுட்பமான பதில் இதுதான்:

ஏழை-இடையன்-இளிச்சவாயன்.

அனைத்து தீர்க்கதரிசிகளின் அடிப்படை சார்புகளும்-ஆடு மேய்க்கும் ஆயனின் குணங்களில் கொழுகுவதை-ஹதீஸின் வெளிச்சத்தில்

அவதானிக்கிறோம்.பைந்தமிழில் எளிய சந்தத்தில் உளம் பூரித்துப் பாடும் இவரது பாடல் குறிப்புகளை -தொடர்ந்து காண்போம்:

தொல்லைப் பிறவியின் தொந்தமுற்று அறவே,

சோம்பல் அற்று தவம் செய்யாகைகால்...,

ஆரண ***மூல(கோல)த்தை*** அன்புடனே...

பற்றற நின்றதைப் பற்றி அன்பாய்...,

சீரார் சிக்கியுள்ளார் தெள்ளமுதைத் செந்தேனைப்-பாராதி வான்பொருளை...,

கண்ணுள் கருமணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப்-பெண்ணுருவப் பாதியனைப் பேசரிய முப்பொருளை...

பற்றே-பிறப்பு உண்டாக்கும் தாண்டவக்கோனே...

அதைப் பற்றாது அறுத்து விடு...

ஆறு ஆதார தெய்வங்களை நாடு,

அவர்க்கும் மேலான "ஆதியைத்" தேடு,

கூறான வட்ட வானத்தில் 'கூடு'-

கோசம் ஐந்தும் கண்டு -குன்று ஏறி ஆடு....

பெண் ஆசைக் கொண்டு பேணித் திரிந்தக்கால்-

விண் ஆசை வைக்க விதி இலையே கன்மனமே...

எப்பொருளும் கனவு என்றே தும்பீபற...

தொல்லைப் பிறவி தொலைக்கார்க்கு முக்திதான் இல்லை என்று-

ஊதுகுழல் கோனே...**(idaikadaar)**

^முக்காய மாடுகளை முன்னங்கட்டு கோனே.

^பரு+நுண்+காரண-உடல்.

கடல் போன்ற சித்தர் பாடல்களில்-எதனைத் தொடுவது?எதனை விடுவது? என்பதே திகைப்பாக உள்ளது.அவர்களது அபூர்வ உருவகங்களும் குழூக்குறியீடுகளும் -அருட்பிரசாதமாக மலைக்க வைக்கின்றன.

^பத்தாவும் தானும் பதியோடு இருப்பர்க்கு-

உத்தாரம் ஏதுக்கடி? -**குதம்பைச் சித்தர்.**

(^10நாடிகள் ஒடுங்கும் இடத்தில் பர்த்தாவாகிய இறையுடன்).

சிவன் (மீது)

இச்சைக் கொண்டு அவ்வழி ஏறி மீளாதே...

*சிவம் அன்றி வேறே வேண்டாதே **(கடுவெளிச் சித்தர்)**.*

*தான் அவன் ஆனபின்-யாரை நினைப்பது?-என்பது திருமந்திர சாரம்.தாதி மனம் நீர்க்குடத்தான்-ரீதியில் மெய்ப்பொருளை மட்டும் துலாவும் கலையில் தேர்ச்சி பெறல் வேண்டும்.அந்த வரிசையில்-கண்டவர்கள் விண்டிடாத *அகப்பேய் சித்தரின் பாடல்களை* அடுத்து நோக்குவோம்:*

சாத்திரமும் சூத்திரமும்...சங்கர்ப்பம் ஆனதெல்லாம்-பார்த்திடலாகாதே...பாழ்பலன் கண்டாலே...,

^மூலம் உண்டானால் ...முக்தியும் உண்டாமே...,

ஒதி உணர்ந்தாலும் ...ஒன்றும்தான் இல்லையடி...,

(ஐம்புல)அஞ்சையும் உண்ணாதே...ஆசையும் வேண்டாதே...,

இந்த விதங்கள் எல்லாம் அகப்பேய்-எம் இறை அல்லவடி-அந்த விதம் வேறே..,

₹ எத்தனை காலமும்தான் ...யோகம் இருந்தால் என்? முத்தனும் ஆவாயோ?...,

#கலைகள் ஏதுக்கடி?...கண்டார் நகையாரோ?...,

*என்ன படித்தாலும்...எம் உரை ஆகாதே!...சொன்னது கேட்பாயே- ***சும்மா இருந்துவிடு** ...ஒன்றையும் நாடாதே...,*

நாலு மறை காணா ...நாதனை- யார் காண்பர்?-நாலு மறை முடிவில் நற்குரு பாதமடி...,

மந்திரங்கள் இல்லையடி ...சமயம் அழிந்ததடி...,

என்ன படித்தால் என்? ...ஏதுதான் செய்தால் என்? சொன்ன விதங்கள் எல்லாம் ...@சுட்டதுகண்டாயே...,

மோட்சம் வேண்டார்கள்...முத்தியும் வேண்டார்கள்-தீட்சை வேண்டார்கள்...

●சின்மயமானவர்கள்...,

*வேதம் ஒதாதே...மெய் கண்டோம் (என) எண்ணாதே...**(agappeyi chittar)**.*

^சூனியவெளி.

₹ எண் ஆயிரத்து ஆண்டு யோகம் இருக்கினும்-கண்ணார் அமுதினைக் கண்டு அறிவார் இல்லை(**திருமந்திரம்).**

#கறபனைகள்.

@பொசுப்புகிறவை.

●பரஞானமயம்.

நாற்பது வருட காலம் தனித்திருந்து பெற வேண்டிய ஆதி கருத்தியல்களை - எளிமையாகப் பாடிச் சென்ற *பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள்* ,நமக்கு வரப்பிரசாதமே,சகட யோகமே:

பொய் மதங்கள் போதனை செய்-பொய் குருக்களைப்...மெய்க்குருவின் பாதம் போற்றி...,

ஆதி வத்துவை அறிவிக்கும்-எங்கள் உயிரான குருவை...,

அறுபத்துநாலு கலை யாவும் அறிந்தோம்-அதற்கும் மேல் ஒரு கலையானது அறிந்தோம்...,

அலையாமல் அகத்தினை-அத்தன் மேல் வைத்தோர் அழியார்...,

சலக்குளிக்குள்ளே நாற்றம் சார்ந்த சேறு என்றும்தான் அறிந்து தள்ளினோம்...,

கன்மவினை கொண்ட காயம்- ^கண்டனை பெறும்...,

சுத்த வெளிக்குள்-ஒரு கூத்தனைக் கண்டேன்,தாக்கிய சிரசின் மேல் தைத்த பாதம்-சற்குருவின் பாதம் என்று...,

காடு மலை நதி பதி காசி ? கால் கடுக்க ஓடில் பலன் காணலாகுமோ?...,

தன்னை அறியாதவரே-தன்னைக் காட்டுவார்...,

பின்னை ஒரு கடவுளைப் பேண நினையார்-பேரொளியைப் பேணுவார்...,

சமய பேதம் பலவான சாதி பேதங்கள்-சகத்தோர்க்கே அல்லாது சாதுக்களுக்கோ?....

அண்ட பிண்டம் தந்த எங்கள் ஆதிதேவனை....,

வேதம் கடந்த மெய்ப்பொருளை....,

நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்...,

கெட்ட நாற்றமுள்ள யோனிக் கேணியில் வீழ்ந்தார் கெடுவர்...,

குரு என்னும் ஆசானின் உரு எடுத்து...,

சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்...,

சுழுமுனைக்கு உள்ளேயே சுகித்து இருப்போம்...,

சதுர் வேதம் -ஆறுவகை சாத்திரம்-பல தந்திரம்-புராணங்களைச் சாற்றும் ஆகமம்-விதம் விதம் ஆனதான வேறு நூல்களும்-வீணான நூல்களே என்று ஆடு பாம்பே!....

^கண்டனம்

***(paampaati chittar)**.*

முச்சுடரில் பரிணமித்த முத்து நபிகளார் மற்றும் முஹ்யித்தீனின் அந்தரங்கத்தை அறிய வேண்டுமெனில் -சித்தர்களின் சங்கீதத்திற்கு இணையான கட்டியம் வேறெங்குமே இல்லை.ஆம்!திருகுர்ஆனின் உள்ரங்க விரிவுரைதான்-சித்தர் பாடல்கள்!.

சிவனுக்கு குரு ஆனோன் கந்தன்,ஓம் மந்திரத்தின் அர்த்தத்தை சிவனுக்கு விளக்கியோன்-எனபன போன்ற கருத்தாடல்கள்(திருச்செந்தூர் அகவல்/திருச்சிற்றம்பல நாடிகள்) -பாடலாசிரியரின் உச்சகட்ட அன்பின்

வெளிப்பாடேயன்றி யதார்த்தம் அதுவன்று. எனினும் இந்தப் பாடல்களில் வரும் அத்தனை குணங்களும்-நூரே முஹம்மதிய்யாவிற்கு கச்சிதமாகப் பொருந்தும்.

பரம் பரம் சுடரே போற்றி...

பரம் சுடர் ஒளியே போற்றி....

^தணப்பு அற அடியார்க்கு இன்பம் தரும் ஒரு தருவே போற்றி...குணப்பெரும் குன்றே போற்றி....குமர சற்குருவே போற்றி...சிவன் பெரும் பயனே போற்றி...முழுமுதல் பரமே போற்றி ...கண் உறு மணியே போற்றி...

(வள்ளலாரின்' முருகன் போற்றித் திருவிருத்தம்).

^நீங்குதல் .

பார்க்க: குமரகுருபரரின்-கந்தர் கலிவெண்பா .

பதிணெண்பேரும் பார்த்திட்டு(பிரம்மமுனி)

பாவென்ற பஞ்சகர்த்தவர் பாதம் போற்றி-

பண்பான பதினெண்பேர் பாதம் போற்றி(அகத்தியர்).

சித்தர் பதினெண்மர் செய்கையில் தோன்றாத-

அத்தன் அருளும் புசுண்டான் யான்(காகபுசுண்டர்).

பதினெண் கணனும் ஏத்தவும் படுமே(புறநானூறு).

பதிணெண்பேர் சித்தொன்று எய்த(ச.ரேகை:100)

கோளான பதிணெண்பேர் சித்தர் தாமும்-கொற்றவனே நவகோடி சித்தர்தாமும்- பானான "நாற்பத்தெண்பேர்கள்" அப்பா-போகர்.

பார்த்திடவே-எனத்தொடங்கும் பாடலில்: இராமதேவர் +தன்வந்தரி+வான்மீகி +போதகுரு +பாம்பாட்டி+குதம்பை என அறுவரின் பெயர்கள் புதிதாக உள்ளன. இதற்குப் பதிலாக: கூனர்+கண்ணன்+சண்டிகேசர் +சிவாய +பிண்ணாக்கீசர்+காலாங்கி-பெயர்கள் விடுபட்டுள்ளன.

நந்தி அகத்தியர்(குறுமுனி) போகர் கோரக்கர் கைலாசநாதர் சட்டைமுனி திருமூலர் கூன்கண்ணர் கொங்கணர் மச்சமுனி வாசமுனி கூர்மமுனி கமலமுனி இடைக்காடர் பிண்ணாக்கீசர் சுந்தரானந்தர் உரோமரிஷி பிரம்மமுனி @18 கணம் சித்தர்கள் (அபிதான சிந்தாமணி). இதில் கைலாசநாதர்+வாசமுனி +கூர்மமுனி +உரோமரிஷி+பிரம்மமுனி @ ஐவர் புதிதாக இடம்பெற்றுள்ளனர். பதஞ்சலி+

சண்டிகேசர்+சிவாய+காலாங்கி பெயர்கள் விடுபட்டுள்ளன. இருவரை-கூன்கண்ணர் என ஒருவராக பாடப்பட்டுள்ளது.பிரம்மமுனிப் பட்டம்-கமலமுனி & போகருக்கும் உண்டு.

கருவூரார்+புலஸ்தியர்+ராமதேவர்+குதம்பை +புலிப்பாணி+அகப்பேய்-சித்தர்கள்- பல பட்டியல்களில் உலா வருகின்றனர்.ஆனால்

நந்தி +பதஞ்சலி+கூனர் +கண்ணர் +சண்டிகேசர்+ காலங்கி-சித்தர்களின் பெயர்களை சில பட்டியலில் காண இயலவில்லை.

பழம்பாடல் ஒன்றில்:கருவூரார்+புலஸ்தியர்+குதம்பை+புலிப்பாணி+அகப்பேய்+பாம்பாட்டி+தேரையர் பெயர்கள் கூடுதலாக உள்ளன.

மாறாக: -பதஞ்சலி-கோரக்கர்-கமலமுனி-

சண்டிகேசர்-சிவாய-மச்ச-சுந்தரானந்தர் பெயர்கள் விடுபட்டுள்ளன.

மூலர் [1]ராம [2]கும்ப இடைக்காடர் [3]தன்வந்திரி [4]வான்மீகர் கமல போகர் மச்ச கொங்கணர் பதஞ்சலி நந்தி சட்டை சுந்திராநந்தர் [5]குதம்பை [6]கருவூரார் கோரக்கர் [7]பாம்பாட்டி-தஞ்சை சரஸ்வதி மகால் படத்தின்படியானது.

[1]-[7]புதியவர்கள்.

[8]-[14]அகத்தியர் கூனர் கண்ணர் சண்டிகேசர் சிவாய பிண்ணாக்கீசர் காலாங்கி(omission).

காலாங்கி கலச கமல யூகி கருணா போக சட்டை பதஞ்சலி கோரக்கர் (பவ)நந்தீசர் புலிபாணி அழுகணி பாம்பாட்டி இடைக்காடர் வசிஷ்டர் கவுசிகர் பிரம்ம வியாசர்(ஊர்வசி வைத்திய சிட்கா).

இதில் 5பெயர்கள் மட்டுமே இதர வைத்திய நூல்களில் உள்ளனர்:காலாங்கி போக சட்டை நந்தி புலிப்பாணி.

தஸர்ருஃபாத் @ பல்லுடல் எடுத்திருப்பதால்-இந்த மயக்கங்கள் வருதல் இயல்பே.நவகோடி சித்தர்க்கும்-கூடுபாய்தலும் சூட்சும தேகம் எடுத்தலும் சாத்தியமுடைத்தே.

நந்தி-மூலர்-காலாங்கி-போகர்-கொங்கணர்-என்பதே கைலாய ஞானவழி பரம்பரைத் தொடர்(சட்டைமுனி:9)

சிவன்-உமை-நந்தீசர்-அசுவினி-விசுவின்-தன்வந்திரி-அகத்தியர்-புலத்தியர்-தேரையர்-யூகிமுனி ...என்பதே ஸில்ஸிலா @ சித்தர் குரு பரம்பரைத் தொடர் என்கிறது,யூகி முனிவரின் வாத காவியம்.

நெடுநாள் உயிர் வாழ்ந்தமையால்-புலத்தி +தேரை+ யூகி @ மூவருக்குமே அகத்தியர் குருவாக பரிணமித்துள்ளார் என்பதனை போகரின் பாடல்கள் வாயிலாக அறிய முடிகிறது.தேரையரும் இராமதேவரும் ஒருவரே.

சமாதியில் இருந்த சம்பார முனிவரே-மகாசித்தர் என அறியப்படும் யூகிமுனியின் குருநாதர் என போகரின் பாடலொன்று கூறுகிறது.

24

பதினெண் பேரைச் செம்மையுடன் காண்பதற்கு மூலம் கேளு(நி.போதம்).

ஜமதக்கினி முனி & திறணாக்கிய முனிவருக்கும் குரு-யூகிமுனியே.கரூரில் சமாதி கொண்ட கருவூரார்-

போகரின் சீடராகும் (அகஸ்தியர்12000:452).

உதித்தெழுந்த மூன்றெழுத்தை அறியார் ஐயோ!(கருவூரார் பூஜாவிதி:17).

திரமுள முனிவர் யூகி செய்த காவியங்கள் ரத்தினம்....தரமதாய் சித்தரோடு சார்ந்துமே வந்தார் நேரே(கருவூரார்).

ஊனமில்(லா) ஒன்பது கோடி யுகத்தினுள்- ஞானப்பால் ஊட்டி நாதனை அர்ச்சித்து நானும் இருந்தேன்(தமிழகத்தில் சித்தர் மரபை தோற்றுவித்த திருமூலர்).

மூன்றுக்கும் பேர் ஏது? முக்கண் என்பர்-

மூவர் என்பார் மூலம் என்பார் மூர்த்தி என்பார்-

மூன்றுக்கும் பொருள் அறிந்தால் அவனே ஆதி-

முப்பாகும் இதுக்கு ஒப்பு முடிவு ஏமாப்பு.....நந்தீசர் பொற்பாதம் காப்பாமே! (கொங்கணவர்).

தானான சூட்சமது என்னவென்றால்?-

தன்மையுடன் போ(கு)ம் வாய்வு "சிவம்" அதாகும்-

ஊனான உட்புகுதல் "சக்தி"யாகும் (அகத்தியர் சௌமிய சாகரம்).

பொங்குகின்ற "காமம்" என்ன? சிவத்தின் கூறு!...மாறியதோர் திரிப்புடை ~எட்டு எழுத்தை கேளாய்!(சட்டைமுனி ஞானம்:2,5)

~yaamansivaaka

சிவாயநம என்னும் திரு எழுத்து அஞ்சாலே- □அவாயம் அற நின்றாடுவான்(வள்ளலார்).

□பூர்த்தியாகாத, வெறுப்பு.

சாம்பலாய் காமத்தின் வழியே சென்றால்- காலூன்றும் "சிவயோகம்" கருத்துபோமே (போகரிஷி).

கருவூரார்-கோரக்கர்-தேரையர்-கொங்கணர்-புலிப்பாணி...

போன்றோர் போகரின் சீடர்கள் என -அவர்களது பாடல்கள் மூலம் உய்த்துணர முடிகிறது.

பழனியில் சமாதி கொண்ட காலாங்கியின் சீடரான -உலகம் சுற்றிய "போகர்" - ரோமாபுரி சென்று இம்மானுவேல்+ஈசரவேல் சமாதிகளை தரிசித்ததுடன், இறுதி நபிகளாரையும் அவர்தம் சீடர்களையும் யாகோபு சித்தரையும் சந்தித்துள்ளார். காலாங்கி கமலர் ...போன்ற சித்தர்களையும் & வியாசர் கணபதி, சட்டை, கைலாச....

போன்ற முனிவர்களின் சமாதியையும் & சப்தரிஷிகளையும் தரிசித்துள்ளார் (pogar 7000).

அனந்தசயனத்தில் சமாதி கொண்ட "அகத்தியரே" -"கும்பமுனி" என்ற பெயரில் கும்பகோணத்தில் சமாதி ஏகியவர் (நிஜாநந்த போதம்).

அழகர் மலையில் சமாதி கொண்ட புலத்தியரின் சீடரான யாகோபு சித்தரையே- இராமதேவர் என வழுத்துவர்(போகர்7000).

கோரக்கர்-சிவவாக்கியாரை சந்தித்துள்ளார்.

ஸெய்யத் அலி வாலை குரு மஸ்தான் அவர்களது (ஞான ஒப்பாரியின்) 36 பாடல்களையே-அழுகணி சித்தரின் பாடல்களாக அச்சிடப்பட்டுள்ளது.கருவூரார் பூஜாவிதிப் பாடல்களும் -வாலை குரு மஸ்தான் அவர்கள் இயற்றியதே (vide : tamil soofi songs-part'4).

காமன் கணை எனக்கு கனலாக வேகுதடி-

மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்-

காமன் கணைகள் எல்லாம் என் கண்ணம்மா-

கண் விழிக்க வேகவோ?(அழுகணி சித்தர்).

சித்தர்களில் யான் கபிலமுனியாக உள்ளேன்-பகவத்கீதை.

(கபிலம்=உபபுராணம் 18ல் ஒன்று,

கபிலன்=அறிஞன்,வள்ளுவரின் சகோதரர் பெயர்).

அறியாத பாவிக்கு ஞானம் ஏது? ஆறுமுகம் சொன்னதொரு (சுப்பிரமணியர் ஞானம் @) நூலைப் பாரு(காகபுசுண்டர்).

முச்சுடரான விளக்கினுள்ளே மூல...வாலை இவளைவிட வேறில்லை...வாலை இருக்கிறதும் பரிசுத்த சிவனுக்குள்...வாலையைப் பூசிக்க -சித்தரானார்...வாலைக்கும்மிக்கு மேலான பாடல் இல்லை...அவள் நாயகன் அல்ல-சிவம் பெரிது(கொங்கணர்).

ஆரப்பா?அவளை விட்டு ஞானம் கண்டோர்?....மகாரமல்லோ?....

மருவி நின்ற இடமல்லோ?....விந்து(வை) வென்ற குரு பதத்தில்-தேக்கப்பா மவுனத்தைத் ^தாரையாமே...உன்னிப்பாராமல் அலைந்து கெட்டார் அனந்த கோடி...பெண்ணால் சிக்கி மகத்தான ரிஷிகள் சித்தர் கோடி-கெட்டார்...நரகம் என்ற பெண் மேலே ஆசை விட்டு-நாதாந்த வேதாந்த சித்தாந்தம் பார்...வேதாந்த சிரோன்மணியைப் >பெறுதி மைந்தா!..."கொங்கணர்தாம்" சிலம்பொலியைக் கூடினரே....ஓங்கி நின்ற "காக(புசண்டர்")....மூலருக்கு

-காலாங்கிக்கு-போகரும்-சுந்தரானந்தன்...எனை ஆண்ட தட்சிணாமூர்த்தி மலர் பணிந்தே ஞானமது நூறும் சொன்னேன்(சட்டைமுனிச் சித்தன்)

^நெறி

>பெறுக,அடைக.

انــا الجيــلي محــي الدين اسمي

واعـلامي علـى رؤس الجـــبالي

وعبـــدالقادر المشهـور اسمـــي
وجـــدي صاحـب العين الكمـال

نبي هاشمـي مكي حجـــــــازي
هوجـــــدي به نلـــت المواليـــ
25

ஒளி வளர் (அக) விளக்கே!...சித்தத்துள் தித்திக்கும் தேனே!...தற்பரம் பொருளே!...காலமே!...புவன போகமே!...சிவனே!...புணருமா புணரே!...குரு நீ என்னும் குணக்குன்றே!...அம்பலத்து அமுதே!(திரு மாளிகைத் தேவரின்-திருவிசைப்பா:1-45).

ஏக நாயகன்...போக நாயகன்...எம் சிவனை...எம் குரு மணியை...கமலம் மூன்றினுள் தோன்றி எழும் செழுஞ்சுடரை...பொன்னெடும் திண்தோள் புணர நினைக்குமே...தேனே!அமுதே!என் சித்தமே!சிவலோக நாயகச் செல்வமே!...என் மெல்லியல் இவளே(சேந்தனாரின்-திருவிசைப்பா:1-79).

பவளமே மகுடம்-பவளமே திருவாய்-பவளமே திருவுடம்பு...பவளமே/குமுதமே திருவாய்...மெய்யரே!மையரே!மயானரே!பொய்யரே!...அக உயிர்க்கு அமுதே!பூரணா!...அகத்து அமர்ந்து உறையும் ^பன்னகா பரணா!....பாவியேன் ஆவியுள் புகுந்த தென்னகா!...•அம்பரா!அனலா! °அனிலமே!...வம்பளிந்த கனியே!என் மருந்தே!...ஒருவனாம் ○இருவா!முக்கணா!...அற்புதத் தெய்வம் இதனின் மற்று உண்டோ?...உள் கலந்து எழும் பரஞ்சோதி!...உள்ளம் கோயில் கொண்டு அருளும் சைவனே!...~சம்புவே!அணுவே!தாணுவே!சிவனே!சங்கரா!...சித்தனே!செங்கணா!

(கருவூர்த் தேவரின்-திருவிசைப்பா:1-182)

^சிவன்.

°காற்று

•வானமானவனே

○சிவ+சக்தி

~பேரின்பத்தை முதலில் துய்ப்பவன்

திருமாலே.

சைவ சமயக் கடவுளான சிவனின் அருவ வடிவமாக-17 வகையான லிங்கம் வழிபடப்படுகிறது. இவற்றில் மானுட லிங்கத்தில் மட்டும் 90வகைகள் இருப்பதாக-மகுடாகமம் என்ற ஆகமம் பேசுகிறது.இவற்றுள்- தானாகத் தோன்றிய சுயம்புலிங்கமே ஏற்றமும் உயர்வுடையது.

சதாசிவமூர்த்தி தோற்றத்தில் சிவன் உருவாக்கிய பஞ்சமுக தோற்ற லிங்கங்களில்-சிவ சதாக்கியமே உயர்வுடைத்து.

ஆனால் திருமந்திரத்தில் -அண்ட/பிண்ட/சதாசிவ/ஆத்ம/ஞான/சிவ-லிங்கம் என அறுவகைகள் குறித்தேப் பாடப்பட்டுள்ளது.(உலக/மனித/சிவசக்தி இணைந்த/உயிர்/சொரூப/பொது).

இறை மருவத் தோற்றமே-லிங்கத்தின் யதார்த்த அமைப்பு,என்பது ஸூஃபியாக்களின் அனுமானம்.

பெண் தன்மை உடைய குணடலினி சக்தியானது-பூமியின் நடு மையத்திலிருந்து மூலாதாரம் வழியாக மேல் நோக்கி ஏறி-ஆறு ஆதாரத் தாமரைகளில் சேரும் போது-ஆண் தன்மையான ஜீவசக்தி துளிர்க்கும்.இவ்விரு சக்திகளின் சேர்க்கையே-லிங்க வடிவமாகும்.

மாறா மலக்கு(ழி)ந் தன் மேல் ஒரு விரல்- கூறா இலிங்கத்தின் கீழே குறிக் கொண்மின்-ஆறா உடம்பிடை *அண்ணலும் அங்குளன்* (திருமந்திரம்).

இந்திய ஆதிக்குடிகளிடமிருந்து-லிங்க வழிபாட்டை பிறர் கடனாகப் பெற்றனர்-பிரெஞ்சு அறிஞர் ஜுன் பிரிஸினுஸ்கி.

சித்தத்தினுள்ளே- சிவலிங்கம் காப்பு(வி.அகவல்). சீவன்-சிவலிங்கம்(திருமந்திரம்).என்றன் நாவுதான் சிவலிங்கம் ஆச்சே(சிவானந்த போதம்).

விழுந்தது லிங்கம்-விரிந்தது யோனி(நிஜானந்த போதம்).

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே(வள்ளலார்).

ஓரெழுத்து லிங்கமாய்-ஓதும் அட்சரத்துளே (சிவவாக்கியார்:377).

ஆதி மகா-லிங்கம் கண்டு(கல்லுளி:39)

நாத லிங்கரை நினைப்பாய்(நெஞ்சறி விளக்கம்).

ஆட்டமுடன் பதினெட்டு சித்தர் எல்லாம்....குவலயத்தில் லிங்கமதாய் முளைத்தார் பாரே!(போகர் ஜனனசாகரம்:313).

ஆதியில் பிறந்த சடம் அழியாமல்தான்(சூக்கும உடல் எடுத்து) ....சஞ்சார சமாதி செய்து(அகத்தியர் அமுத கலை ஞானம்:1060).

சித்தர்கள் -தங்களது உருவத்தை லிங்க வடிவமாக்கி-மூச்சடக்கி மூதுலகில் நெடுங்காலம் இருந்ததாக சித்த புராணங்கள் வெளிரங்கத்தில் பகர்கின்றன.

ஆனால் சித்தர் பாடல்களின் அகமியமே-மனோன்மணியான வாலைக்குமரி துதிதான். கல்வத் என்ற தனிமைத் தவத்திலும் ஷுஹூத் என்ற வாலைக் கலவியே நிகழ்கிறது.ஏன்?சுவனத்திலும்கூட இதே மனோநிலையிலேயே மாசித்தர்கள் சஞ்சரிப்பர்.

சமண பௌத்த மதங்களில் சித்தர்களை-சாரணர்/சஞ்சரிப்பவர் என வழுத்துவர்.

உன்னைச் சூழ்ந்தவை-உனது விருப்பமின்றி இயல்பாகவே அமைவன.அவற்றை ஆக்கிரமிக்கலாமே ஒழிய-அந்த பந்தத்தில் சிக்கிக்கொள்ளல் ஆகாது-ஸ்ரீரமணர்.

தென்னாடுடைய சிவனே போற்றி-என திருவாசகம் வழுத்துவதும்-தென்கோடி குருவான பீரான பீரீன் கலீபாவைத்தான்.

**சுரூப மணியாரின் வர்க்கம்...~தெட்சிணாமூர்த்தி வர்க்கம்...+சச்சிதானத்தில் நின்ற ஆசான்-பேரான பிள்ளைகட்கு •மணியும் ஈந்து-^பெரும்பாதை ●மகாரம் என்றோ பேசினாரே(கயிலாயக் கம்பளிச் சட்டைமுனி பின்ஞானம்:81).*

**நல்லுரு*

~சிவன்

+இறை,ஞானமூலம்,பிரமம்

•தீட்சை

^ஸிறாதல் முஸ்தகீம்

●முஹம்மதிய்யா

பெருந்தவம் "பீர்முஹம்மது" பேச எண்ணுறவோர்க்கு எல்லாம்-திரு விருந்ததனில் கூட்டு(றோமீ.மாலை:1128).

சிந்தை தெளிந்தார்-சிவமாயினரே!(திருமந்திரம்)

கரைகண்டு- சித்த பித்தம் தெளிந்து- சிவசிந்தனையில் வாழும்-சித்தருக்கு ஈடாக ஏதுமில்லை, என்பதை பின்வரும் பாடல்கள் சான்றளிக்கின்றன:

"நடுவு" நின்றான் நல்ல கார்முகில் வண்ணன்....நடுவு நின்றாரோடு நானும் நின்றேனே(சுந்தரர் @திருமூலர்:320).

என் மகனே! என் மேலே ஆணை ஆணை-

புல்லர் என்ற புல்லரிடம் (இந்)நூல் காட்டாதே(அகத்தியர்)

அகத்தியர் பெயரில் 37பெருமக்கள் இலக்கியத்தில் வலம் வருகின்றனர்.4யுகம் 48நாட்கள் வாழ்ந்த அகத்திய பெருமான்-திருவனந்தபுரம் அனந்தபத்மநாப or கும்பகோணம் கும்பேசுவரர் கோவிலில் சமாதி கொண்டார்.

திருமூலரின் சீடரான சாம்புவந்தர் @ திருவள்ளுவரின் காலம் இற்றைக்கு 4077வருடங்களுக்கு முற்பட்டது என-சில பாடல் வரிகளிலிருந்து அனுமானிக்கலாம்(சந்திர ரேகை).

இசைந்த "திருமூலனார்" உரைத்த வண்ணம்-இனியதொரு ஞானவெட்டி இயம்பினேனே.....மதுரத் தமிழ் ஓதும் "அகத்தியரைப்" போற்றி(ஞா.வெ).

இச்சை-பிறப்பினை எய்விக்கும் என்றது-நிச்சயம் ஆகுமடி....ஆசை அறுத்தோர்க்கே ஆனந்தம் உண்டு...தேக்கிய ஆசையை சீ!-என்று ஒறுத்தோரே பாக்கியவான்களடி...ஆசை துறந்து விடுவரேல்-பிறவிகள் இல்லையடி(குதம்பைச் சித்தர்).

என்னதான் கற்றால் என்? எப்பொருளும் பெற்றால் என்?-

உன்னை அறியாதார் உய்வரோ ? பூரணமே!(பட்டினத்தார்).

ஈசன் நிலை அறியாருக்கு இந்தத் ~துருத்தி-

எரி மண்ணிற்கு இரையாம் என்று ஆடு பாம்பே!(பாம்பாட்டிச் சித்தர்:67)

~உடல்

ஆதியாம் ^சிவசக்திப் புதல்வர் போற்றி!....சொற் பெரிய பொதிகைமுனி பாதம் போற்றி!(தேரையர்).

^சப்தரிஷி தலைவன்

கலைகள் ஏதுக்கடி?அகப்பேய்!கண்டார் நகையாரோ?....மோட்சம் வேண்டார்கள்-முத்தியும் வேண்டார்கள்-தீட்சை வேண்டார்கள்-சின்மயமானவர்கள்(திருவையாற்றில் சமாதி கொண்ட-அகப்பேய்ச் சித்தர்).

சொரூப முக்திக்கு அடையாளம்...சுடர் போலக் காணுமடா தூலதேகம்(புசுண்ட முனி புதல்வர்-உரோமரிஷி).

நோக்குவது எங்கென்றால்-குரு பதத்தை மைந்தா!...தானான சற்குருவே கிட்டாவிட்டால் மைந்தா!தயவான என்னூலை-குரு போன்று எண்ணு-கோனான "ஆதிபொருள் சற்குருவாச்சு" (பிருகுமுனி).

ஆதி சிவமான குரு....பிரமமுனி முன்பு சாற்றினார் எந்தனுக்கு....பெற்றபிள்ளை என்றதுவும் விளையாட்டே...சதுர்வேத ஆகம நூல் ஆய்வதுவும் விளையாட்டே....சேய்போல் ஆகுமே-திரும்பப் பெண்டீர் ஆகுமே(விளையாட்டுச் சித்தர்).

காட்டில் இருந்தாலும் கனத் தவம் செய்தாலும்- காட்டில் குரு இல்லாமல் ஞானம்மா!-கண்டறிதல் ஆகாதே....

சம்சாரம் என்றும் ^சாகரமாம் என்றும்-இம்சை அடைவோர்கள் -ஞானம்மா-இருந்து பயன் ஆவதென்ன?....(புண்ணாக்குச் சித்தர்).

^சமுத்திரம்

நதி கடக்க ஓடம் அல்லால்-^விடயத்தான் (பயிற்சி) சாதனங்கள் வீணாம் என்றே(காகபுசுண்டர்)

^உலக,காரண,அறியப்பட்ட.

கருவான "கருக்குருவும்" எனக்கே ஈந்தாள்(இராமதேவர்).

பூரணமாய் நிறைந்த பராபரனே போற்றி(தன்வந்திரி).

சிவ சித்தர் >கணக்கிரு பேசனே(பாம்பன் சுவாமிகள்).

>அருள்.

செத்த சவம் போன்றிருந்து-நித்தியத் தவம் செய்யாது-சித்து விளையாடல் மோசமே (சித்திரமுத்து அடிகள்).

பேசரிய முப்பொருளை.....பற்றே-பிறப்புண்டாக்கும் தாண்டவக்கோனே-அதை பற்றாது அறுத்துவிடு.....முத்திக்கு வித்தானோன்-மூலப் பொருளானோன்-சத்திக்கு உறவானோன்-தன்னைத் துதிப்பாயே....மூவர் ^முதலை...தனியான மூலம் என்னும் பராபரத்தை....எட்டிரண்டு அறிந்தோர்க்கு இடர் இல்லை குயிலே...சாற்றரிய ~நைட்டிகரே-தற்பரத்தைச் சார்வார்...இந்திரியத்து <இரயங்களை இறுக்கிவிடு கோனே-என்றும் இல்லை என்றே மரணம்-குழல் எடுத்து ஊது கோனே(இடைக்காடர்).

^முதலானவர்

~பிரமாச்சாரியம்.

<உணவு.

தன்வந்திரிக்கு உற்ற பேரன்(நான்)...சித்தியால் எட்டிரண்டும் என்ற பேரு-

சிறப்பான ரவி மதியாம் ஊணிப்பாரு....அகத்தியர்...புலத்தியர்...தேரர்...யூகி....(யூகி முனி).

அரியும் அல்ல-அரனும் அல்ல-அப்புறத்தில் அப்புறம்....."ஆதியான மூவரும்" ...நாலு வேதம் ஓதுநீர்-ஞானபதம் அறிகிலீர்....சேமமாக ஓதினும்-சிவனை நீர் அறிகிலீர்....கண்ட கோவில் தெய்வம் என்று கை எடுப்பதில்லையே....உற்ற நூல்கள் உம்முளே...சிவாயம் என்ற அட்சரம் சிவன் இருக்கும் அட்சரம்....பிரமஞானம் உம்முளே....வேதமும் சிறந்த ஆகமங்களும்---பொட்டையாய் முடிந்ததே-பிரானை யான் அறிந்தபின்....சித்து இலாத போது-சிவன் இல்லை...ஐயன் வந்திங்கு என் உளம் புகுந்து கோயில் கொண்டபின்-வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பது இல்லையே....புண்டரீகம் அன்றுளே- (இறைமையை)புணருகின்ற புண்ணியர்....புண்டரீகம் மத்தியில் -உதித்தெழுந்த சோதியை...ஏக போகமாகியே இநுவரும் ஒருவராய் போகமும் புணர்ச்சியும் பொருந்துமாறது எங்கனே?....ஆதியான மூவரில்-அமர்ந்திருந்த வாயுவும் ஆதி....தேடு(ம்) நாலு வேதமும் ---ஆடு(ம்) ^வாழின் ஒழி அலாது...எம்பிரானும் நானுமாய் இருந்ததே சிவாயமே.(சிவவாக்கியார்).

^வெளி

*قصدت الكافي،وجدت الكافي، لكل كافي، كفافل كافي، و لله الحمد *

எம்பிரான் மெள்ள வந்து என் உட்புகுந்து-மெய்த்தவம் புரிந்தபின்-வள்ளல் என்ன?வள்ளலுக்கு வண்ணம் என்ன?வண்ணமே!(297) யானும் நீயும் கலந்தது என்ன தன்மை?ஈசனே(323) "ஹா ஹீ ஹூ" என்றே உரைத்த அட்சரத்தின் ஆனந்தம்(332) (காமக்)கடல் எழும்பும் சூட்சமும் கண்டறிந்தோன்-ஞானியே!(338) குரு இருந்த வழியில் நின்று-உறவும் >உறியும் ஆனதே(367) ~மூவெழுத்து- மூவராய் முளைத்தெழுந்த சோதியை(377 ,400, 413, 689) அம்மை அப்பன்-நின்னை அன்றி யாருமில்லை(428) நீர் ×வன்னியை மருவியே வருந்திடீர்(440) வினைக்கு இசைந்தபோதெலாம் உரு கலந்து நின்றபோது-நீயும் நானும் ஒன்றலோ? (467) (காமம்)அடங்குகின்றது எவ்விடம்? (என) அறிந்து பூசை செய்யுமே! ❤️ (490) உத்தமத்துள் ஆயசோதி-உணரும் "போகமாகுமே" (491) உச்சியின் நேர் உண்ணாவின் மேல் -ஒரு விளக்கு எரியுதாம்(700) •தொண்ணூற்றாறு பேரைக் கூட்டி உறவாடியும்(706) ஆக்கினைக் கொண்டு மோகம் அற்று வாழ்பவர்-நெற்றியில் சதாசிவனும் மனோன்மணியும் நிற்பதே(707) இருப்பது *மெய் எண்ணிடே(736) அரிதிலும் அரிது- ஞானவீடு அடைவது ஒன்றுமே(756) நான்மறைக்கு எட்டாததாய்---சிவாயமே(758) ஏழைகட்கும் ●ஆதுலர் பரங்கட்கும் பெருத்தல் அன்னதானம் செய்ய-[1]பேருலகு அடைவரே(741) கூழையாகிலும்-அவர்குலை குளிரவே ஈபவர்களும் --- தழைத்துச் சந்தம் இருப்பரே(743) ஞானிகட்கு-ஆவி வேறும் ஈசன் அன்றி யாருமில்லை(765) சூக்கும தூலத்தைக் காண-சூட்சமமும் அறிந்திடே(807) முத்தரின் மனமது-மோனம் ஏறி நின்றிடும்(826) செத்தர் போலும் இருப்பர்-[2]சிகண்டி போலும் இருப்பர்-சுத்தமுள்ள ஞானியர்கள் சொல்ல "பேரின்பத்திலே"(827) முத்தி பெற வேண்டுமாகின்- மோகத்தினை விட்டிடு...சித்தி பெற்ற வேண்டுமாகின்- செல்வத்தினை விட்டிடே(830)-

(சிவவாக்கியார்)

>உறிஞ்சல்,உள்வாங்கல்.

~அஉம م ؤ ه

×நெருப்பு

•96தத்துவம்

*சத்

●தரித்திரர்

[1]திருமந்திரம்:1857

[2]சேவல்,பேடுமயில்

°புண்டரீக பாவபுண்ய கீர்த்தியும் செவி மடுத்து-உண்டு நும் <உறுவினைத் துயருள் நீங்கி உய்ம்மினோ?(617) பற்று அறுத்த சிந்தையோடு (நின் பற்றில்) நின்று பாசம் விட்டவர்க்கு-எத்திறத்தும் இன்பம் இங்கும் அங்கும் எங்கும் ஆகுமே!(632) நின் பற்று அலால்-ஒரு பற்றும் அற்றது உற்றிலேன் உரைக்கிலேன்(637) புனித நின் இலங்கு பாதம் அன்றி-மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே(640) "கூடும்" ஆசை அல்லது ஒன்று கொள்வனோ?(658) -(வைணவ) ~ *திருமழிசை ஆழ்வார்* பாசுரம்120 :551-670/திருச்சந்த விருத்தம்.

°அமலன் ஸாலிஹன்

<மிகுதி,வருவினைகள்.

~மயிலை பேயாழ்வாரின் தொடர்பினால்-ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த -சிவவாக்கியார் திருமழிசை பக்திசாரராக மாறினார்,என்பது நெடிய வரலாறு.

அத்தகு செல்வத் தவமதித்து அருளிய-

சித்தமார் "சிவவாக்கிய" தேவரும்(பட்டினத்தார்).

உண்டியை உண்வது-உடலோ?உயிரோ?...நன்றே-இன்றே-

இன்னே செய்யவும் வேண்டும்...வசிட்டரும்-சத்தியரும்-பராசரரும்-வியாசரும்-

மாதவராகி மயங்கினரன்றோ?....கபிலனும் நானே....எந்நாளாயினும் இரப்பவர்க்கு இட்டு(வள்ளுவ சகோதரர்- கபிலர் அகவல்:1-132).

ஆதி கபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே(பத்திரகிரியார்).

வட்ட (ஆக்ஞை)வழிக்குள்ளே- மருவும் சதாசிவத்தை.....உச்சிக்கு இடை நடுவே ஓங்கும் குருபதத்தை-

நிச்சயித்துக் கொண்டிருந்து நேர்வது இனி எக்காலம்?(பத்திரகிரியார்).

சிவம் அன்றி வேறே வேண்டாதே...எங்கும் சுயபிரகாசன்(காஞ்சியில் சமாதி கொண்ட கடுவெளிச் சித்தர்).

சிவன் இருந்து விளையாடும் தெருவைப் பாரு-

மொழிவதற்கு இந்நூலைவிட வேறொன்று இல்லை...சொல்லாத மவுன "முதல் கருவும்" சொன்னோம்....உற்பனமாய்ப் பார்த்தவர்கள் சித்தர்தாமே!(போகரின் சீடரான கருவூரார்).

அரிதான சிவநாமம் விள்ளு-சிவன் அடியார்கள் பணிவிடை அன்பாகக் கொள்ளு....தத்துவக் குப்பைகள் ஏது? சித்தி சாத்திரமான சடங்குகள் ஏது?பக்தியுடன் மறவாது குருபாதத்தைக் கண்டால் தெரியும் அப்போது(கஞ்சமலைச் சித்தர்).

ஆதிப் பிர்மம் தெரிய வேணும் -அதை அன்புடன் சாத்திரத்தால் தெரிய வேணும்...பந்தம் கடந்தவனே-சித்தன்...

தன்னையே தான் அறிந்தோன் சித்தன்...பாசிப்பயிறு அன்னம் ஊட்டு...சுந்தரர்...மச்சரும்...

தேசிகன்...திருமூலர்....சட்டமுனி...ரோமர்....ஞானம் போதிக்கும் குரு கண்டு அடுத்து நீ கொள்ளு-சாலோக பதவியது கிட்டும்-வேறே சம்பத்து வேண்டுமோ?...போகரும்...

கல்லுளிச்சித்தன் என்றே...என்னைத்தானே எவரும் சுட்டி அழைத்திடில்-

🌎"நேரில் வருவேனே" ...பார்த்துத் தெளிந்தவனே-சித்தன்...

நேர்த்தியாய் என் நூல் கற்றோனே-அவன் நீடூழி காலம் வரை யோகம் பெற்றானே!(கல்லுளிச் சித்தர்).

வாய்மையால் பொய்யா மனத்தினால் மாசற்ற-

தூய்மையாம் ஈசன் அருள்(ஔவைக்குறள்-103).

சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க-வெற்றம்பலம் தேடி விட்டோமே(பட்டினத்தடிகள்).

ஊமை என்ற (பேசா)எழுத்துடைய உருவம் காணும்(கம்பளிச் சட்டை முனி).

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்....எவர்? எவர்க்கு? உதவினர்? (சிவபோகசாரம்:43).

مرادي يا مرادي يا مرادي مرادي شيخ محي الدين مرادي..

13409/28

இச்சையைக் களைந்து சினம் நீக்கி மனமது செம்மையானால்-அனுபூதி நிலை சித்திக்கும் என்ற பேருண்மையை வலியுறுத்தும் பாடல்களைத் தொடர்ந்து காண்போம்:

^நிறைமொழிமாந்தர் #ஆணையின் கிளந்த-@மறைமொழிதானே %மந்திரம் என்ப(தொல்காப்பியம்)

^ஷெய்குல்/இன்ஸான் காமில்/சம்பூர்ண மனிதர்

#கடடளை

@மறைந்த, வேத.

%மந்=மனசு.

திரம்=உறுதி, திறன்.

*ஒளி வளர் (அக)விளக்கே!சித்தத்துள் தித்திக்கும் தேனே!(1) தூய நல் சோதியுள் சோதி நீ! அம்பலக்கூத்தா!(2) தொண்டனேன் புணருமா புணரே(8) குணக்குன்றே(23) சிவனே!என் சேமத்துணையே!(30) (போகரின் சீடரான- *திரு மாளிகைத் தேவர்*).*

என் உயிர்க்கு அமுதினை...போக நாயகனை(46) கொண்டலம் கண்டத்து எம் குருமணியை(48)

*(ஜெயந்தன் @ *சேந்தனார்).*

**சேந்தனாரும் திருமாளிகைச்தேவரும் ஒருவரே-என்ற கருத்தும் உள.*

*பழையராம் தொண்டர்க்கு எளியரே! [3]மிண்டர்க்கு அரியரே!(94) சிந்தையால் நினையின்-சிந்தையும் காணேன்(110) அக உயிர்க்கு அமுதே!பூரணா!(112) பாவியேன் ஆவியுள் புகுந்தது என்ன காரணம்?(114) அம்பரா!அனலா![4]அனிலமே! [5]இந்துவே!(120) "கருவூர்" அமுதுறழ் தீந்தமிழ் மாலை - "சீலமாய்ப் பாடும்" அடியவரெல்லாம் சிவபதம் குறுகி [6]நின்றாரே(121,132) [7]அம்பரா!அம்பரத்து அளிக்கும் [8]கனகமே!சைவனே!(157) சித்தனே! [9]செங்கணா! அத்தனே! முத்தனே!முதல்வனே!(160) (போகரின் சீடர்- *கருவூர்த் தேவர்*).*

[3]*அண்ட, நெருங்க.*

[4]*காற்று*

[5]*சந்திரன்*

[6]*நிற்பாரே-நிச்சயமாக*

[7]*வானவா*

[8]*இன்பமே, பொன்னே*

[9]*நெருப்புக்கண்.*

"சங்கரனை"-சடையானை -புண்ணியனை-காப்பானை-

*எப்போதும் ஓவாது நெஞ்சே உரை(6) (*காரைக்கால் அம்மையார்*).*

"சங்கரனுக்கு" அன்பு தருபவனே! தாமரைக்குள்,

[10]*அங்கரனுக்கு ஆதாரமானவனே!(ஞானப்புகழ்ச்சியில் *பீரப்பா* :610).*

[10]*ஆதியில் பிறந்த 7 ரட்சிதாக்களின் தலைவர்.*

வேண்டலும் இலனே-வெறுத்தலும் இலனே---கிடையாச் செல்வம் <கிடைத்தலானே(36) ஆரணம் நான்கிற்கும் அப்பால் அவன்--அத்தனைக்கும் காரணன்- நடுவாய் நிறைந்த பூரணன்-->அந்தக்கரணம் கடந்த கருப்பொருளே!(3) கீழ்மையில் தொடர்ந்து கிடந்த என் சிந்தைப் பாழ் அறை-உனக்கு "பள்ளி அறை"

ஆக்கி(4) அஞ்செழுத்து நவிலும் தந்திரம் பயின்றதும் இலனே(7) நாட்டியத்தோகை ஈட்டம் அங்கு அணைதலின்- "அகத்தியன்" மன்னும் மகத்துவம் சிவணிலின்(~13)எங்கணும் நிறைந்த எம் குருநாதா(22) பெரும்புகழ் காளி விரும்பும் "சங்கரனே" (25) புல்லியக் கலவி-புதிய தேன் நுகரும்(28) ஆறு சமயங்கள் ஒன்று ஒன்றோடு °ஒவ்வாது உரைத்தாலும்-என்றும் ஒருத்தனையே நோக்குவார்(17)புரிவுடை வனமாய் புணர்ந்தோய் போற்றி! தீபம் ஆகிய சிவனே போற்றி!(10)

சுவர்க்கத்து இருந்தனை-நரகில் கிடந்தனை....சிவ பெரும் போக இன்பத்தை...திருச்சிற்றம்பலத்து ஒளிரும் சிவனை-1(கோயில் திரு அகவல்) சும்மா இருக்க சுகமும் உண்டே....கொடுக்க சிவன் உண்டு நெஞ்சே-நமக்கு குறைவு இல்லையே....பசித்தோர் முகம் பார்...சற்குரு பாதத்தை நம்பும்-பொம்மல் ஆட்டம் என்றே இரு...தெய்வமே! உன் செயலே என்று உணரப்பெற்றேன்...

மங்கையரைத் தாய் போல் கருதி...பூசைகள்^சர்ப்பனையே...தூய அருந்தவர் பால் போயாகிலும்-உண்மையைத் தெரிந்தாய் இல்லை...அடியார் உறவும்...(பெண்)மானார் விழியைக் கடந்து ஏறி வந்தனன்...முத்தர் மனம் இருக்கும் மோனத்தே...வாதமும் சமய பேதமும் கடந்த மனோலய இன்ப சாகரமே

(பட்டினத்து அடிகளார்)

~திருக்கழுமலை மும்மணிக்கோவையின் 13-30 ஆம் கண்ணிகள் இடைச்செருகல்கள்.

<கிட்டியதால்

>மனம் புத்தி சித்தம் அகங்காரம்

°பிணங்கி

^வஞ்சனையே

*மற்றவர்கள் எத்தனை இருக்கினும்- என் கொடிய *வல்வினை* அகற்ற வசமோ? முஹ்யித்தீனே!(குணங்குடியார்)*

*(முருகன்)கால் பட்டு அழிந்தது இங்கு-என் தலை மேல் அயன் *கையெழுத்தே*(அருணகிரியார்).*

வினையைப் பிடித்துப் பிசைவர்கள்-சென்னியில் வைத்த சிவன் அருளாலே(திருமூலர்).

(சிவன்) நின்றாடு மழ(லை) <களிற்றை நினைவாரே- வினை இலரே(தொல்காப்பியம்)

<நடனம்.

அகரமாகிய எண்ணத்தை சிவனாகவும்-உகரமாகிய செயலை சக்தியாகவும்- *ம் மகரமாகிய பாசத்தை உயிர்* என்றும் பிரிப்பர் ,அத்வைதிகள்.

நான் உங்களது ஆன்மாவின் தந்தையாவேன்(நபிமொழி).

இதன் ரகசியார்த்தத்தை -மறுமையில் பரிந்துரை @ ஷஃபாஅத்தின்போதே தெளிவாக உட்கொள்ள இயலும்.

பொருளாய் உருவாய் ~நால்வகை பிறப்புகளும் உண்மை-எழுவகை தோற்றங்களும்,

குருவாய் நபி இறஸூல்தனையே -கொள்கைப் பெரியவன் குறிப்பது கேள்(றோசுமீஸாக்கு மாலை:11)

~யோனி

>இறை சத்தி பாசம் எழில் மாயை-

ஆவியுற நிற்கும் ஓங்காரத்துள்(திருவருட்பயன்).

>சிவம்.

அஹ்மதில் *மீமை* ச்சேர்த்து அஹ்மதாய் வந்தாய் நீயும்

(ஷுஅபுத்தீன் மாலை)-என்பதில் வரும் மீம் எனும் பிரணவத்திற்கு-முஹம்மது என்ற பதத்தை வைணவர்களும் & முஹ்யித்தீன் என்ற பதத்தை சைவர்களும் தருகின்றனர்.

அ/ஹ -என்ற எழுத்தை சந்திர/இடைநாடியாகவும்-

உ/ஹூ-என்ற எழுத்தை சூரிய/பிங்கலை நாடியாகவும்-

ம/ஹீ -என்ற எழுத்தை ஞான/சுழுமுனை நாடியாகவும்,ஆக 3மண்டலங்களாக சித்தர்கள் பகுப்பர்.

13409/29

❤️ صلوا عليه وسلموا تسليماً ❤️

சித்தர்களின் இறையனுபவம்@ mysticism ஒன்றாக இருந்ததாகவே பலர் நம்புகின்றனர்.சித்தர்கள் வெளியிடும் ஞானச் செம்பொருளில் ஒற்றுமை காணப்படினும்-அவரவரது உள்புரிதலை அனேகர் மறைத்துள்ளனர்.

குண்டலினியில் -மூச்சுப்பயிற்சியில்-அரவு ஆடுதலில்...அமுதம் அருந்துபவர்கள் மிகுதம் இருக்க-இது அனைத்துமே ஆரம்ப நிலையில் உள்ளவர்க்கானது,எனக்கூறி கடந்து செல்கிறார்கள் -மீக்குயர்ந்த சித்தர்கள்.காரணம்:இவர்கள் குறிப்பிட்டதொரு ஞானத்தளத்தில் லயித்து தங்கிவிடுவதுதான். மெய்ப்பொருள் புதிது புதிதாக -மாறுதலின்றி பிறள்கிறது(குர்ஆன்).

ஆதி மனிதருக்கு காட்டப்பட்ட அவரது பிச்சளங்களில்-படிம ஏற்ற இறக்கங்கள் சமைந்திருந்ததைக் காண்கிறோம் (baihaki,talaayilun nubuwwa).

சித்தன் =முழுதுணர்வு அறிவன்(நச்சினார்க்கினியர்)=

மூவகைக் காலமும் நெறியின் ஆற்றியவன்(தொல்காப்பியம்)=

எதிர்காலம் உணர்த்துகிற கணியன்(இளம் பூரணர்) ~வாழ்நர் •அலமரல் தீர-வெம்மை தாங்கும் அவிர்சடை முனிவர்(புறநானூறு).

~மக்கள்

•துன்பம்

கோடாயுதத்தால் கொடு வினை களைந்தே (வி.அகவல்)

பூவினில் (சு)கந்தம் பொருந்தியவாறு போல்-

சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது(திருமூலர்).

*ஆயிரம் நாமம் கொண்ட-யாருக்கும் எட்டாத அரும்பொருள் தனிச்சுடர் ஆதித்தனுக்கு- *ஆதிகுரு* என்றதொரு பெயர் உண்டு(திருமந்திரம்).*

கற்ற கலையால்தான் நிலைதான் காணுமோ?....கற்ற அறிவால் உனை நான் கண்டவன் போல் கூத்து ஆடில்-குற்றம் என்று என் நெஞ்சே கொதிக்கும் பராபரமே!(தாயுமானவர்).

...வணங்கினும்- ^ஊனினை நீக்கி உணர்பவர்க்கு அல்லாது-

தேனமர் பூங்கழல் சேர ஒண்ணாதே(திருமந்திரம்)

^பற்று,உடல்,கொழுப்பு,மாமிசம்.

"பட்டினத்தார்" சாட்சி பகுத்தறிந்த இந்நூலைத்-

தொட்டவருக்கும் உண்டாம் சுகம்(3) சிவானந்த திடம் உறுவார்தாமே சிவம்(4) சிவப் பேரானந்தம் பெருக-பேசும் இந்நூல்(6) "மாணிக்கச் சுவாமிகளை" எம் உளத்தில் தொழுதல் செய்வாம்(7) முத்தர்களும் ஓதி வைத்த நூல் அதனை ஆராய முனைந்திடாமல்....மாய பந்தமான இந்தக் காயம்தானும் வல்லமையோ?....முத்தி அடைந்தவர்கள் சிந்தை மகிழ்ந்து ஓதும் சிவநூலை- உந்தி உந்திப் பார்த்து அறி நீ!....அகச் சமயமாகின்ற "சிவசமயத்து" இச்சைக்கே அகப்பட்டால்-நீ மிகப்பெரிதாம்....

*குருவைப் பணிந்து பூரணத்தில் குலாவும் அடியார் சகந்தனிலே *மருவப்* பொருந்தி வாழ்ந்தாலும்-மாசற்று இருப்பார் வல்லவரே!...."குருபரனைச் சிவம்"என்று எண்ணும் துணிவதனால்-*

தொந்தம் அறுத்து சிவானந்தச் சோதி அதுவாகிச் சுகிப்பாரே.... துய்ய குருநாதனுக்கே அடிமையாகி....பேதைக் குணம் பெண்ணுக்கு உண்டு...சற்குரு மலரடி---திருவடி கதி எனப் பண்புடன் பணிவாயே....உடல் பொருளும் ஆவியும் சற்குருநாதற்கே-உண்மையுடன் <உதகத்தால் தாரை வார்த்து...சீவனே நீயாகும்- அறிவும் நீயாம்-சிவன்தானே நீயாம்...சீவனே சிற்றம்பலப் பொருளதாகும்....இப்படியே மருவிப் பாராய்....சுகத்தைக் காட்டும் சுத்தனே!சித்தனே!....மங்களமாய்த் தீட்சைதனைப் பெற்று....

"பழம்பொருளைக்" கைக்கொண்டு பிழைத்துக் கொள்ளே....பந்தம் அறுத்து பின்பு குருவைத் தேடிப்-பரமாகி வாழ்ந்தவர்கள் உண்டோ?...எண்ணிலாத் தவங்கள் யாகங்கள் செயினும்--வரும் பலன் ஏது? --மெய்ப்பொருளைக் கண்ட அடியவர் தமக்கு இங்கு உண்ணலாம்- அமுது அளித்தவன் அடையும் பலன் உரைக்கவும் முடியாதே....பந்த பாசங்களைப் பாழாக்கும் இந்த நூல்(சிவானந்த போதம்).

<பூமி,நீர்,மழை

பொதிகை முனி -போகர்-நந்தீசர்-புண்ணாக்கீசர்-

கருவூரார்-சந்திராநந்தர்-திருமூலர்-கொங்கணர்-பிரமமுனி & பிரமமனி-ரோமர்-வாசமுனி-

அமலகுரு-கமலமுனி-கோரக்கர்-

சட்டைமுனி-மச்சமுனி-இடைக்காடர்-(வேலூர் அமுதசித்தர்).....பாதமலர் என்றும் கருத்தில் அஞ்சலி செய்குவாம்.....

மெய்யான பொருள் என்ன?சோதி!-மேவி நின்ற தலம் என்ன?>வன்னி...சூதகமாம் <நாதத்துள் ^விந்து பூந்த சுகம் போல இருந்ததடா!அதுவே பாவம்....தன்னை அறிந்ததே முத்தி....தன்னைவிட ஒரு பொருளில்லை...தானே பிரம்....சித்தர் முதல் முனிவர் ரிஷிகள்---மகத்தான சோதியுடன் சோதியானார்....பெண்ணைப் பார்த்து அலையாதே-பெண்தான் தேகம்....மெய் தவறாப் பூரணமாய் உருவே செய்தால்-வேதாந்ச் சித்தரைத்தான் வயமாய்க் காண்பாய்...~பேசும் எழுத்துடன் °பேசா எழுத்து உறில்- ஆசான் பரநந்தியாம்...●கண்காணி இல்லா இடமில்லை.(அருணாசலகுருவின்' நிஜானந்த போதம்). மரணகாலம் தெரிதல் உட்பட பல அரிய கல்விகளை இவரது கவிகளில் காணலாம்.

>தீ,பிரமசாரித்துவம்.

<தீ மனம்.

^பசந்த மண்+நீர்

விந்தம்=வாசி

~மனம்

°வாசி.

●திருமந்திரம்:2067

اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ عَدَدَ كَمَالِ اللهِ وَكَمَا يَلِيقُ بِكَمَالِهِ

Dr muhiyideen katheeja qathiri

qadhiriyyathulidhroosiya@gmail.com

R.Aaqir'17/21.10.2024

(13409/சித்தன் போக்கு சிவன் போக்கு Part:3 /தொடர்:30)

See:part-4/13472/தொடர்:31-50

*13472. *சித்தன் போக்கு சிவன் போக்கு:4*.*

Rf:13089/தொடர்:01-09

13252/தொடர்:10-19

13409/தொடர்:20-30

இறந்தோர்களை எழுப்பும் வியத்தகு சித்தை செய்தவர்கள் மூவர் முதலிகளே:

சம்பந்தர்-வணிகன் மகனை எழுப்பினார்,நாவுக்கரசர்-அப்பூதியடிகளின் மகனை உய்ர்ப்பித்தார்,சுந்தரர்-முதலை உண்ட குழந்தையை மீட்டினார்.

இம்மூவரின் நூற்களே-(பன்@10+இரு@2)

பன்னிரு திருமுறையின் முதல் ஏழு இடங்களை பிடித்துள்ளன.

திரு=சிவனருள்,இறை,

தெய்வத்தன்மை,அருட் செல்வம், நல்வினை, அழகு,ஒளி,பொலிவு.

முறை=ஒழுங்கு,நூல்,நன்மை,

கூட்டு,உறவு,ஒழுக்கம்.

1-3

123

பன்னிரு திருமுறைத் திரட்டு @ திருநெறித் தமிழ் வேதத்தின்-முதல் மூன்று திருமுறைகளும்-

திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட 1469+1331+1369(1353)=4169 பாடல்களைக் கொண்ட தேவாரத் தொகுப்பாகும்.

வாரம்=அன்பு.

என் உள்ளம் கவர் கள்வன்(சம்பந்தர்)

4-6

4-5-6

திருநாவுக்கரசரால் பாடப்பட்ட 1070+1015+981=3066பாடல்கள் இணைந்ததே-4-6 ஆம் திருமுறைகளாகும்.

எல்லாம் சிவன் என நின்றாய் போற்றி!(நாவுக்கரசர்).

7

7

சுந்தரரின் தேவாரம் @ திருப்பாட்டு-1026 பாடல்களுடன் ஏழாம் திருமுறையாக போற்றப்படுகின்றது.

அன்னை உன்னை அல்லால் இனி-யாரை(யும்) நினைக்கேனே!(சுந்தரர்).

8

8

என்பையும் உருக்க வல்ல(gu. pope)மாணிக்கவாசகரின் திருவாசகம் + திருக்கோவையார் @ 658(656)+400 பாடல்களுடன்-எட்டாம் திருமுறையாக சமைந்துள்ளது.

முழுமுதலே மூவர்க்கும்...செம்பெருமானே!சிவபுரத்து அரசே!-மாணிக்க வாசகர்.

9

9

திருமாளிகைத் தேவர்+சேந்தனார்+கருவூர்த்தேவர்+நம்பிகாடநம்பி+கண்டராதித்தர்

+வேணாட்டடிகள் +திருவாலிய முதனார் +புருடோத்தம நம்பி+சேதிராயர் @ ஒன்பது சித்தர்களால் பாடப்பட்ட (365ல்)301 பாடல்கள்-ஒன்பதாம் திருமுறையாகும்.

சித்தத்துள் தித்திக்கும் தேனே! ...குணங்குறி இறந்ததோர் குணமே!காலமே!...ஞாலமே!...சிவனே!என் சேமத்துணையே!....

தற்பரம் பொருளே!சசிகண்ட சிகண்டா!....புணருமா புணரே!...குணக்குன்றே!

(திரு மாளிகைத்தேவர்)

என் உயிர்க்கு அமுதினை-எதிர்இல் "போக நாயகனை"...எம் சிவனை...எம் குருமணியை...தேனே!அமுதே!என் சித்தமே!...சிவலோக நாயகச் செல்வமே!(சேந்தனார்)

பழையராம் தொண்டர்க்கு எளியரே!மிண்டர்க்கு அரியரே!....மெய்யரே!மெய்யர்க்கு இடு திருவான விளக்கரே!சித்தனே!(கருவூர்த் தேவர்)

உன்றன் ஆடல் காண- "அணைவதும்" என்று கொலோ?

(கண்டராதித்தர்).

நாயடியேன்-சாவாயும் நினைக் கண்டால்-இனி உனக்குத் தடுப்பரிதே(வேணாட்டடிகள்).

மூத்த(வ)னை- மூவுருவின் முதலை-முதலாகி நின்ற ஆத்தனை...எம்பிரான் அடி சேர்வன் கொலோ?

(திருவாலியமுதனார்)

புருடோத்தமன் கண்டுரைத்த வாசக மலர்கள் கொண்டேத்த வல்லார்-மலைமகள் "கணவனை அணைவர்தாமே" /எண்ணுதலைப் பட்டங்கு இனிதா இருப்பாரே!(புருடோத்தம நம்பி).

ஏயுமாறு எழில் "சேதிபர்" கோன் தில்லை,

நாயனாரை நயந்துரை செய்தன,

தூயவாறு உரை பார்த்து உறக்கத்திடை,

ஆய இன்பம் எய்தி இருப்பரே!

(சேதிராயர்).

10

10

3047 பாடல்களைக் கொண்ட -திருமூலநாயனாரின் திருமந்திரமே-பத்தாம் திருமுறையாக மின்னுகிறது.

சிவனோடு ஒக்கும் தெய்வம்-தேடினும் இல்லை.....அவன் அன்றி மூவரால் ஆவது ஒன்றும் இல்லை(திருமந்திரம்).

11

11

திரு ஆலவாயுடையார் +காரைக்கால் அம்மையார்+ஐயடிகள் காடவர்கோன்+சேரமான் பெருமான் நாயனார் +நக்கீர தேவர்+கல்லாடத் தேவர்+காலதேவர்+பரணதேவர்+அதிரா அடிகள்+இளம் பெருமான் அடிகள்+பட்டினத்துப் பிள்ளையார் +நம்பியாண்டார் நம்பி @12 துறவிகளின் 41பிரபந்தங்களின்- 1401 பாடல் தொகுப்பே- பதினோராம் திருமுறையில் அமைந்துள்ளன.

அறிவானும் தானே-அறிவிப்பான் தானே,

அறிவாய் அறிகின்றான் தானே(காரைக்காலம்மையார்/அற்புதத் திருவந்தாதி).

<கொன்றையந்தார் சோதிக்குத் தொண்டு பட்டு-ஓடேந்தி உண்பது உறும்(ஐடிகள் சேத்திர வெண்பா).

<சிவனடியார்கள்

சிவனே முழுதும் என்பார்-சிவலோகம் பெறுவர்....சிவனே அடி போற்றி!(சேரமான் பெருமாள் நாயனார்).

புண்ணியம் நீயே!பழம்பொருள் நீயே!...மூவரும் நீயே!...முத்தியும் நீயே!(நக்கீர தேவ நாயனார்).

^பரிவின் தன்மை உருவு கொண்டு அனையவன்

(கல்லாட தேவ நாயனார்).

^அன்பு.

இனி என் அகம் புகுந்து -(வெளியேப்)போகப் பெறுமோ? புறம்(கபில தேவ நாயனார்)

என் ஞானச்சுடர் விளக்கே! "நான்" உடைய குன்றமே! பரணர் உரைத்த அந்தாதி பல- ஒன்றைப் பகரில் ஒரு கோடி...சிவலோகம்தான்

(பரண தேவ நாயனார்).

வேதியர் பெரும! விண்ணோர் தலைவ!(இளம் பெருமான் அடிகளார்)

மொழியின் மறை முதலே! முந்நயனத்தேறே!

(அதிராவடிகள்)

வேண்டலும் இலனே-வெறுத்தலும் இலனே,

ஆண்டகைக் ^குருசில் நின் அடியரோடும் குழுமி...கிடையாச் செல்வம் கிடைத்தலானே(ன்)

(பட்டினத்து பிள்ளையார்)

^இறைநாற்காலி.

பிறவி எனும் பொல்லாப் பெருங்கடலை நீந்த-

துறவி எனும் தோற்றாணி கண்டீர்(நம்பியாண்டார் நம்பிகள்).

13472/31

12

12

4286(4253)பாடல்களைக் கொண்ட-சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் @ பெரியபுராணமே-பனிரண்டாம் திருமுறையாகும்.

கற்பனை கடந்த சோதி!கருணையே உருவமாகி...பூங்கழல் போற்றி!(சேக்கிழார்

ஆக 1+1+1+1+9+1+12+1 @ 27 சிவனடியார்களின்-18350 or 18179 பாடல்களின் தொகுப்பே-பன்னிரு திருமுறையாகும்.இவற்றுள்-சில பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை.

1.பிரக்கியான பிரமம்/அறிவே பிரமம்,

2.அகம் பிரமா அஸ்மி/நானே பிரமம்,

3.தத்துவம் அசி/~நீ அது ஆனாய், 4.எனது ஆத்மாவே-பிரமமாய் இலங்குகிறது @ என்பதுவே

ரிக் யஜுர் சாம அதர்வண வேதங்களின் சாரம்சமாகும்.

~திருமந்திரம்:2577

கால்-பிருதிவி/பூமி/பொன் நிறம், தலை-ஆகாயம்/புகை நிறம், மத்தி-அப்பு/நீர்/வெண்மை நிறம், உடல்-வாயு/கருமை நிறம், உயிர்-அக்கினி/செந்நிறம்....என அண்டத்தில் உள்ளதை-பிண்டத்தில் காண்பவர்களே-சித்தர்கள்.

<சரியை >நற்கிரியை ~யோகம்தாம் ஒரு மூன்றும்-

^ஞானம் "மருவுதற்கு" ஏது? என்றே மறை புகன்று உரைக்கும்(பிரபுலிங்க லீலை).

<சீலம்

>நோன்பு

~(சீவ சிவ)சேர்க்கை

^அறிவு,ஹிக்மா

யோகசமாதி உகந்தவர் சித்தரே(திருமந்திரம்:1490)

ஆலயத்தில்/அண்டத்தில்/பிண்டத்தில்/ஆன்மாவில் -சிவனைக் காண்பதே,உய்யும் நால்வகை வழியாகும்.

பூமியில் சவுந்திரப் பெண் புணர்ந்திடும் [1]"நாகை நாதர்" நாமம்-எந்நாளும் நாவில் நவின்று....

ஞானமே பொருளாய் நாகை நாதரைத் தொழுவாய் நெஞ்சே....

திடமருள் குருவின் பாதம்-சிக்கெனப் பிடித்து....

[2]நண்ணிய குருவைக் கண்டு- [3]நாத நல்லுருவைச் சேர்த்து....

காரிய குருவை விட்டு-காரணக் குருவைக் கண்டு...

உள்நாடி மூல ஆதாரத்தில் உதித்த சற்குருவைக் கண்டு...

[4]விசும்பெலாம் கலந்த ஜோதி-வெவ்வேறு தெய்வமாகி....

விண்டவர் கண்டதில்லை-விட்டதோர் குறை மெய்ஞ்ஞானம்-கண்டவர் விண்டதில்லை....

உன் மனம் ஒடுங்கியே உன் உள் ஒளி கண்டால்- பின்னைப் ஜென்மமும் இல்லை-அந்தச் சிவத்துள்ளே சேர்வாய்....

[5]தலைமையாம் குருவைப் போற்றி....

கடல் என விளங்கும் வேத [5]காரணக்குருவைக் கண்டு ...

[5]மூவர்க்கோன் ...

அன்றிலும் [6]பேடும் போல-அடிமையும் குருவும் கூடி....

ஆயாத நூல்கள் எல்லாம் ஆய்ந்து நீ பார்த்தும்-காமத்தீயான குழியில் வீழ்ந்து ஜெனனம் உற்று அலைந்தாய்....

உன்றன் கூடகச் சடத்தை ஆட்டும் குருவை....

நாயனைப் பருகிப் பார்த்து...

மாணிக்கவாசகர்-சுந்தரர்-திருமூலர்-அறுபத்து மூவர்...

பிறவி தீர-தவத்தினுள் குருவமான சற்குரு தாளைப் போற்றி...

இறந்திடும் [7]இருபத்தோராயிரத்து அறுநூறு பேரும்...

நிதிமணி மாலையான நெஞ்சறி விளக்கம் நூறும்-துதி செயும் அறிவோர்/பத்தியாய் மனத்தில் எண்ணிப் படித்தவர்/கேட்போர் வினையெலாம் அகன்று -ஞான சோதியின் வடிவமாக-மதியணி நாகைநாதர் மலர்ப்பதம் பெற்று/முத்தி மெய்ஞ்ஞானம் பெற்று வாழ்வார்(கணபதி தாசரின்-நெஞ்சிற் விளக்கம்).

[1]12கௌதுகளில் இறுதியானவர்.

[2]அருகிருக்கும்

[3]சிவன்,மூத்தோன்

[4]ஆகாயம்,திசை,உலகு,உடம்பு.

[5]பீரான பீர்

[6]பெண் பறவை,காமனாடல்

[7]21600 தினசரி சுவாசம்.

வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது-

~நாதன் நாமம் ^நமச்சிவாயமே!(ஞானசம்பந்தர்/தேவாரம்).

~நந்தி,சிவன்.

^சி=சிவம்,வ=சக்தி, ய=உயிர்,ந=முன்திரோத மலம்,

ம=பின் ஆணவாதி மலம்.

and

^சிவ=பரமாத்மா,ஆய=ஐக்கியம், நம=ஜீவாத்மா.

^சி(வன்)=பதி,வய(ப்படுதல்)=பாசம்,நம(ஆ"ந்மா")=பசு.

மூவர்க்கொரு தம்பிரானே (திருப்புகழ்).

வேதாந்த சிந்தாந்த சமரச நன்னிலைப் பெற்ற-

வித்தகச் சித்தர் கணமே!(தாயுமானவர்).

எனையும் <சிவமாக்கும் தெய்வம்....மன்றில் நடம் புரிகின்ற மணவாளா!(திருவருட்பா).

<ரிக் வேதம் குறிப்பிடும் ருத்ரனும் & யஜூர் வேதம் வழுத்தும் அக்னி பகவானும்-ஹூ @ ஹய்யுல் கையூமான நித்திய அநாதி பரப்பிரம சிவனே.

அல்லாஹ்/ஈசன்/ஏகன்/சக்தி/ஆதி/ஹா-எல்லாமே ஒரே காதாபாத்திரத்தைக் குறிப்பன.

ஹவ்வும் ஹுவ்வும் >மவ்வுமாய் அமர்ந்ததே-சிவாயமே(சிவவாக்கியார்).

>ஹீ/م

சக்தி இன்றேல்-சிவம் இல்லை-என்ற சொற்றொடர் வெகுபிழை என்பதை,சித்தர் பாடல்கள் பறை சாற்றுகின்றன.பகுது அஹதாக காலியாகும் தருணத்து- "சிவம்" மட்டுமே எஞ்சி நிற்கும்.

பொங்குகின்ற காமம் என்ன? சிவத்தின் கூறு(சட்டைமுனி).

எங்கும் எதிலும் ஆனந்தம்(தாயுமானவர்).

பார்த்துக்கொள்-உன்றன் ^உகலுக்குள்ளே(கொங்கணர்).

^சிந்தை

உடம்புக்குள்ளே-உத்தமம் கோயில் கண்டேன்(திருமூலர்).

சினம் என்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே-

யாவும் சித்தி என்றே நினையேயடா!(இடைக்காடர்).

பற்றற்று நின்றதைப் பற்றி(சங்ககால இடைக்கடார்).

*உண்மைக் *கருவை* -கள்ளமனமதனைத் தள்ளி கண்டு கொண்டு அன்பாய்க் களித்து நின்று ஆடு பாம்பே!...எங்கள் சற்குருவினைப் போற்றி(பாம்பாட்டியார்).*

ஓது குருவாய் எனை ஆண்டு கொண்டவனே!பிச்சை தருவாய்!(குகை நமச்சிவாயர்).

யாவர்க்குமாம்-உ(ண்)ணும்போது ஒரு கைப்பிடி-

யாவர்க்குமாம்-பிறர்க்கு [i7] இன்னுரைதானே!

(திருமந்திரம்:252)

[i7] இனியசொல்.

உன் சகோதரனைப் பார்த்து புன்முறுவல் பூப்பதும் தர்மமே(நபிமொழி).

أنا في جاه سيدنا رسول الله ﷺ

13472/32

தெளிவுதனில் தெளிவு தரும் அருளும் காணும்-

^சேணத்திலே சிவமயமும் "சேரத்" தோணும்(காலாங்கியின் சீடரான-போகரின் மாணவர்)-~கருவூரார்.

^படுக்கை

~இரு கருவூரார் உள்ளனர்.

நீண்ட சடையான் ஆடும் என்ப-

[18]மாண்ட சாயல் [19]மலைமகள் காணவே(தொல்காப்பியம்).

[18]மாட்சிமை மிக்க

[19]கொற்றவை/உமை

தொல்=proto/பழைய/மூல/முதல்

/இயற்கை/original

குறிஞ்சி/மலை/^சேயோன்,

முல்லை/காடு/<மாயோன்,

மருதம்/வயல்/வேந்தன்,

நெய்தல்/கடல்/வருணன்,

பாலை/வறட்சிப் பகுதிகளில்/கொற்றவை @ ஐந்து நிலப்பரப்பு/(ஆண்)தெய்வங்களின் பெயர்களை சங்ககால பாடல்களில் காணலாம்.

^சே=செந்நிற,செவ்வேள்.

<மை=கரிய நிற.

விஷ்ணு=எங்கும் பரந்த.

திருமால்=நெடியோன்,அவதாரம்

எடுப்பவன்.

நீரும் நிலனும் தீயும் ~வளியும்-

மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய-

மழுவாள் "நெடியோன்" தலைவனாக(மதுரைக்காஞ்சி-453:5).

~காற்று.

திண்ணென் தீ நிலம் நீர் ~வளி °காயத்தால்(மணிமேகலை:857).

°ஆகாயம்.

சாற்று பெயரானவை ^தலம் புனல் கனல் பின் காற்றும் எனவாம் (சிவஞான சித்தியார்:14)

^நிலம்.

நிலம் நீர் எரி காற்று உயிரின் >இயல்பும்(நீலகேசி:675).

<தன்மை, குணம்.

பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் ^இயவுள் (திரு முருகாற்றுப்படை:274)

வெம்மை தண்டா எரியுரு பறந்தலை -கொம்மை வாடிய ^இயவுள்(அகநானூறு-29:16).

^இயவுள்-கடவுளுமாம்(நச்சினார்க்கினியர்).

^இய+வ்+உள், தலைமை, இயங்கு தன்மையாற்றல், முனிவன்,

Supreme lord.

"ஞாயிறு" தெய்வம் ஆண்பாலாகவே பதியப்பட்டுள்ளது:

ஒருகால் ஊர்திப் பருதியஞ் செல்வன்(அகநானூறு-360:2 & கலித்தொகை-16).

துவக்க ஆற்றலான "மாற்றரும் தெய்வமான" - காடுகாள் "கொற்றவையை" - பெண் தெய்வமாக வர்ணிக்கப்படுகிறது(பதிற்றுப்பத்து-88:24) and

ஓங்குபுகழ்க் கானமர் செல்வி(அகநானூறு-345:4),

துணங்கையஞ் செல்வி(பெரும்பாணாற்றுப் படை-459),

இழையணி சிறப்பிற் "பழையோள்" (திருமுருகாற்றுப்படை-259/நக்கீரர்).

கொற்றவையை-சூலினியாக/துர்க்கையாக/சிவனது மனைவியாக/உமை/பார்வதி/சக்தியாக...@ வைதீக கருத்துக்கள்- பின்னாட்களில் சித்தரித்தவை.

மெய்ப்பொருளை சூனியம் எனப் பெயர் வைத்தனர் பௌத்தர்கள். சித்தர்கள் இதனை-பாழ்,பெருவெளி,வெட்டவெளி,பரமயோகி,பசுபதி,சிவன்.....எனப் பாடுவர்.

உனது புணர்ச்சியினால் தோன்றிய கருவினை அழிப்பாயாக-என இந்திரன் சிவனிடம் வரம் வேண்ட-சிவனும் தனது கருவைச் சிதைத்து பல துண்டுகளாக்கி-இந்திரனின் கைகளில் திணிக்கிறான். இதனைப் பெற்ற சப்த முனிவர்கள்-தங்கள் தவ வலிமையால் அதனை முருகனாக வடிவமைக்கின்றனர், என்கிறது பரிபாடல்(21:1:11).

தொன்மைதானே-உரையோடு புணர்ந்த பழைமை மேற்றே (தொல்காப்பியர்).

வெல்போர்க் கொற்றவை சிறுவன்(நக்கீரர்).

அரி என்று பனி சொரிய-அலை எழுந்து அலற-வலம்புரி திரளவே;

மரி என்று எழும் ஒலி - "அவனும் அகரமும் மருவவே" -ஒரு தரளமாய்;

விரிவொடு எழும் நபி சரணம்(ஞானப்புகழ்ச்சி:109).

அரும் பெறல் மரபின் -பெரும் பெயர் முருக(திரு முருகாற்றுப்படை:269).

தற்பராபரன் பாவநாசன் இளையோன் அரன்மகன் ஆசான் குமரன் கந்தன் குகன் செவ்வேள் "சேயோன்" சேப்பன் மணாளன் பாவகி மாயோன் வேலன் வேள் ஞானபண்டிதன் [1]"தணிகைபாலன்" தணிகைவாசன் வெற்பன் குணக்குன்றன் சற்குணன் மெய்யொளி கண்ணொளி தமிழ்க்கடவுள் சிற்பரஉரு ...என்ற பெயர்கள்- குறிஞ்சி நிலக்கடவுளான -முருகனை குறிப்பன.

சரவணபவ-சிவசண்முக- [2]"குமாரயநம" -என்பதுவே முருகனை வழுத்தும் ஆறெழுத்து பதங்கள்.

[1,2]வள்ளலார் விரும்பியவை.

"முருகு" =அழகு/ஆற்றல்/மணம் என்பது பொதுப்பொருள்.ஆனால் சங்க இலக்கியங்களில்: "அழித்தல்" /ஒடித்தல்/முறித்தல்/போரிடல்/வலிமையை

குறைத்தல்...என்ற அர்த்தங்களில்தான் கையாளப்பட்டுள்ளது.இது குறித்து பிந்தைய தொடர்களில் விவாதிக்கப்படும்.

ம்+உ=மு/م

ர்+உ=ரு/பிரகாசம்

க்+அ=க/திருமால்/ஆன்மா

இந்த அகர உகர மகரங்கள் இணைந்ததே ஓங்காரம்/பிரணவ சொரூபன்.

ச-பழனி-மணிப்பூரகம்

ர-பழமுதிர்ச்சோலை-ஆக்ஞை

வ-சுவாமிமலை-அநாகதம்

ண-பரன்குன்றம்-மூலாதாரம்

ப-செந்தூர்-சுவாதிஷ்டாணம்

வ-தணிகை-விசுத்தி @ சரவணபவ தாத்பரியம்.

சிந்துசமவெளி நாகரீக பசுபதியான சிவன்-முருகனே என்றும்,சிவனின் அவதாரமே-முருகன் என்றும்(கந்தபுராணம்,திருமுருகாற்றுப்படை), இருவரும் ஒருவரே(திருமந்திரம்) என்றும் பலவாறாக பதியப்பட்டுள்ளது.

முருகனே-ஞானசம்பந்தராக பிறந்ததாக-ஒட்டக்கூத்தர் பாடுகிறார்.

பத்தர் சித்தர் பலர் ஏத்தும் -பரம பழையனூர் மேய;

ஆத்தன் ஆறங்காடான் (சுந்தரர்).

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே(சுந்தர் அநுபூதி:51).

சிந்தனை உனக்குத் தந்தேன்-திருவருள் எனக்குத் தந்தாய்;

வந்தனை உனக்குத் தந்தேன்-மலரடி எனக்குத் தந்தாய்;

பைந்துணர் உனக்குத் தந்தேன்-பரகதி எனக்குத் தந்தாய்;

கந்தனைப் பயந்த நாதா!- கருவையில் இருக்கும் தேவே!(அதிவீரராம பாண்டியன்/திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி:63).

தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி-

சண்முகத் தெய்வமணியே(திருவருட்பா:23).

கால வடிவமாக இருக்கிறேன்(கீதை p631).

கால முதல்வன்(பரிபாடல்-3:61).

எங்கும் எப்பொழுதும் நிறைந்து ததும்பும் பிரமம் ஒன்றே உள்பொருள்.அவித்தை @ மாயையின் ஆதிக்கத்தால் காட்சிகள் மாறித் தெரிகின்றன-என்பதுவே மாயாவாதம்.

மரத்தை மறைத்தது-மாமத யானை.....மாயை மறைக்க-மறைந்த மறைப்பொருள்(திருமந்திரம்:2290,2548).

அறிபவன்+அறி(யப்படும்) பொருள்+அறிவு/ஞாதுரு+ஞேயம்+ஞானம் @ 3ஐயும் திரிபுடி ஞானம் என்பர்.

See:tirumandiram:1605-1613.

ஆன்மாவே-அறிபவனாகவும் அறிபொருளாகவும் சமைகிறது (கௌடபாதர்).

அறிவானும் தானே-அறிவிப்பான் தானே,

அறிவாய் அறிகின்றான் தானே-அறிகின்ற,

~மெய்ப்பொருளும் தானே(காரைக்கால் அம்மையார் ' அற்புதத் திருவந்தாதி:20).

~தத்,பிரமம்,தற்பதம்,ஈசுவரன்,

இறை,ultimate reality,காரண உபாதி,பற்றின்மை.

(துவம்=தொம்,சீவன்,கூடஸ்தன்,காரிய உபாதி,பற்று).

மாயையில்-பிரமத்தின் பிம்பமே ஈஸ்வரன்.மாயை நீங்கிடில்-ஈஸ்வரனே பிரமம் என்பது பிடிகிட்டும்(மலமிலாப் பிரமம்).அவித்தையில்-பிரமத்தின் பிம்பமே சீவன்.உபாதிகள் நீங்கினால்-மலம் இலா ஆன்மா புலப்படும்.

தத்துவம் அஸி(பதம்)=தத்தும் துவமும் ஒன்றே same essence/தத்துவம் அஸி.இதனையே பேருரை/மகா வாக்கியம்/பெரும் பெயர்க்கிளவி என்பர்.

தத்=அந்த(பிரமம்)

துவம்=நீ(சீவன்)

அசி=(ஐக்கியமாக)ஏகமாக இருத்தல்.

நீ அதுவானாய் என நின்ற பேருரை.....தொம்பதம் தற்பதம் தோன்றும் அசிபதம்-நம்பிய சீவன் பரன் சிவனாய் நிற்கும்(திருமந்திரம்:2577, 2441)

உனை நீ அறிந்தால்-உனக்கொரு கேடும் இல்(லை)....தானும் யானும் ஆகின்ற தன்மையானை(கைவல்ய நவநீதம்).

எனை அறிந்தபின்-ஏதும் அறிந்திலேன்....கடவுளும் நானும் ஒன்றானேன்....சீவன்-பரசிவன் ஆமே(திருமந்திரம்:2366

,2958,2493).

எனக்குள் நீ என்றும் இயற்கையாம்(தாயுமான சுவாமிகள்-45:13:13).

மூவகை சீவன் plurality of souls

1.ஆபாச/போலி வாதம் :Resemblance of Brahmam சீவன்-பிரமத்தின் தோற்றமே. Eg:பளிங்குக்கல்-எதிரேயுள்ள பச்சை நிறத்தை பிரதிபலிப்பது போல.

2.அவச்சேத வாதம் limitation:வரம்பற்ற பிரமம்-மாயையினால் வரம்புக்கு உட்பட்டதாகத் தோன்றுகிறது

Eg:குடத்தினுள் இருக்கும் அகண்ட ஆகாயம்.உபாதிகள் நீங்கின்-சீவன் பிரமமாக காட்சி தரும்.

3.பிம்ப பிரதிபிம்ப வாதம் reflection:பிம்பமானது-மூலத்தில்

(குணங்களில்) நின்றும் வேறல்ல.சீவர்களின் உபாதிகள் கழன்றால்-அது ஏகமாய் மிளிரும்.

Eg:நீரில் அசையும் கதிரவனது கதிர்களைப்போல.

(விரதத்தை முடிப்பதற்கு தங்களது வீட்டிற்கு வருகைதரும்படி 70சீடர்கள் அழைத்தபோது-முஹ்யித்தீன் ஆண்டகை(1078-1167) கூறிய உவமைகளே இவை/sirrul asraar).

**மூவகைத் தத்துவம்* :*

1.சங்கரர்(கிபி-750).
அத்துவிதம்/அபேதம்/அபேதவாதம்/monism/கேவலாத்வைதம்/ஒரே பொருள்/ஒருமை/

பரமாத்வனுக்கும் சீவனுக்கும் பேதமில்லை/oness.

Eg:ஆறு-கடலில் கலந்த நிலை.

நபியே!எவர்கள் உம்மிடம் உடன்படிக்கை செய்கிறார்களோ? அவர்கள் அல்லாஹ்விடமே உடன்படிக்கை செய்தனர்...எதிரிகளை நீங்கள் வெட்டவில்லை-அல்லாஹ்வே வெட்டினான்.(குர்ஆன்-48:10,8:17).

2.இராமானுஜர்(கிபி-1100).விசிட்டாத்துவிதம்/பேதாபேத வாதம்/பன்மை வாதம்.

பரமாத்வனுக்கும் சீவனுக்கும் பேதமுண்டு.ஈசன்+சித்து/உயிர்த்தொகுதி +அசித்து/உடம்பு @3 தத்துவங்கள்.எக்காலத்தும் உயிர்- இறையாக ஆகமுடியாது.

சாஷ்டாங்கம் செய்பவர்களுடன்-நீர் இயங்குவதையும் பார்க்கிறான்(குர்ஆன்-26:219)

3.மாத்துவர் @ அனந்த தீர்த்தர்/பூரணபிரக்ஞர்(கிபி-1199 to 1278). துவைதம்/பேதம்/பேதவாதம்/விசிட்டமான அத்துவிதம்/தரிசனம்/இருவித பொருள்.பிரமம் வேறு சீவன் வேறு எனினும்-உடம்பை பிரமம் இயக்குவதால் ஒன்றாகவும் கொள்ளலாம்.

அல்லாஹ்வின் கை-அவர்களது கைகளுக்கு மேலால் உள்ளது(குர்ஆன்-48:10).

சர்வதரிசன சங்கிரம் எழுதிய-14ஆம் நூற்றாண்டு மாதவர் இவரன்று.

(பிரபஞ்சம் படைப்பதற்கு:

பிரகிருதி முதல் காரணம்,

பதி நிமித்த காரணம்,

சத்தி துணைக்காரணம்-என்பது சைவ சித்தாந்தம்.

But வீரசைவத்தின் ஒரு பிரிவான விசேடாத்துவத்தில்:

சிவன் முதல் & துணைக்காரணம்,

சத்தியே பரமகாரணம் ஆகும்).

தானாய் வேறாய் உடன் ஆனான்(ஞானசம்பந்தர்/கிபி.650).

உயிருடன் இறை ஒன்றாகக் கலந்திருப்பதால்-அபேதம்.

பொருள் தன்மையில் வேறாக உள்ளதால்-பேதம்.உயிர்க்கு உடனாய் இறை இருப்பதால்-பேதாபேதம்(உமாபதி சிவம்/கிபி.1350).

ஆதித்தமிழரின் இம்மூன்று தத்துவங்களை-சைவமும் இஸ்லாமும் ஒப்புக் கொள்கின்றன.

காண்பதெல்லாம்-

சொப்பனம் போலும் என்றே துணிந்தவன் ஞானி ஆவான்(தாண்டவராய சுவாமிகள்).

சித்தே-உலகாய்ப் பரிணமித்துச் சீவன் ஆகித் திகழ்ந்தமையால் (அருணந்தி சிவம்:254).

உலகம் உயிர் அனைத்தும் சித்தாகித் தோன்றும்-

ஆதலால் சித்தல்லாது ஒன்றும் இல்லை(தத்துவப்பிரகாசர்:192).

حسبنا الله و كفى ، سمع الله لمن دعا، حسبنا الله ونعم الوكيل.

13472/34

சீவனும் சிவனும்-இரு தனித்தனி உட்பொருட்கள் என்பதே- மாத்துவரின் "துவைத சித்தாந்தம்" .

ie இறையானது ஒரே நேரத்தில் (அனைத்தையும் கடந்த)கடவுளாகவும் & (அந்தரியாமியாக) இயவுளாகவும் இயங்குகிறான்.

(படைக்கப்படாத)இறை உயிர் உலகு @ முப்பொருட்கள் நித்தியமாயினும்-அவற்றிற்கிடையே பேதங்கள் உண்டு,அவை ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியவையும் அன்று,எனக் கருதுகிறார்.

உயிர் & இறை, உயிர் & சடம், உயிர் & உயிர், சடம் & இறை, சடத்தின் ஒரு பகுதி & பிற பகுதிகளுக்கு -என5 வேற்றுமைகள் (அறிவு- இன்ப-பேரின்பப்பேறு உட்பட) எந்த நிலையிலும் நிலையானது/ மாற்றமுடியாதது, என்பதே இவரது நுண்ணிய கோட்பாடு.

(இந்த 5வேற்றுமைகளும் -தனித்தனி இருப்பைக் கொண்டதில்லை-தான் சார்ந்த பொருளுடன் பொருந்தி இருந்தவை ,என்கிறது விசிட்டாத்துவிதம்)

வஹ்ததுல்உஜூதின் உச்சத்தில் கிடைக்கப்பெறும் ஷுஹூதின் பேரின்பக்கலவி குறித்தான-இப்னு அரபி நாயகத்தின் யூகங்களுடன் இவை ஒத்துப்போகின்றன.

சாலோக்கிய- சாமீப -சாரூப- சாயுச்சிய @ இறையுடன் -இறைக்கு அணுக்கமாக-இறை உருவாய்-இறையுடன்கூடி @ சைவ முக்திநிலைகளை ஏற்கும் மாத்துவர்,உயிர் -இன்பத்தை துய்ப்பது & இறை-இன்பத்தை தருவது என பேதம் கற்பிக்கிறார்.ஐனீ காதிரியாக்களின் தடத்திற்கு-இது முரணானது.

துவிதமே-அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும்(ஸ்ரீ தாயுமான சுவாமிகள்).

கடவுள் நிமித்த காரணமே அன்றி-முதல் காரணம் அன்று,பிரகிருதியே முதற்காரணம்,திருமாலே பரம்பொருள்,இறையின் ஆக்கச் சக்தியே இலக்குமி,எந்த இரு சீவர்களும் ஒரே தன்மையில் சமைவதில்லை,இறைசக்தியான-பிரகிருதியான மாயை- மெய்யான உள்பொருளாகும்,உயிர்களின் ஆன்மீகக் கூறுகளை மறைப்பது-பிரகிருதியின் ஒரு வடிவமாகிய அவித்தை,மூவகை உயிர்ப்பிரிவுகள்,எண்ணற்ற கல்யாண குணங்கள்-பிரமத்திற்கு உண்டு,இறைக்கு உலகு- உடலாக அமைவதில்லை,சில உயிர்களுக்கு கடைத்தேற்றம் இல்லை.....-என்பன போன்ற இவரது வாதங்கள் அகவியல் ஆய்வாளர்களுக்கு அளப்பரிய அமுதத்தை அளித்தன.

புத்தபிரான் நரக நெருப்பில் நீந்தி-அங்குறும் தீவினையாளர்க்கு மீட்சி தந்ததும்(மணிமேகலை-11:69),

மன்னான் தனது பாதங்களை நரகில் வைப்பதும்(hadees),நாம் அறிந்ததே.

யான் எனது என்னும் செருக்கு வானோர்க்கு,

உயர்ந்த உலகம் புகும்(குறள்:346)

நீ வேறு எனாதிருக்க-நான் வேறு எனாதிருக்க அருள்க!....சிவஞான சித்திதனை அருள்வாயே !(திருப்புகழ்-649,895).

(மெய்ப்)பொருளல்லவற்றைப் (மெய்ப்)பொருள் என்று உணரும்-

மருளனாம் <மாணாப் (மறு)பிறப்பு(குறள்).

<பகையான.

உருத்திரன் நான்முகன் திருமால் @ மூவரும் தத்தமது தேவியரை முறையே தலை/நா/மார்பில் தரித்தனர். ஆக பேரின்பக் கலவி போகமே-முத்தியாகும்.

●*அரிவை இன்புறு முத்தி(உமாபதி சிவனாரின்' சிவப்பிரகாசம்:50).*

●*தெய்வப்பெண்.*

உலகாயதனைப் புணர்வது-ஒரு புல்லறிவு(உமாபதி சிவனாரின் ' நெஞ்சுவிடுதூது).

உள்ளது ஒன்று-மற்றது அன்று(ஸயீதுல் ஜல்வத்தி நாயகம்).

உள்ளது கெடாது-இல்லது தோன்றாது(ஆசீகவாதி).

உள்ளது போகாது-இல்லது வாராது(சாங்கியர்).

நித்தியம் ஆய பொருள் நின ஆதலின்(நீலகேசி:776).

உடம்பினை பயன் கொள்பவனே-எங்கும் நிறைந்திருக்கும் உட்பொருளான "ஆன்மா". அழிவுறாத உண்டாக்கப்படாததாகையால்-

ஆன்மா அநாதியானது.

எண்ணுதல்/நினைத்தல் என்ற பொருள் தரும் "மன்" என்ற வேர்ச்சொல்லில் ஜனித்த மனத்துடன் தொடர்பு கொள்ளும் ஆன்மாவின் அறிதலும் அறியாமையுமான தற்காலிகத் தன்மைகள்-மனத்தின் இருப்பினையேச் சுட்டும்(கணாதரின்' வைசேடிக சூத்திரம்).

அத்துவித சித்தாந்தத்தில்- <மாயாவாதம் + >பாற்கரிய வாதம் /பரிணாம மாயாவாதம்+ ^கிரீடாப் பிரமவாதம் + ~சத்தப் பிரமவாதம் @ 4 பிரிவுகள் உள்ளன(மாபாடியம்/மாதவச்சிவஞான முனிவர்).

<1.பிரமம்/சிவன் ஒன்றே மெய்ப்பொருள், உலகம் மாயைத்தோற்றம் என்ற கோட்பாடு.

>2.வேதாந்திகளின் மதம்.

^3.கிரீடா=லீலை,ஆடல்,

விளையாட்டு. நானே பிரமம்-என்பதே இதன் சாராம்சம்.

~4.sound is eternal சத்தம் நித்தியமானது.

சாத்திரம் என்ற வேதமானது-சத்தத்தினையே உருவமாகக் கொண்ட பிரமம் ஆகும்(குமாரிலப்பட்டர்).

சத்தத்தின் பரிணாமமான-மயக்கத்தினால் உண்டானதே-உலகம்.சத்தமே பிரமமாகையால்-சத்தத்தினைப் பிரிந்து அர்த்தம் என்பது இல்லை-என அறியும் ஞானமே பேரின்பம்/வீடுபேறு.(அருணந்தி சிவனார்).

இறையை- நாதரூபமாக வழிபடும் நாதப்பிரம கோட்பாடு,இதன் நீட்சியே.

இறஸூல் நயினாரைக் குத்றத்தினால் படையாதபோது-ஒன்றையும் படையேன் என்ற "பாரசத்தம்" (ஞானப்புகழ்ச்சியில் பீரப்பா ஆண்டகை:403).

இந்த சத்தப்பிரமவாத கருத்தை ஏற்காத சித்தாந்திகள் -கன்ம ஞானசமுச்சியமே வீடுபேறுக்கான சாதனமாகக் கொள்கின்றனர்.இவர்கள்- (அழியும்)சத்தத்தைவிட (அழிவற்ற பொருளான)அர்த்தத்திற்கே முன்னுரிமையைக் கொடுக்கின்றனர்.

அத்துவிதம் பெரும்பேறு என்று அறியாமல்(தாயுமானவர்).

13472/35

கவுந்தி ஓதிய பஞ்சமந்திரமானது:

அ/அருகர்/~தீர்த்தங்கரர்

/அருஉறந்தர்/

அரிஹந்தர்,

சி/சித்தர்/சினர்,

ஆ/ஆசாரியர்/கணதரர்,

உ/உபாத்தியாயர்/அத்யாபகர்,

சா/சாதுக்கள் @ 5 முன்னணி எழுத்துக்களால் ஆனது.

~பிறவிக்கடலை கடந்தவர்.

(சில நூற்களில் இந்த வரிசைக்கிரமம் முரணாக அமைந்தாலும்-தகுதி அடிப்படையில் இதுவே ஏற்றமுடைத்து).

1.ஒவ்வொரு ஊழிக்கும்-24 "அருகரே" இருப்பர்.

2. 15வகை "சித்தர்களும்" மனம் கடந்த-உடம்பின்றி-பாலின்றி-

பிறப்பின்றி அரூபமாய் இலங்கும் தகையினர்.

3.ஞானம்+தரிசனம்+சாரித்திரியம் +தவம்+வீரியாசாரம் @ 5மகா விரதங்களில் தேர்ச்சி பெற்றவரே-"ஆசாரியர்".

4.ஆகமங்களில் ஆழ்ந்த புலமையுடனும் நல்லொழுகத்திடனும் ஞானம் பெற்றிருப்பவரே- "உபாத்தியாயர்".

5.பற்றைத் துறந்த முதல் படியினரே-"சாதுக்கள்".

ஐவகை படிநிலைகளில் நின்ற-மேற்படி ஆன்றோர்களை வணங்குவதே-மந்திரத்தின் அகமியம்.இவ்வாறு ஞாயிறு காலைதோறும்-பரமேட்டிகள் ஐவரையும் வழிபடல் -சமணர்க்கு கடமையாகும்.

ஜனி காதிரிய்யா @ இஸ்லாமிய அத்வைத பிரிவினர்- காலை எழுந்ததும் தினமும் பரிசுத்த ஆன்மாக்களுக்கு ஸலாம்/வந்தனம் செய்யும் வழமையைக் கைக்கொள்கின்றனர்.

சமணர்களின்:அருகர் சித்தர் தர்மம் சாது @ நால்வகை சரணமும்-இதே பாங்கில் அமைந்ததே.

உயர்நிலை ஆன்மாக்களை மூன்று வகையாக-சமணர்கள் தொகுப்பர்:

1.சித்தர்கள்(தீர்த்தங்கரர் + சாமான்ய சித்தர்).

2.முழுமைத் தன்மை எய்திய அருகர்கள்.

3.சிரமணர்(ஆசாரியர் + உபாத்தியாயர் + சாதுக்கள்).

அருகன்(10:187)

சித்தன்(10:177,183)

தத்துவன்(10:182)

குரவன் (10:184)

சாதுவன்(10:182)-ஐவகையாக நின்ற அருகத்தனம் (சிலப்பதிகாரம்).

அறிவன் அறவோன்...செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன் தருமமுதல்வன் தலைவன்... சிவகதிநாயகன் பரமன் குணவதன்...சாதுவன் சாரணன் காரணன்...எங்கோன்...சங்கரன் ஈசன் சுயம்பு சதுமுகன்..."அருகன்" அருள்முனி..."பழம்பொருள்" தேவமுதல்வன்...^எண்குணன் (சிலம்பு/10:176-189)....என்ற ஜைன சொல்லாடல்கள் அனைத்துமே-தீனை ஹயாத்தாக்கிய அநாதிசிவனுக்கு கனகச்சிதமாக பொருந்தும்.

^ஞானம்+தரிசனம்+வீரியம்+சுகம்+நாமம்+நிட்களம்+நிராயுஷ்யம்
+சற்பாவனை.

ஆன்மாவானது- சிவனின் எட்டு குணங்களால் நிலை பெற்றது(சிவஞானபோத வசனாலங்கார தீபம்- p71).plurality souls ஆன்மாக்கள் பல,என்கிறது சாங்கியம்.

கூம்பிக்கிடந்தது மலர்தல் போல/குவிந்திருப்பது விரிதல் போல/முடங்கியது நிமிர்தல் போல-தோற்றம் என்பது புதிய படைப்பல்ல,என்பதே Evolution சாங்கிய பரிணாமக் கொள்கையாகும்.

அதாவது:காரணம் இன்றி காரியம் நிகழாது,இல்லாத பொருளில் இருந்து எதுவும் தோன்ற இயலாது,எது உள்ளதோ?அது எப்போதும் நிலையானது.

Involution சங்காரம் என்பது-வடிவம் அடியோடு அழிதல் என்பதல்ல.காரியங்கள் அனைத்தும்-தத்தமது காரணங்களைச் சார்ந்து-வந்த வழியே சென்றடங்கி நித்தியமாய் திரும்புதலே-(ஒளிவில்)ஒடுக்கம்/சங்காரம் என்பர்(vide சாத்தனாரின் சாங்கியவாதி-27:224).

ஆதி ~பகவன்(குறள்:1)

ஆதி முதல்வன் &

ஆதி சினேந்திரன்(மணிமேகலை 6:11 & 29:47)

~அருகன்,புத்தன்.

சித்தம் என்ற மூலத்திலிருந்து தோன்றிய முதல் பரிணாமப் பொருள்:தத்துவமான மகத்/அறிவு/மான்/புத்தி(சாங்கிய காரிகை-22).

முதலில் படைக்கப்பட்டது அஃக்ல்/புத்தி, நூர்/ஒளி, ஃகலம்/பேனா(நபிமொழிகள்).இந்த மூன்றுமே அகமியத்தில்- முஹம்மதிய்யா @ ஒரே கதாபாத்திரத்தையே சுட்டுகின்றன.

பூவினில் ^கந்தம் பொருந்தியவாறு போல்-

சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது(திருமந்திரம்:1459).

^மணம்.

புத்தி+அகங்காரம்+மனம்+

பஞ்சதன் மாத்திரைகள் @ 8அம்சங்களும் அடங்கிய நுண்ணுடல்தான்-பிறவிகள் எடுக்கும் "இலிங்க சரீரம்"(சாங்கிய காரிகை:40).ஒருவரது அனைத்து செயல்கள்+எண்ணங்களின் தடயங்கள் நுண்ணுடலில் சேமிக்கப்படும்.

25 தத்துவங்களைப் பற்றிய-மெய்யுணர்வு ஞானம் @ கைவல்யம் ஒன்றே-பிரகிருதி/மூலப்பொருளில் நின்றும் தனித்துக் கொள்ள இயலும்

வழியாகும்.மாறாக வழிபாடு/வேள்வி/தவத்தால் முக்தி பெற இயலாது,என சாங்கியம் பறைசாற்றுகிறது.இதில் நமக்கு அபரிதமான படிப்பினைகள் உள்ளன.

சிவப்பிரகாசரின்' வேதாந்த சூளாமணியில்-காண்பவன்/திருக்கு & காணப்படும் பொருள்/திருசியம் @ இரண்டு மட்டுமே உள்ளன.புருடன்/ஆன்மா/subject & பிரகிருதி/மூலம்/object @ இரண்டில் ஆத்துமன் மட்டுமே உள்பொருள் reality என்றும் & திருசியம்-மாயை என்றும் கொண்டது.

வஹ்ததுல் உஜூத்/அத்வைத சித்தாந்தத்தில்:பரமாத்மாவுடன் ஜீவாத்மா இணைவதையே/லயிப்பதையே/புணர்வதையே spiritual union/யுஜ்/ஒன்றுபடுதலே/நிட்டை கூடலே-யோகம் என்பர்.

நற்சீவன் பரத்துடன் அடைவதே யோகம் & பரம்பொருள்தனில் கூட்டுதல் யோகம்(காசிகண்டம்-40:12&13)

பற்பல உருவங்களை எடுக்கும் (எண்ண அலைகளான) சித்தத்தை-தடுத்து நிறுத்தலே யோகம்(சுவாமி விவேகானந்தர்).

"பித்தன்" எனப் பேர் படைத்தார்க்கு-எப்பெயர் ஒவ்வாதே...."ஞானப்பெருமை" உடையோர்-சிவனைப் பெறுவர்(வள்ளல் பெருமான்).

13472/36

சகமார்க்கம்...அகமார்க்கம்...முகமார்க்கம்...உகமார்க்கம் அட்டாங்கயோகம் முற்றும்-உழத்தல் உழந்தவர் "சிவன்தன் உருவத்தைப் பெறுவர்" (திருவிருத்தத்தில்' அருணந்திசிவம்).

"கரு"தரும் யோகம் பயின்று கைவந்தோர் அல்லவர்-பரத்தினைக் காணார்(காசிகண்டத்தில் ' அதிவீரராம பாண்டியர்).

சத்து சித்து ஆனந்தம்/சுருதி உத்தி@யுக்தி அனுபவம்/ஆகமம் அனுமானம் காட்சி/உள்பொருள் அறிவு இன்பம்

Vs

அசத்து சடம் துக்கம்

@

பிரமத்தை Vs புறவுலகை குறிக்க ஞானிகள் பயன்படுத்தும் சொல்லாடல்களாகும்(*Indian philosophy,Vedic Systems*).

சிவன் சீவன் என்று இரண்டும் சித்து ஒன்றாம் என்னில்-

சிவன் அருட்சித்து-இவன் அருளைச் சேரும் சித்தவன்தான்(சித்தியார்).

எல்கையற்று வியாபகமாக விளங்கும் -அகப்படா புலப்படா பரம்பொருளின் சொரூபத்தைச் சுட்டும் -இதர குறியீடுகள் வருமாறு:

அகண்டம் *indivisible*

அசம் *unborn*

அசரீரம் *bodyless*

அநாதி *beginning less*

அத்துவிதம் *non dual*

அமிர்தம் *immortal*

அவிகாரம் *immutable*

அனந்தம் *endless*

ஆன்மா *aathman*

ஏகம் *one*

கூடஸ்தன் *inner ruler*

சத்து *real*

சுத்தம் *purity*

சாட்சியன் *witness*

சீவன் *self*

சூக்குமம் *subtle*

சோதி *effulgence*

தத்துவம் *thatness*

திருக்கு *seer*

துரியம் *fourth state*

பரப்பிரமம் *brahman*

பரமார்த்தம் *supreme object*

பூரணம் *perfectness*

போதம் *knowledge*

மெய் *reality*

நித்தியம் *eternal*

நிட்களம் *formlessness*

நிரஞ்சனம் *spotless*

நிரந்தரம் *no origin*

நிர்க்குணம் *material quality*

விண் *space*

விபு *omnipresence ....*

^சிவன் எனும் நாமம் தனக்கே-

உடைய "செம்மேனி" எம்மான்(அப்பர்).

செக்கர் போலும் திருமேனி(மணிவாசகர்).

^செம்மேனியன், மங்கலம், நன்மை, நலன், நன்றுடையான்.

சித்த+அந்தம்=சித்தாந்தம்/இறுதியான உண்மை/சாஸ்த்ரார்த்த நிச்சயம்/*conclusion of philisophical thought.*

ஆ+க+ம= பாசம்+பசு+பதி=சிவஞானம்+வீடு+மலநீக்கம் = முப்பொருள் உரைக்கும் "ஆகமம்".

"ஆகமமாகி" நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!(சிவபுராணம்:4).

(வேதத்திற்கும் முற்பட்டதான)ஆகமங்கள் தென்னாட்டில் தோன்றி-கடல்கோளினால் பல மறைந்தன.ஆகமங்கள் குமரிக் கண்டத்தில் துளிர்த்தவை என்பதே -ஆன்றவிந்தடங்கிய ஆய்வாளர்களின் கருத்து.

மன்னு மாமலை மகேந்திரம் அதனில்-

சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்(மணிவாசகரின் ' கீர்த்தித்திரு அகவல்-2:9).

பதி+பசு+பாசம்=இறை+உயிர்+

தளை/ஆணவம்+கன்மம்+மாயை/அவன்+அவள்+அது @ முப்பொருள் உண்மையே-சைவசித்தாந்தத்தின் சாரமாகும்.

பதி=சிவம்+சக்தி=அம்மையப்பன்=இருப்பு+இயக்க- ஆற்றல்/static+dynamic-force/இருத்தல்+அறிதல்.

பசு=ஆன்மா,முதற்கொடி,

அவா,ஆசை.

பாசம்=தளை,கட்டு,கன்மம்,ஆணவம்,மாயை,மலம்.

பதியினைப் போல் பசு-பாசம் அனாதி(திருமந்திரம்:115).

பாசத்தை களைவதற்கு பரம்பொருள் வடிவமான- ஷெய்குல் காமில் @ சற்குருவைத் தவிர வேறு வழியே இல்லை.இன்ஸான்காமில் @ ஞானகுரவர்களால் நன்னெறி காட்டவே இயலும்.வேதங்களும் ஆகமங்களும் கைகாட்டிகளே.

முத்தி முதற்கொடிக்கே ^மோகக்கொடி படர்ந்து-<அத்தி பழுத்தது என்று உந்தீபற-

அப்பழம் உண்ணாதே உந்தீபற(திருவுந்தியார்).

^ஆசை

<மலையத்தி.

தன்னை பணியாளனாக/மைந்தனாக/தோழனாக/சீடனாகப் பாவிக்கும்-தாச/சற்புத்திர/சக/சன்-மார்க்கங்களில்(சிவஞானசித்தி) முறையே தேர்ச்சிபெற்ற சைவக்குரவர்களான அப்பர்/சம்பந்தர்/சுந்தரர்/மணிவாசகர்களது சங்கரனை அடையும் வழிகள் போற்றுதலுக்குரியன.

ஆனால் பேரின்பத்தில் லயிக்கும்-மீக்குயர்ந்த ஸூஃபி ஞானிகள் இறையை முறையே-தலைவனாக/தந்தையாக/தோழனாக/குருவாகப் பார்க்காமல், ஹீயாக/காதலியாக/மணாளியாகவேப் பார்ப்பர். ஆதாரம் நிராதாரம் மீதானம் பிரணாயமம்....@ சித்துக்களுக்கு-இவர்கள் இடம் கொடார்.

~ஜீமில் உறும் தலையோட்டில்- ●இகரநிலை ஈமான் என்று இருப்பவனே!(ஞானப்புகழ்ச்சி:615).

~சாரீரபந்தம்.

●*சந்தம், ஹீ.*

வைணவ நெறியில்-திருமாலை புருடனாகவும் & உயிர்களை பெண்ணாகவும் கொண்ட- நாயகன்நாயகி பாவம் bridal mysticism உண்டு.

சிவனும் உருத்திரனும் ஒரே கதாப்பாத்திரமே.விஷ்ணுவும் திருமாலும் ஒருவரே.விஷ்ணுவை வணங்குவோரே-வைணவர்.

வைணவர்கள் இறையை-தந்தையாக/காப்பவனாக/ஆண்டானாக/மணாளனாக/அறிபவனாக/உடையானாக/தாங்குபவனாக /இயக்குபவனாக/துய்ப்பவனாக 9வகை உறவுகளில் வழுத்தினர்(பிள்ளை உலகாசிரியரின்' நலவித சம்பந்தம்).

தாயாக/குலமகனாக/கோமகனாக/மருத்துவனாக/சரணாகதியாளனாகக் கருதி-இறையைத் தொழும் பழக்கங்களும்,வைணவர்களிடம் உண்டு.

ஓம் நமோ நாராயணாய-என்பதே வைணவர்களின் எட்டெழுத்து மந்திரம்(சிலம்பு,திருமொழி,

வைகானச ஸ்மார்த்த சூத்திரம்+கம்பன்,திருமங்கை மன்னன்,பெரியாழ்வார்,

பொய்கையாழ்வார்,

திருமங்கையாழ்வார்).

ஓம்=அ+உ+ம்/சிவன் பிரம்மா விஷ்ணு @ இறை+தோற்றம்+உயிர்/விழிப்பு கனவு தூக்கம்=உயிர் இறைக்கே அடிமை(மாண்டூக்கியம்).

ஓம் எனும் ஓர் எழுத்து(திருமந்திரம்).

13472/37

சாந்தோக்கிய உபநிடத்தில்- ஹுவ/ஹூ/அவன்... ஹீ/ ஹா/அவள்... ஹிம்/ ஹூ-மீமாக பிறழ்ந்தது...என்பனபோன்ற உருவகங்கள் உள்ளன.

எழுதுகோல் @ ஃகலத்திற்கு முதலில் ஏவிய ஏவல்தான்-himm.

ஹா ஹூ ஹீ ஹும் எனவே-அலிபில் இலங்கும் வாசல் இது(ஞானக்குறம்).

ந+ம=இல்லை+உயிர்க்கு=நானும் எனக்கு உரியவன் அல்லன்/எந்தப் பொருளும் எனக்குரியது அன்று.

நார+அயன+ஆய=உயிர்+ஆதாரம்+வசிப்பிடம்=உயிர்க்கு ஆதாரமாக இருப்பவன்/உயிர்களை இருப்பிடமாக உடையவன்/உலகத்துள் அவன் உள்ளான்.

அவனே-அருகிலும் தொலைவிலும்- வெளியிலும் உள்ளிலும் இருப்பவனுமாவான்(உபநிடதம்,

qur'an -57:3).

"ஓம் மணிபத்மே ஹூம்" என்பதுவே-தாந்திரிக பௌதத்தின் பேரரசி மணிமந்திரம்.

மணி & பதுமம்-ஆண் பெண் பாலறியும் குறிகளைச் சுட்டும்.தாரா தெய்வங்களின் "கலவியைக்" குறிப்பதாக,அவலோகிதேசுவரர் குறிப்பிடுகிறார்.

தெய்வப்புணர்ச்சியும்(களவியற்காரிகை:24).

பிரம்மம்-பிரதிபிம்ப/படிம-த்தைவிட மேலானது-என்ற வாதம் சங்கையின் அடிப்படையில் சரியாகப்பட்டாலும்,

சித்தாந்தத்தில் தவறுடைத்து.காரணம்:

இறந்தவர்களை எழுப்புதல் உட்பட அசாதாறண செய்கைகளை/கராமத்துகளை-மெய்யன்பர்கள் செய்யும் சமயத்து- "கும் பி இத்னி"/எனது உத்தரவு கொண்டு- என்று முழங்குதலே நியதி.

அத்வைதோ பவதி(பிருகதாரண்யகம்).அத்விதீயம்(சாந்தோக்கியம்).

சிவம் இன்றி-சத்தி இல்லை(சிவஞானசித்தியில்' அருணந்தி சிவனார்-5:2).

சத்தியைப் பரம்பொருளாக/முழுமுதலாகக்கொண்டு வணங்கும் சாத்தம் நெறியை-தாந்திரிகம் என்பர்.இதற்கேற்றார்போல் வெளிரங்கப் பொருள் கொண்ட பழம்பாடல்களும் உள்ளன,எனினும் அகப்பொருள்-அதுவன்று.

'மாயை' என்ற வார்த்தை-"சக்தி" என்ற பொருளில் வேதங்களில் புழங்கப்பட்டுள்ளது(ரிக்:3,6,10).

சத்தியாய் சிவனாய் இந்தத் தாரணி தன்னில் ஆக்கி....சீவனும் சிவனும் கூடி...சிவன் அருணன் தொழுகையினுக்கு...அவனும் அகரமும் மருவ...பழுதிலா

பழம்பொருளே...வெளிக்கு முதலானவா...சிவயோக கண்ணின்...சர்வ சமய வடிவாய் நின்று...அரி ஹரி சிவ நம...பராபர நந்தி...சிவகுரு வடிவு...இருளாய் சிவன்....சிவலோகம் அது ஆறும்....முக்கியமானது- பேரறிவாம் உயர் முப்பொருளைத் தெரிதல்...தற்சொரூபமே...

எட்டெழுத்துள் வந்து இருப்பவனே...சிவ மரத்தின் வித்தாக வந்து விளைந்தோனே...சிவமயம் என்று ஆள்பவனே....(ஞானப்புகழ்ச்சியில்' பீர்முகமது சித்தர்:4,5,54,109,230,291,314,368,382,385,397,404,426,449,510,534,564,589).

ஞான நூல்தனை ஓதல்,ஓதுவித்தல்-நாற்பொருளைக் கேட்பித்தல்,தான் கேட்டல்,

நன்கு ஈனமில்லாப் பொருளதனைச் சிந்தித்தல்-ஐந்தும்,

இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை(சித்தியார்-8:23).

புரா/நவ @ வேர்ச்சொல்லில் நின்றும் பிறந்த வடசொல்லே- புராணம்/பழமை.முதல் புராணம்:பெரிய புராணம்.

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை-

முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்(திருவாசகத்தின் முதல் அகவல்).

...உறுகதை கற்போர் கேட்போர்-உயர் உலகு ஆள்வர் அன்றே((வாதவூரடிகள்).

பொருந்தி முன் கற்போர் கேட்போர்-புவி புகழ் அரசராகிப்;

பெரும்பயன் துய்த்து நீங்காப்-பிறப்பிறப்பு ஒழிந்து இங்கு எய்தா;

அரும் பெரும் சிவலோகத்தில்-அணைவதற்கு

ஐயமின்றே (பெரும்பற்றப் புலியூர் நம்பி).

நின்ற சிவம் ஒன்று-அதனைத் ^தேர்தல் ஞானம்(கடவுள் மாமுனிவர்).

^தெரிதல்,ஆராய்தல்,தெளிதல்,

நிச்சயித்தல்.

"மருவி" உறையும் மணமிடற்று-வாதா! நின்னைத் தொழுதோமே!(இளவரசன் வரகுணராமன்/கிபி.1560-1600).

சிவ தத்துவத்தின் இயல்புதன்னை-வரகுரவன் அருளின்-இனிதுணர்ந்து வாழும்;

அத்தகையர் பிறப்பாழி இடை நின்றேறி -அழியாத "சிவகதியில்" அடைவர் அன்றே (அரசன் வரதுங்கராமன்/கிபி.1588-1613).

எழுத்தின் அகரம் நீ! ..."மருவிய" கரணத்து உரை பெறு மனம் நீ! பூதம் ஓர் ஐந்தின் ஒய்விரு <விசும்பு நீ!.....அருவமாய் உருவமாய் அநாதியாய் ஒன்றாய் ஐம்பெரும் பூதமாய் வேறாய்....பதியுமாகி எவ்வுயிர்க்கும் உயில் இயவற்றிற் பற்றில்லா முதல்வ!உன்னை உணர்ந்து எவ்வாறு?எளியேன் ஏத்த முயல்வதுவே?...தெள்ளு மறை சேர் "புருடனாம்" செங்கேழ்ப் பரிதி தாள் தொழுவாம்!(அதிவீரராம பாண்டியர்/கிபி.1564-1610).

<திசை,ஆகாயம்,மேகம்,

தேவலோகம்,உச்சி.

மனத்திடைச் சிவனையன்றி-மற்றொன்றை நினையார்;

ஆவின் தனத்தினையன்றி "மாதர் தனம் தொடல் அறியார்" .... உரிமையாய் உலகுக்கெல்லாம்-உயிர் என நின்றாய் போற்றி!(கமலை ஞானப்பிரகாசர்).

செஞ்சொன்மறைக்கு எட்டானை-பரங்கி வாழ் கற்பகத்தைச் சிந்தை செய்வாம்!.....

மண்டலம் புகழ வளர்ந்த பெண்ணரசே! மறுவிலாதெழுந்த பேரொளியே!....

மரகதப்பசி மாமயிலே!...

எழுதரிதான சித்திரமே!...

அறம் வளர்த்த நாயகியை-வடிவுடைய மங்கை தன்னை...

பந்தணைமேல் விரலானை -அழகிய பொன்னனையாளைப் பணிதல் செய்வாம்!(நிரம்ப அழகிய தேசிகர்).

13472/38

சீர் ஒழுகும் பதத்தாளை-அருணை உண்ணா முலையாளைச் சிந்தை செய்வாம்!...

தேவர் ஆடினர்-சித்தரும் ஆடினர்-தாவராதிகள் சங்கமாடின-"மூவர்" ஆடினர்-முச்சுடர் ஆடின!...

சங்கரன் சிவன் சதாசிவன் ஈசன் ஈசானன்- புங்கவன் வன் திரிபுராந்தகன் புராதனன் புராணன்....

பூரணன் பராசரன்!(சைவ எல்லப்ப நாவலர்

மும்மத கற்பகத்தைக் கருத்துள் இருத்துவாம்....

செங்கமலப் பொற்பாதம் சென்னி வைப்பாம்!(புராணத் திருமலைநாதர்).

பண்ணார் மொழி உமையாள் வலப்பாகன் பரிப்பாகன்-

அண்ணாமலை அமலன் அடி பணிவாம்! முடி அணிவாம்!(மறைஞான சம்பந்தர்).

அரிய அயன் முனிவர் வானோர் அருமறை தெளியா ஆதி!(அனதாரியப்பப் புலவர்).

குரு கோட்டும் பெடை மணந்த-குமர கோட்டத்து அடிகள் குலத்தாள் போற்றி!(சிவஞான முனிவர்).

மனமலர் கொண்டு-பூஜை செய்தலே வேண்டற்பாலது-ஶ்ரீநாரயணகுரு

உலகில்-தன்னையும் & தன்னில்-உலகையும் காண்பவன் -பிரிவதில்லை(ஈசம்-6).

புத்தரும் சங்கரரும்-ஆதி உபநிடதங்களிலிருந்தே மூல கருத்துக்களை உள்வாங்கினர் (சர்.சி.பி.ராமசாமி).

பிரம்மமும் ஆன்மாவும் ஒன்றே(சங்கரர்).

தண்ணீர்-பிரம்மம்(உபநிடதம்).

ஆதியில் இறையாசனம்-தண்ணீரின் மீதிருந்தது(நபிமொழி).

மூன்றுலகும் தொழுதேத்தும்-முகலிங்கா!முதற்பொருளே!...

கருவாபுரிக்குள் உறை தேவதேவா!-கதியேது? எனக்கு மொழியே!....

எவன் அனைத்துலகும் ஈன்று காத்து அழிக்க- இறைமைசால் "மூவுரு"எடுத்தான்?,

எவன் முதல் இடை ஈறு இன்றி எஞ்ஞான்றும்- ஈறிலா மறைமுடி இருப்பான்?

(திருக்கருவைப் பதிற்றுப்பத்தாதி).

என் செயலாவது யாதொன்றும் இல்லை-மற்று யான் புரிதல்,

நின் செயலாக நினைவளித்தாய்-உன்னில் நீக்கமறற்றேன்(அருணகிரிநாதர்).

மன்றில் நடிக்கின்ற பால்வண்ணன் நாமம் எண்ணா மாந்தர்-படிக்கின்ற நூலெல்லாம் பாழ்(திருக்கருவை வெண்பா அந்தாதி).

நாள் என் செயும்? வினைதான் என் செயும்?எனை நாடிவந்த கோள் என் செயும்?கொடுங்கூற்று என் செயும்?குமர் "ஈசன்" இரு தாளும்..... தோன்றிடினே!(அருணகிரிநாதரின்-கந்தரலங்காரம்).

பக்தி நெறியின்றி இறையைக் கண்டு தெளிந்து- ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளர்த்து-சமயம் கடந்த மோன சமரச நெறியில் நிற்கும் - புதிரானவர்களே சித்தர் பெருமக்கள்.

சத்திய +சந்தோக +ஆதி +அனாதி +வகுளி +மதங்க +மச்சேந்திர +கடேந்திர +கோரக்க @ (வடபாக) நவநாத 9 சித்தர்களைக் குறித்த சொல்லாடல்-குணங்குடியார் & தாயுமானவர் பாடல்களில் காணலாம்.

"நவநாத" சித்தனே! முத்தனே! நாதாந்த மூர்த்தி நீயே!.... முஹ்யித்தீனே!(குணங்குடி மஸ்தான்).

பக்தர் சித்தர் பலர் ஏத்தும் பரமன் பழையனூர் மேய-அத்தன் ஆலங்காடன் (சுந்தரர் தேவாரம்-7:52).

திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள் (திருவாசகம்-திருப்படையெழுச்சி-2:614).

...தனி நிகரில் (எண் பெரும்(சித்தி பெறலாம்(தாயுமானவர்-தேசோமயானந்தம்-8).

ஆதி அந்த மூல விந்து நாதமே-சிவாயமே!....

சிவாயம் என்ற அட்சரம்-சிவன் இருக்கும் அட்சரம்!....

சக்தியும் சிவனுமாக நின்ற தன்மை ஓர்கிலீர்?...

தாணுவாக நின்ற சீவன்தான்-சிவம் அதாகுமே!(சிவவாக்கியார்).

சிவபெருமானைச் "செம்பொன்" அம்பலவனை நினைமின் மனனே!....

ஒழிவு அருஞ் சிவபெரும் போக இன்பத்தை....

இன்னும் எத்தனை எத்தனை சென்மமோ?....

என் செயல் ஆவது-யாது ஒன்றும் இல்லை!இனி தெய்வமே!-உன் செயலே என்று உணரப் பெற்றேன்....

சதாசிவம் என்ற வித்தை இட்டு...வளர்த்தேன் "சிவ போகத்தையே!"...

குரங்கதனைப் போல (திருமணக் கூண்டில்) அகப்பட்டீர்!கிடந்து உழல் அகப்பட்டீரே!(பட்டினத்தார்).

ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப்-

பட்டினத்தார் பத்திரகிரிபண் புணர்வது எந்நாளோ?...

செத்த சவம் போலத் திரிவது- இனி எக்காலம்?...

ஆதி அந்தம் ஆகின்ற குருவாக வந்து-எனை ஆட்கொண்டு அருள்வது எக்காலம்?...

சாகாமல் செத்திருந்தது சற்குருவின் பொன்னடிக்கீழ்-வேகாமல் வெந்திருக்க வேண்டுவதும் எக்காலம்?.(பத்திரகிரியார்).

எங்கள் சற்குருவினைப் போற்றி!....

கற்பகாலம் கடந்து 'ஆதி கர்த்தாவோடும்' கடம் அழியாது வாழும் "காரணக்குரு" பொற்பதமே தஞ்சம்!....

நித்தியமான வஸ்துவை நிலைக்க நாடி-"மாயப் பெருவெளி" தன்னில் ஏறி....

ஞான சொரூபமாகி ஆலச் ^சயத்து <மாலுடன் நின்றே-ஆனந்தம் சேர்ந்தோம் என்று ஆடு பாம்பே!(பாம்பாட்டிச் சித்தர்).

^அருகன்,சூரியன்,கூட்டம்

<இந்திரன்,திருமால்,வேட்கை.

மனம் என்னும் மாடு அடங்கில்...முத்தி வாய்த்தது என்று எண்ணேடா....

வெறும் "வெட்ட வெளிக்குள்" பால் கற...

பேசாது இருப்பதற்குத்தான்- கற்ற கல்வியன்றோ-வாகான மெய்க்கல்வி- பகுத்தறி நீ !கல் மனமே(இடைக்காட்டுச் சித்தர்).

விந்து நாதமடி ...மெய்யாக வந்ததடி (அகப்பேய்ச் சித்தர்).

மெய்யூரில் போவதற்கு- 'வேதாந்த' × வீடறியேன் (அழுகுணிச் சித்தர்).

13472/39

செத்தாரைப் போலத் திரியும் மெய்ஞ்ஞானிக்கு-கைத்தாளம் ஏதுக்கடி?...

>வேகம் அடங்கி விளங்கும் மெய்ஞ்ஞானிக்கு-யோகந்தான் ஏதுக்கடி? (குதம்பைச் சித்தர்).

>சுக்கிலம், உக்கிரம், சினம்.

சிவம் அன்றி வேறே வேண்டாதே....

எங்கும் சுயம் பிரகாசன்....தவநிலை விட்டுத் தாண்டாதே...

"சிவன் இச்சை" கொண்டு -அவ்வழி ஏறி மீளாதே!(கடுவெளிச் சித்தர்).

அநாதியின் ஊமை எழுத்து அவள்தான்....

வாலைக்கு மேலான தெய்வம் இல்லை...

சிவன்தன் அடியாரை வேதியரைச் சில சீர்புல ஞானப்பெரியோரை-

மவுனமாகவும் வையாதே...

வாலை-எள்ளுக்குள் எண்ணெய் போல் நின்றவளாம் (கொங்கணச் சித்தர்).

நிற்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சனமுமாகி -நேரான பூரணமாய் மனம் எட்டாத,

சற்குணமாய்ச் சமரசமாய்த்தானும் தாண்டி-

சச்சிதானந்த வெளிக்கு அப்பால் நின்ற,

தற்குணமாய் எனை ஆண்ட தன்மயத்தைப் போற்றி!(சட்டைமுனி).

யோனிக்குள் ஆசை ஒழியாது தனித்தியம் உங்களுயிர்....

சுடுகாடு ஒழிய இனி இல்லையே....

மூலம் அறிந்து அவ்வழியில் முக்தி அடையார்க்கு-நமன் காலன் அவர்க்கே மரணம் காண்(திருவள்ளுவர் 2nd).

வேகாத்தலை சாகாக்கால் விரைந்து கேளு- அதை எடுத்து உரைப்பவனே ஆசானாகும்(அகத்தியர்).

மூலம் எனும் ஆதார வட்டம் தானே-முச்சுடர் முக்கோண மூன்று நாடிச்,

சீலமெனும் சிவலிங்க பாத தீர்த்தம்....

மேவியதோர் சற்குருவின் பாதம் தன்னை-மெய்ஞ்ஞானம் என்று அதனை மேவிக் கொண்டு.....

சீவனையும் சிவன்தனையும் ஒன்றாய்த்தானே-திருமூலர் பாதம் ஒன்றித் திடமாய்க் காணே!(திருமூலர்).

மான் என்ற சிவகாமி சிவனும் கூடி -மாமுனிவர் முகம் பார்த்து மறைநூல் சொன்னார்(வால்மீகர்).

மூவணையும் ஓரணைதான்-முன்னோர் உழுதுவிட(காளைச் சித்தர்).

அணை=புணர்ச்சி, இணைதல்.

ஊனாய் உயிராய் உறவாய் இருக்கும் -ஒப்பிலா மெய்ஞ்ஞானம் கொண்டல்லோ வந்தேன்(ஏனாதிச் சித்தர்).

தானான சிவத்தினிடை பூசை சொன்னேன்....

மானான தேவியைத்தான் தோத்தரித்து-மைந்தனே சாஷ்டாங்கம் சாணம் பண்ணே (நந்தி தேவர்).

சமய கோடிகளெலாம்-தம் தெய்வம்! எம் தெய்வம்! என்று-

எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது?....

மோன உருவெளியது ஆகவும் கருதி அஞ்சலி செய்குவாம்!....

பெரிய மௌனத்தின் வைப்பைப்->பேசரும் அனந்த பத ஞான அனந்தம் ஆம்-பெரிய பொருளைப் பணிகுவாம்!

விண்ணே! விண் ஆதியாம் பூதமே!நாதமே! வேதமே!வேதாந்தமே!-

மேதக்க கேள்வியே!கேள்வியாம் பூமிக்குள் வித்தே! அவ்வித்தின் முளையே!-

கண்ணே!கருத்தே! என் எண்ணே!எழுத்தே! கதிக்கு ஆன மோனவடிவே!....

நாயினும் கடை ஆன புன்மையேன்!இன்னம் இன்னம் வீணிலே அலையாமல்-†மலை இலக்கு ஆக நீர் வெளிப்படத் தோற்றல் வேண்டும்....

சிந்தையை அடக்கியே "சும்மா" இருக்கின்ற திறம் அரிது ....

பூரணமாய் நின்ற ஒன்றே!புனித வாழ்வே!...

உயிர்த்திரளை ஆட்டும் விழுப்பொருளே!யான் சொலும் விண்ணப்பம் கேளே!...

மோன குருவே!என் தெய்வமே!...

தாயும் நீ!இன்பத் தந்தையும் நீ! என்றால்-சேயதாம் இந்தச் சீவத்திரள் அன்றோ?....

எனக்கு எனச் செயல் வேறு இலை-யாவும் இங்கு ஒரு நின் தனக்கு எனத்தகும்....

முற்றும் மாயம் ஆம் சகத்தையே....

அவனே பரமும்-அவனே குருவும்-அவனே அகிலம் அனைத்தும்-அவனேதாம் ஆனவரே சொன்னால்-அவரே குரு எனக்கு-நான் அவனாய் நிற்பது எந்த நாள்?....

பக்தர் அருந்தும் "பரமசுகம்" யான் அருந்த....

தெய்வ அறிவே!சிவமே!பராபரமே!...

அத்வைதம் ஆன ஐக்கிய அனுபவமே!....

விளையும் சிவானந்த பூமி-அந்த வெட்டவெளி நண்ணித் துட்ட இருளாம்....

ஞான நெறிக்கு ஏற்ற குரு-நண்ணரிய சித்திமுக்தி தானம் தருமம் தழைத்த குரு-மானமொடு தாய் எனவும் வந்து என்னைத் தந்த குரு-என் சிந்தை கோயில் என வாழும் குரு!

(தாயுமான அடிகள்).

>பேசரிய

†மலை இலக்கென நம்பினேன்(குணங்குடியார்).

தேவர்/ககனர்/வானோர்/அமரர்/அண்டர்/இமையோர்/உம்பர்/விண்ணோர்/எவர்க்கும்/மேலோர்/பரம/சர்வ- "சிகாமணியே"(ஞாபு:356-367).

மருவு பெண் ஆசையை மறக்க வேண்டும்....

தெள்ளமுதப் பெருங்கடலே!தேனே!ஞானத் தெளிவே! என் தெய்வமே!தேவர் கோவே!-

தள்ளரிய புகழ் "தணிகை மணியே!" ....

உன்றன் ஆறெழுத்தை உன்னி மனத்தில் உச்சரித்து....

முன்னிய மறையின் முடிவின் உட்பொருளே!முக்கணா மூவர்க்கும் முதல்வா!...

இந்நானிலத்தில் நான் செய் பிழைதான் சிறிதோ?- ~அன்றுலகில்தான் பெரிதே!...

யான் உளம் கலங்கல் நீதியோ? நின் அருட்கு அழகோ?...

நின்பால் அன்றி மற்றை இடத்தில் சற்றும் செல்லேன் வயித்தியநாதா!அமரர் சிகாமணியே!....

ஞானபோதகம் தருதற்கு இது தகு தருணம்-புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே!....

எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே!....

இச்சை எலாம் வல்ல துரை-என்னை மணம் புரிந்தார்....

நான் உரைக்கும் வார்த்தை எலாம்-நாயகன் தன் வார்த்தை!

(இராமலிங்க அடிகள்)

~ஆன்மீக லோகம்

உன்பிழை உலகெலாம் ஒழிக்கப் பாரமோ? (ஞாபு:459).

ஆதிக்குமுன் அநாதியாய் நின்றவனை,*

அஞ்செழுத்திலும் பிஞ்செழுத்து ஆனவனை,

வாஜிபுல் உஜூதாகிய நாதனை,

...சற்குருவே! மெய்க்குருவே! நற்குருவே!

(வாஜிப் =தேவையான,

உஜூத்=உள்ளமை)

--மெய்ஞ்ஞான ரத்தினலங்கார புகழ்ச்சி:8

13472/40

கார்க்கியின் உபநிடதம்,

சார்வாகரின் லோகாயதம்,

ஆரியசங்கரின் பௌத்தம்,

கபிலரின் சாங்கியம்,

பதஞ்சலியின் யோகம்,

கௌதமரின் நியாயம்,

நாகர்ஜுனரின் சூன்யமம்,

கணாதரின் வைசேஷிகம்,

ஜைமினியின் மீமாம்சம்...போன்ற வேறுபட்ட சித்தாந்தங்களில்-"உலகம் மாயை" போன்ற அனேக ஒற்றுமைகளும் உள்ளன.

பிரம்மம்+மாயை=உலகம்(அநிர்வசனீயம்).

மாயையோடு சேராத நிலை=நிர்க்குண பிரம்மம்.

மாயையின் குணங்களுடன் இயைந்த நிலை=சகுணப் பிரம்மம்.

மாறுதலற்ற பாதிப்படையாத மூலப்பொருளான பூரணமான பிரம்மத்திலிருந்தே-மாறுதலடையும் உலகம் தோன்றுகிறது.

மரத்திலிருந்து பொம்மையை/மண்ணிலிருந்து பானையை செய்யுங்கால்-மூலம் சிதையும்/குறையும்/மாற்றமடையும்.இது பிரமத்தின் விஷயத்தில் பொருந்தாது.உதாரணமாக:

விண்ணவர்கோன் அவர்கள் சுய/மனித/பிற உருவங்களிலும் மாநபிகளிடம் தோற்றமளித்த விடயங்கள்.ஒரு மெழுகுவர்த்தியின் அனலைக் கொண்டு-எண்ணற்றவைகளில் பற்ற வைப்பதையும்- உவமையாகக் கொள்ளலாம்.

1.கிபி 8ஆம் நூற்றாண்டில் (or கிமு.44-12) மலபார் காலடியில் ஜனித்து 32வயதிற்குள் பொன்னரும் அத்வைத சித்தாந்தத்தை வழங்கிய-சங்கரரின்

குருவே-கோவிந்தர்.கோவிந்தரின் குரு- கௌடபாதர் (மாண்டுக்கிய காரிகை ஆசிரியர்).மாபுருஷர் சங்கரரின் வாதத்தை ரத்தினச் சுருக்கமாகக் காண்போம்:

உலகம்-பிரம்மத்தில் அடங்கியது எனக்கொண்டால்- அது பிரம்மத்தின் பகுதியாகக் கொள்ள நேரிடும்.பகுதியாக இருக்கும் வஸ்து-பிரியக்கூடியதே/அழியக்கூடியதே...என்பதால்

,உலகினை பிரம்மமாகக் கொள்ள இயலாது,தோற்றம்/மாயை/பிரமை என்பதொன்றே சிக்கலைத் தீர்த்து வைக்கும்.ஆக-படைப்புகளால் பிரமத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படுவதில்லை.

கானல்நீர், கனவுலகம்,கடலலை, ஐஸ்கட்டி,பாம்பாகத் தோன்றும் கயிறு...போன்றவைகளை ஆய்ந்தால்-நாம் கற்பனை(?) பண்ணிக் கொண்டிருக்கும் அறியாமை/விவர்த்த வாதம் புரியவரும். (எது சர்வ காலமும் நிலைத்திருக்கிறதோ?-அதுவே உண்மை).

அறியாமையில்/அநித்தையில் பிரம்மம் தளைப்படும் நிலைதான்-உயிர். பிரதிபிம்பத்தின் அசைவுகள்-பிம்பத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது.உதாரணமாக:

நீரில் மூழ்கிய கம்பை வெளியே எடுத்ததும்-கம்பின் வளைவுத் தன்மை மட்டுமே மறையும்,கம்பு மறைவதில்லை.கடலலையில் வளையும் சந்திரனின் அசைவுகள் -சந்திரனுக்கு உரியதன்று.

சத்தியத்தில்-பிரம்மம் உயிராக மாறுகிறது.உயிர்-பிரமை அல்ல.ஓர் உயிர் -பலவாக தோற்றமளிக்கிறது.அணையின் நீரும்-அது வழிந்தோடும் ஆறுகளின்/வயல்களின் நீரும் -யதார்த்தத்தில் ஒன்றே.ஏரிக்கரை/வரப்பை நீக்கினால்-இதனைத் தெளியலாம்.

படைப்புத் தொழிலில் -கீழ்வரும் இரு விடயங்கள் துளிர்க்கின்றன:

உள்ளது/பிரம்மம் மறைக்கப்படல் + இல்லாதது/உலகம் தோற்றப்படல்.

இறையும்+உயிரும்-பிரமத்திலிருந்தே தோன்றுகின்றன.

பிரம்மம்-பல உயிர்களாக எண்ணுவதற்கு-அவித்தையேக் காரணம்.பிரம்மம்-ஈஸ்வரனாகுவதற்கு-மாயையேக் காரணம்.

மாயையால்- இறை பாதிப்படைவதில்லை, ஆனால் அவித்தையால்-பாதிப்பு ஏற்படும்.உயிர்களும்-

அவித்தையால் பாதிப்படையும்.

சத்வம்/சாத்வீகம்/ஜமாலியத்+ராஜசம்/ஜலாலியத்+தாமசம்/இருள்/மஃகீஃபீ=அவித்தை.

சத்வ/ஜமாலியத் குணம் மாத்திரம் =மாயை.

அல்லாஹ் றஸூல் முஹ்யித்தீனும் ஒன்றுதான்!இல்லவே இல்லை! பிறழ்ந்தவைதான்!.இது சற்று நுட்பமான ஆழமான விடயம்.கரணம் தப்பில் மரணம்-என்ற சிக்கலான சித்தாந்தம்.

நாங்கள்- சேர்ந்திருப்பதுபோல் சேர்ந்திருந்தோம்-தற்போது பிரிந்திருப்பதுபோல் பிரிந்திருக்கிறோம் (மண்ணறையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு-ஷெய்குல் அக்பர் ஆண்டகையின் பதில்).

2.பிறவி எடுப்பதற்குக் காரணமே-அவித்தைதான்.

அவித்தைதான்-உயிரின் தெய்வீக அம்சத்தை மங்க வைக்கிறது & மறைக்கிறது,என்கிறார் மத்வர்.பக்தி என்பது சலனமற்ற/ எண்ணமற்ற வைராக்கியநிலை, என்பதே இவரின் துவைதக் கோட்பாடு.

3.உள்ளது ஒன்றே என்பதன் பொருளானது-சுதந்திரப் பொருள் ஒன்றே.அறியாமை/மாயையின் நிலைக்களனை-அறிவுமயமான பிரமத்துடன் தொடர்பு படுத்துதலும் அறியாமையே. உயுருக்கு முன்பே மாயை-இருப்பதாகக் கொள்வதும் தவறுடைத்தே-என்பது ராமானுஜரின் வாதங்கள்.காரண பிரம்மமும் காரிய உலகமும் மெய்யே(பரிணாம வாதம்) சரியானது,காரிய உலகம் பொய் (@ விவர்த்த வாதம்) பிழையானது, என்பது இவரது விசிஷ்டாத்வைதக் கோட்பாடு.

பாம்பாகத் தோன்றும் கயிறு விடயத்தில் வெவ்வேறு -3பொருட்கள் தேவைப்படுவதாலும் -பாம்பை முன்னமே தெரிந்திருத்தல் வேண்டும் என்பதாலும்-பொருத்தமற்ற உதாரணம் இது என்கிறார். நோயின் காரணத்தால்-உயிர் பங்கப்படாததை உதாரணமாகக் கொள்ளலாம்.

தத் + "துவம்" + அஸி=அது+ "நீ" + இருக்கிறாய்.நீ -என்பது -உன்னுள்ளே என்பதே நிறைவான பொருளாகும்,உயிரைக் குறிப்பிடுவதல்ல, எனக் கருதுகிறார்.முற்றாக சரணடைதலே-முக்திக்கு வழி என்ற இவரது கருத்தின் அகமியம்-தன்னை இழத்தலே.

இறை+உயிர்+மாயை மூன்றுமே படைக்கப்படாதவை,

அநாதியானவை,அழியாதவை,

பற்றற்ற வினையே- நல்வினை-என்பதே சைவ சித்தாந்தம்.

13472/41

சிவன்=செம்மை/நிர்குணப் பிரமம்/மங்கலம் உடையான்/வெய்யோன்/செம்பொருள்/முதல்வன்/மெய்யவன்/நாதன்.

பதியாகிய பூரண சிவனான கொற்றன்-தனது (ஆக்கல்/அழித்தல்/காத்தல்/மறைத்தல்/அருளல் @)"சக்தியால்தான்" உலகை இயக்குகிறான்.இரும்பையும் காந்தத்தையும் எடுத்துக்காட்டாகக் கொண்டால்- இந்த மருட்டுதல் எளிதாக விடுபடும்.

நிர்க்குணப் பிரமத்தின் சகணநிலையே-சக்தி(சாக்தம்).

சிவம்+சக்தி+விஷ்ணு=முச்சுடர்.

சிவ வழிபாட்டு நூற்களை-ஆகமம் என்றும் & சக்தி வழிபாட்டு நூற்களை-தந்திரம் என்றும் அழைப்பர்.

முழுமுதற் கடவுளான இயற்கை அன்னையை -அனைவருக்கும் வீடுபேறு நல்கும் தாயாக(பராசக்தி/சிவக்கொழுந்து/பிரம்மதேவி/பகவதி/இயக்கி/இசக்கி/தியாமத்/யூரினோம்/இயாஹி/யஹோவா/யா ஹூ/ஐஸிஸ்/இஸ்தர்/வீனஸ்/சுக்கிரன்/ஆவளை/மூதணங்கு மோடி/அம்பா தேவி/நிலமகள்/பூமாதேவி/கொற்றவை/அயிரை/துர்க்கை/வள்ளி/காளி/பிடாரி...

&

இன்ப நுகர்ச்சி தரும் கன்னியாக/சிவை/மனோன்மணி/உருத்திரை/குண்டலி/முக்கண்ணி/நாரி/மலை மடந்தை/மலைமகள்/திருமகள்/நிலமகள்/பரை/தற்பரை/நீலி/நிமலி/உமை/அந்த ரி/அம்பிகை/பார்ப்பதி/பார்வதி/ஆரியை/காம கோட்டத்தி... -என வணங்கும் மரபு- கற்கால ஆதிவாசிகளிடமும் புதையுண்ட நாகரீகங்களிலும் உண்டு.

Mother worship தாய்வழிபாட்டின் வளர்ச்சியே-உலகன்னை சக்தியை முழுமுதல் கடவுளாக வழிபடும் -சைவத்தின் சாக்தம் பிரிவாகும்.

77தந்திரங்கள் இதற்கு உண்டு.(மெய்ப்பொருளான சிவத்தில் உறைந்த ஆற்றலான) சக்தியின்றி-சிவத்தால் இயங்க இயலாது, சக்தியின்றேல் -சிவம்

அசைவற்றிருக்கும்,சக்தியும் சிவனும் வேறுபட்டதன்று,சிவனின் அசைவுள்ள ஆற்றல் வடிவமே-சக்தி-என்பதுவே இவர்களது கொள்கை.

இந்த சக்தியை -மாயை என்றும்,அதனுடன் கொழுகிய மகேசுவரனை-மாயி எனவும் அழைப்பர்.(மாயையை-பராசக்தி என அத்வைதிகள் பகர்வர்).

ஆதியே!அகிலநாதே!^அரிபொருளாய தேவி!-

வேதியே!விமலே!வித்யே!விண்ணவர் போற்றும் பெண்ணே!-

சோதிதான் உதித்தது போலே ^சுந்தரத்தோடும் கூடி-

நீதியில் கதை உரைப்பன்-நீ தெளிந்து அருள்க!வாணி!(கேரள காளி நாடக பாடல்).

^நூர்.

மாதொருபாகன் உமைபாகன் அம்பிகாபதி அரிவைபாகன் நாரிபாகன் துணைவனார் ....போன்ற சங்க இலக்கியங்களின்-சிவ பதங்களில்- சக்தி ஒளிந்திருப்பதைக் காணலாம்.

சிவ-சக்திகளின் சம்பந்தத்தை: ஒருமையில் இருமை/தாதான்மியம் /ஒரே பொருளின் இரு ஆற்றல்கள் என்பர்.

அத்துவிதத்தில்:ஒரே தன்மையான இரு பொருள் ,எனக்கொள்க.சொரூப நிலையிலான சிவம்- தடத்த நிலையில் சக்தி,எனக்கொள்க.

ஓர் உரு ஆயினை-மானாங் காரத்து;

ஈர் இயல்பாய்(ஆளுடைய பிள்ளையார்).

பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று-அவ்வுருத்;

தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும் (புறநானூறு-1).

பராசக்தி+ஆதி சக்தி+இச்சா சக்தி+ஞான சக்தி+கிரியா சக்தி= பஞ்ச சக்திகள்.

பரப்பளவின் அடிப்படையில் கணக்கீடு செய்தால்-ஆதிகுடி வாழ்ந்த குமரி மாவட்டத்தில்தான் -மிகுதி சக்தி கோவில்கள் உள்ளன.

மும்மலங்கள்/3அழுக்குகள்:

மாயை,ஆணவம்(அறியாமை) ,

கன்மம்(கருமம்/வினை).

சுத்த மாயையின் "5சிவதத்துவங்கள்" :

1.சிவம்,

2. சத்தி/விந்து, 3.சதாசிவம்(ஞான+கிரியாசக்திகளின்சமநிலை),

4.ஈசுரம்(கிரியா சக்தி மிகைத்தல்) ,

5.சுத்தவித்தை(ஞானசக்தி மிகைத்தல்).

1-சொரூபம்

2-அரூபம்

3-அருவுரு

4,5-உரு

நிவிர்த்தி-பிரமன்,

பிரதிட்டை-திருமால்,

வித்தை-உருத்திரன்,

சாந்தி-மகேசுவரன்,

சாந்தீயதீதை-சதாசிவன் @ 5பூதங்களின் அதிதேவர்கள் முறையே- படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல்-எனும் தொழில்களை செய்கின்றனர்.

முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்-

சுத்த அநு"போகத்தை"த் துய்த்தல் அணுமெத்தவே-

இன்பம் கொடுத்தல் இறையித்தை விளைவித்தன் (உண்மை விளக்கம்:51).

"வெய்யோன்" ஒளியில் ஒடுங்கி(சிவஞான போதம்-5:2).

அநாதி ஜலால் "வெய்யவனாம்"....🔥 "வெய்யவன்" முஹ்யித்தீனும்!....முத்தரளம் ஒன்றாய் முளைத்த "சிவ மரத்தின் வித்தாக" வந்து விளைந்தோன்!

(ஞானப்புகழ்ச்சி-615,614,564)

பத்தர் மன்னிய பாற்றுரை மேவிய- "பத்து நூறு பெயரனை" ,

பத்தன் ஞானசம்பந்தனது இன்தமிழ்-பத்தும் பாடிப் பரவுமே!(திருப்பாற்றுறை)

திருவே! என் செல்வமே! தேனே!வானோர் செழுஞ்சுடரே!செழுஞ்சுடர் நற்சோதி மிக்க உருவே! என் உறவே!என் ஊனே! ஊனின் உள்ளமே! உள்ளத்தின்

உள்ளே நின்ற கருவே! என் கற்பகமே!கண்ணே!கண்ணிற் கருமணியே! மணியோடு பாவாய்! காவாய்!(ஞானசம்பந்தரின்' திருத்தாண்டகம்).

ஆதி அநாதி இறையன்-மால் அறிதற்கு அரிய சோதியன்!(சுந்தரமூர்த்தி நாயனார்).

ஆதிக்கணான்...மாமலர் மேல்-அயனோடு மாலும் காணா,

நாதியை நம்பியை நள்ளற்றானை நான் அடியேன் நினைக்கப் பெற்று உய்ந்தவாறே (நாவுக்கரசரின்- திருத்தாண்டவம்).

மூவருமாகி இருவருமாகி "முதல்வனுமாய்" நின்ற மூர்த்தி!(ஞானசம்பந்தர்).

மண்ணுலகும் விண்ணுலகும்-உம்மதே ஆட்சி!(சுந்தரமூர்த்தி நாயனாரின்-திருநாகைக் காரோணம்).

13472/42

ஆதி அஞ்செழுத்து நீ!

அகர உகர சிகர நீ!,

ஜோதி பிஞ்செழுத்து நீ!

*சொக்கும் *ஞானப்புதையல் நீ!* ,*

நீதி சூழ் வட்டம் நீ! நிதானம் போன்ற வடிவும் நீ!,

காதலுற்ற ஞானம் நீ!

கதி எனக்கு அருளுவாய்!(சிவஞான தீபம்:167).

சிவஞான தீபம் என்ற நூல்-கோட்டாறு அபூஸாலிஹ் நாயகம் & சகோதரர் ஜிந்தாஷாஹ் மதார் இவர்களால் பாடப்பட்ட அதியற்புத கிரந்தம்.அனேக மூடுதலான விஷயங்களை-இருவரும் உடைத்துப் பாடி இருப்பார்கள்.அதனைத் தெளிவதற்குமுன் 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட-சுவேதவனப் பெருமாள் @ மெய்கண்டாரின் (நந்திமுனியின்) உயர் சிவஞானபோத செய்திகளை உள்வாங்குவது மிக அவசியம்.

சைவத்தின் அடிப்படை நூலான-அருள்நந்தி சிவனாரின் சிவஞான சித்தியும் & மனவாசகம் கடந்தாரின் உண்மை விளக்கமும்-இந்நூல் ஆசிரியரின் இரு மாணாக்கர்களும் இயற்றியதே.

அவன் அவள் அது(படைக்கும் பிரமன்+காக்கும் மால்+அழிக்கும் ~உருத்திரன்) எனும் அவை மூவினை ^தோற்றிய திதியே-0.

^தோற்றுவித்த

~காரணன், சிவன், சம்காரன்,

முதல்வன்.

இலயித்த(ஒடுங்கிய) தன்னில் இலயித்தது ஆம்(மீளும்)......

அழிவது (காக்கும்) அத்திதியும் (படைத்த)ஆதியும் (முதற் காரணத்தில்) ஆம்(மீளும்)-1.

ஈறே-முதல் தோற்றங்களை இறுதியில் தன்னுள் அழித்து (அஹதாகக் காலியாக்கும்)-காரணனே முழுமுதற் கடவுள்.

[1]அவையே(யாய்) [2]தானேயாய்(+[3]அவையே தானேயாய்) /உயிர்களுடன் ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும் @ மூவகையில் நிற்கிறான் காரணன்.

[1]உயிர்கள்.

நினைப்போரை மேவி-நினையாரை நீங்கி நிரம்பி நின்றாய்(ஞானப்புகழ்ச்சி:176).

வேறாய் உடனானான்(திருஞான சம்பந்தர்).

அவன் உளம் ஆகில்லான்-உளம் அவனாகமாட்டாது,

அவன் உளமாய் அல்லனுமாம் அங்கு(நிற்க வல்லமை உள்ளவன்)-6.

ஒன்று(ஏகம்) என்றது-ஒன்றே காண்; ஒன்றே பதி/பிரம்மம்-பசுவாம் ஒன்று என்ற நீ-பாசத்தோடு உளை(உள்ளாய்) காண்!(7).

ஒன்றும் நீ யல்லை-(உனை)அன்றி ஒன்று இல்லை (திருவாசகம்:7).

°பிரிப்பின்றித் தானே உலகாம்-தமியேன் உளம் (இறை) ●புகுதல் ;
யானே உலகு □என்பன் இன்று(9)
°நீங்குதலின்றி
●புகுதலால்
□எனக்கூறுவேன்.

<வல்லி(மாயை) (ஆணவ)மல(ம்) கன்ம(மல)ம் ^அன்று உளவாம்(12).
<நங்கை,சிற்சத்தி,அறிவாற்றல்
^நித்தியம்.

[4]யான் [5]எனது என்னும் செருக்கு அற்று-
அவனது சீபாதத்தை அணையும் ஆகலான் (10:1)
[4]உடம்பை பொருளை தான் என எண்ணுதல்/அநாநிய்யத்.
[5] வியாபக அறிவில்-தானே முதல்வன் எனக் கருதுதல்/அந்நிய்யத்.
[4+5] ஞாதிரு ஞேயம் ஞானத்தை-பகுத்துணர இயலும் எனும் மயக்கம்/தற்போதம்.

மூக்குநுனி மேல் நடுவில் முடுகி வந்த முச்சுடரை-
நாக்கினால் மருவிக் கொண்ட நாதர் ஒலி என் பீரே!
கண்மணியே காரணமே கண் நிறைந்த மெய்ப்பொருளே-
வெண்மதியாய்த் தரித்திருக்கும் மேன்மை ஒலி என் பீரே!
(கணியாபுரம் வாலை மஸ்தான் வலியுல்லாஹ்வின்-பீர் முறாதுக் கண்ணி).

14 சைவ சித்தாந்த சாத்திரங்கள் வருமாறு:
திருவுந்தியார்/திருவியலூர் தேவநாயனார்
,திருக்களிற்றுப் படியார்/திருக்கடவூர் தேவநாயனார்,
சிவஞான போதம்/மெய்கண்ட தேவநாயனார்,
சிவஞான சித்தியார்/அருணந்தி தேவநாயனார்,

இருபா இருபஃது/அருள்நந்தி தேவர்,

உண்மை விளக்கம்/திருவதிகை மனவாசகம் கடந்தார்,

&

சிவப்பிரகாசம்,

திருவருட்பயன்,வினா வெண்பா,போற்றிப் பஃறொடை வெண்பா, கொடிக்கவி,நெஞ்சுவிடு தூது,உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்/கொற்றவன்குடி உமாபதி தேவநாயனார்(above 8books).

மெய்கண்ட நூலாசிரியர்கள் @ சந்தனாசாரியார்கள் எழுவர்:

திருவியலூர் தேவநாயனார்,

திருக்கடவூர் தேவநாயனார்,

மெய்கண்ட தேவர்,

அருணந்தி தேவர்,

மறைஞான சம்பந்தர்,

மனவாசகம் கடந்தார்,

உமாபதி தேவநாயனார்.

பதி பசு பாசம் தெளிதல்-பதிபரமே-அதுதான்.....சிவம் என்பர்(சிவப்பிரகாசம்:13).

அறிவானும் தானே!அறிவிப்பான் தானே!அறிவாய் அறிகின்றான் தானே!அறிகின்ற மெய்ப்பொருளும் தானே!(அற்புதத் திருவந்தாதி:20).

அம்மையப்பரே-உலகுக்கு அம்மை அப்பர் என்று அறிக!(களிறு:1).

அநாதியே மறைத்து நிற்கும்-பசுத்துவம் உடையனாகிப்-

பசு என நிற்கும் ஆன்மா(சித்தியார்-4:40).

புணரும் இருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்;

உள் நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்-

உற்றிடும் நற் பசுவருக்கம் என உரைப்பர் உணர்ந்தோர்(சிவப்பிரகாசம்:19).

....முக்தி தரும் பரசிவன் எனத்தகுமே(தாயுமானவர்/ஆசை பெறும்-30).

இல்லது தோன்றாது-உள்ளது அழியாது,

மாறுபட்ட தன்மைகள்-ஒரு பொருளின்கண் இருத்தல் தகாது,

பசு பதி பாசம்-துவக்க முடிவற்ற அநாதியாகும்-என்பதுவே சற்காரியவாத கொள்கைகள்.

சத்=(என்றும்)உள்ளது.

அந்தச் சிவம் அன்றிச் சக்தி இல்லை(சித்தியார்:5:9).

ஞானம்+இச்சை+கிரியை/அறிவு+விழைவு+செயல் @ "தான் அறியப்படவேண்டும்" என நினைக்கும்கால் எழுந்த 3சக்திகளுள்-ஞானசக்தியையே "சிவம்"/ஞானம்/நாதம் என்பர்.இச்சை -சமமாயும், கிரியை-குறைந்தும் வலிந்தும் தொழில்படும்.

13472/43

*All my life, Ghalib, I made this mistake: the dust was on my face, but I kept cleaning the mirror.*தூசி என் முகத்தில் ஒட்டியிருக்க-வாழ்நாள் முழுக்க -நான் கண்ணாடியை சுத்தம் செய்யும் தவறை மேற்கொண்டிருந்தேன்-*mirza Ghalib.*

எழுதப்பட்ட ஞானக்கல்விக் கிரந்தத்தைப் பார்ப்பது-இபாதத்/நமஸ்காரம் ஆகும்(Imam hasan basari/tafseerur raazi-2:209).

இந்த பரந்தபாருலகில் நீ-சித்தர்கள்- ஞானிகள்- அறிஞர்களுக்கு சேவை செய்ய முற்படுக! ● நோன்பு நோற்றலும் இறைவழிபாடும் என் செய்யும்?

Serve only mystics if and when you find- let fast and prayer blast-you need not mind-Omar Khayyam.

தன் அறிவு தன் எதிரில் உள்ள எல்லாவற்றையும்,அறிய முற்படும் அதே அறிவு' தன்னை அறியமட்டும் மிக அஞ்சும்."தன் அறிவால், தன்னை அறிந்தால் அவனே ஈசன்(ஞானவள்ளல் பரஞ்ஜோதி மகான்).

தத்=அது

துவம் =தன்மை/நீ

தத்துவம்=உண்மை,

உத்தம இயல்பு.

**6சமய ஆசிரியர்களும் அளவையும்* :*

உலகாயதம்/பிருகற்பதி(வியாழன்)/காட்சி @பிரத்தியக்கம்.

பௌத்தம்/புத்தன் @சினன்(கிமு ...-483)/காட்சி+அனுமானம்.

சமணம்/மகாவீரர்(கிமு599-527)

சாங்கியம்/கபிலன்/காட்சி+அனுமானம் +ஆகமம்.

நையாயிகம்/அக்கபாதன்/காட்சி+அனுமானம்+ஆகமம்+ உவமானம்.

வைசேடிகம்/கணாதன்/காட்சி+அனுமானம்+ஆகமம்+ உவமானம்+அருத்தாபத்தி.

மீமாம்சகம்/சைமினி/above 5+அபாவமும். (மணிமேகலை-27:77 & சு.செல்லப்பன் உரை).

வித்/அறிக/சுருதி/புலம்/மறை/கேள்வி/எழுதாக்கிளவி/செவிச்செல்வம் @ வேதங்கள் நான்கு தொகுப்புகளை உடையன: ரிக் யஜுர் சாம அதர்வண.

ரிக்=துதி

யஜ்=கூடல் வழிபாடு

சாமம்=தேவ மகிழ்வு.

அதர்வண-சிவ,பிரம்ம

இவை முறையே-தெய்வ/வேள்வி/பண்/மாந்திரீக தொடர்பான பாடல்களின் தொகுப்பாகும்.இவற்றுள்-

முறையே 21,101,1000,9 @ 1131 வெவ்வேறு சாகைகள்/ஸம்ஹிதைகள் உள்ளன.ஒவ்வொரு சாகைக்கும் உண்டான அனுபந்தங்களைச் சேர்த்து கணக்கிட்டால்-சுமார் 16,000 கிரந்தங்களும் 29389மந்திரங்களும் வருகின்றன.எனினும் வேதியர்களின் பொறுப்பின்மையால் -பல அழிந்தன.யஜுரும் சாமமும்-ரிக்கின் கிளைகளே.

வேதகாலம் என்பது-கிமு 8000/6000/4800, பிராம்மணங்களின் காலம் என்பது-கிமு 2500 & உபநிடதகாலம் என்பது-கிமு 1600 ஆகும் (அல்லது அதற்கும் முற்பட்டதாகும்).வேதவியாக்கியானமான-

தஃப்ஸீர்/ஸ்மிருதி/தர்ம சாத்திரம்/பிராம்மணங்களையும் & ஆரண்யகங்களையும்- வேதமாகக் கருதும் இயல்பானது-சர்ச்சைக்குரியது.

ஃபனா பகா @ சொந்த அனுபவத்தில் திளைத்த-ராஜரிஷி/காமில்வலி/முதிர்ஞானி/மாசித்தர்களின் கூற்றுக்களை-சூக்தங்கள்/நனிவசனம் என்றழைப்பர்.இவர்களது நாவின் அசைவெல்லாம்-வேதமே! வேதச்சாரமே!வேதாந்தமே!ஆத்மவித்யையே!

ஜோதியாம் "மஹ்பூபு ஸுப்ஹானியாம்" -

துய்யவன் "ஹைய்யுல் கையூமதானவன்" -ஞானக்குறம்:37.

வேதக் கல்வியின் நோக்கம்-கிருஷ்ணரைப் புரிந்து கொள்வதே (கீதை).

உப=அடுத்து

நி=கீழே

ஷத்= (மாயையை)அழித்தல்/ (பிரமகதியை நோக்கிச்)செல்லல்/ அமர்தல்.

உபநிஷத்/உபநிடதம்/ஆன்ம கிரந்தம்/வேத ரகசியம்/(குருவின்)தொட்டடுத்து தாழால் அருகமர்ந்து(கேட்க)/பணிவுடன் குருவை அணுகுக.

108,144,173,365,1180 என உடநிடதங்களின் எண்ணிக்கை பலவாறாக பதியப்பட்டுள்ளது.எனினும்

ரிக்/21+யஜுர்/109+ சாம/1000+அதர்வம்/50=1180 என்பதையே,மிகுதி ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்(mukthigovanisathu).

^அயம் ஆத்மா ப்ரஹ்ம(மாண்டூக்யம்).

^அஹம் ப்ரஹ்மாஸ்மி/நான் பிரம்மமாகிறேன்(பிருக:1,4,10).

ஆனால் ,இதற்கு முன்பே மகாவாக்கியமாக உபநிடதங்களில் சுழன்றதே-தத்வமஸி.

தத்=(மறைவான)பிரம்மம்

த்வம்=(நேரடி)ஆன்மா

அஸி=வாள்

(வேறுபாடுகளைக் களைந்தால்-இரண்டும் ஒன்றே.தத்வமஸியே ஆதி வாக்கியம்-சங்கரர்).

பரமாத்மாவும் ஜீவாத்மாவாவும்-சத்தில் ஒன்றே.அவன்தான் இவன்-என்ற நேரடி சொல்லாடல்கள் பூரணமன்று. *this is thyself/That are Thou*/ஆன்மாவே பிரம்மம்/நீதான் அது(ஹக்)/ இவன் தான் அவன்-என்பதே கருத்துச் சிதையாத நிலையான அர்த்தம்.

ஆன்மா இறையின் அம்சம்/கண்டம்/பகுதி/அவச்சேதம்...எனக்கருதும் துவைதிகள்-'அ' என்ற பகுதியை இணைத்து-அதத்வமஸி என்று எதிர்மறை அர்த்தத்தில்,இதனை அழைப்பர்(வாசஸ்பதிமிச்ரர்).

ப்ரஞ்ஞானம் த்வஹமஸ்மி தத்வமஸி...(நாராயணகுரு).

ஒப்பற்ற ஈசா வாஸ்யம் @ ஈசம் உபநிடதத்தின் முதல் மந்திரத்தின் பொருள் இதுதான்:

இயங்கும் தன்மையுள்ள இவ்வுலகம்-ஈஸ்வரனால் விரவியுள்ளது ஆதலால்-இதனை 'பற்றின்றி' அனுபவி.

தத்வனம்/பிரமத்தை அறிவேன் என நீ கருதினால்-உனது அறிவு அற்பமே.எவராலும் அறிய இயலாது-என்ற போதம் உள்ளவனால்தான்- இதனை அறிய இயலும். இதை அறியாதிருப்பதே -பேரிழப்பாகும்....(கேனம் உபநிடதம்).

"آخر كلام الشيخ أبي مدين شعيب رحمه الله "   الله حق"

இறையே மெய்-ஷெய்க் ஷுஐப்

அபூமத்யன் வலியுல்லாஹ் அவர்களின் இறுதி வார்த்தைகள்.

13472/44

புகழும் பற்றுமே-வித்யை & அவித்யையின் வழிகளாகும். ஓம்-என்பதன் பொருளை அறிவதே-மானுடனின் மகிமை!சரீரத்தை-தேராகவும் ஆன்மாவை-தேரோட்டியாகவும் புத்தியை-தேர் ஆணியாகவும் மனதை-தேரின் அச்சாகவும் புலன்களை-தேரை ஓட்டும் குதிரைகளாகவும் எண்ணுக!ஆன்மாவே-விழிப்பிலும் தூக்கத்திலும் வியாபித்திருக்கும் மகா சக்தியாகும்!(கடம் உபநிடதம்).

ஆத்மாவிலிருந்தே-பிராணன் உண்டாகிறது,நிழலைப்போல.சைதன்யத்தை இலக்காகிக் கொண்ட ஆன்மா-அதுவாகவே பிறழ்கிறது,ஆறு-வாரிதியாக மாற்றமடைவது போல்(பிரச்னம் உபநிடதம்).

சைதன்யத்தை புரியாமல்-வேத கிரியைகளைக் கைக்கொள்பவர்கள்-

முன்னேற்றமின்றி முடங்குகிறார்கள். தீ ஜுவாலைகள் கணக்கின்றி சிதறுவது போல்- பிரமத்திலிருந்து உணர்வுகள் எழுவதும் ஒடுங்குவதும் நடந்தேறுகிறது.முன்பின் இடவலம் கீழ்மேல் எங்கும்- சைதன்யம் வியாபித்திருக்கிறது.சத்தியம்-ஞானம்-தவம் -"பிரம்மச்சாரியமுமே" - பிரம்மப் பிராப்திக்கான சாதனங்கள்.(முண்டகம் உபநிடதம்).

இல்லறம் எவர்க்கும்- எட்டாது இருக்கும்...சொல்லறம் (ஞானப்புகழ்ச்சி:386).

அயமாத்மா ப்ரஹ்ம/ஆன்மாவே-பிரம்மம்(மாண்டூக்யம் உபநிடதம்).

ஏகமே வாத்விதீயம்/ஒன்றான பிரம்மமே-அத்வைதமானது.

இதயத்தாமரையினுள்-

அமிர்தமான பிரம்மம் பிரகாசிக்கிறது (சாந்தோக்யம் உபநிடதம்).

அஹம்-ப்ரஹ்மாஸ்மி= ஆத்மாதான் பிரம்மம்,

ஆத்மேத் யேவ உபாஸீத்/ஆத்மாவை மட்டுமே உபாசிப்பதாக(பிருகதாரண்யகம் உபநிடதம்).

அனுபவமும் புரிதலும் அறவே இன்றி - அறிதலிலும் புகழிலும் ஓங்கிய மேற்கத்திய ஆய்வாளர்களின் கருத்துக்களை ஆதாரமாகக் கொள்வது குருட்டுத்தனமாகும்.உதாரணம்:

"அன ஹூ" எனும் ஹல்லாஜ்-எனது பீர் ..... அடிமை தாதைக்கு -முத்தி ஆனந்த சொரூபமாக்கும் "அஹதாய்" நிறைந்த நபியே!-முஹ்யித்தீன் மலுக்கு ஞானியாரப்பா(H.1167-1209).

முச்சுடர் முஹ்யித்தீன் ஆண்டகையின் அகமியம் குறித்து கேட்கப்பட்டதற்கு -36வருடங்கள் தனிமைத்தவத்தில் மூழ்கிய இப்னுல்கவ்ம் சித்தரின் பதில் இதுதான்:

நபி வாரிசுகளை-நரகம் தீண்டாது.தக்லீத்/பின்துயர்தல் இன்றேல்-அவர்களும் நரகவாதிகளே,என்பதே அகீதா/கொள்கைக் கோட்பாடு.ஆனால் ஆண்டகையோ?-நரகை அழிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளதாக பண் இசைக்கிறார்கள்.ஆக கட்டுக்குள் சிக்காத அவர்களை-சிறிய மெய்ப்பொருள் எனக் கொள்ளலாம். சிறிய பெரிய...என்ற பாகுபாடு அறவே இல்லாததால் அவர்களே- காரணக்கடவுள்.

ஆனால் தாயுமானசுவாமிகளோ? "கருணாகரக்கடவுள்" என்று போற்றிப் புகழ்கிறார்கள்:

நிராமய நிரஞ்சன நிராலம்ப நிர்விஷய கைவல்யமாம்-

நிஷ்கள அசங்க சஞ்சலரகித நிர்வசன நிர்த்தொந்த நித்த முக்த-

தற்பர விஸ்வாதீக வ்யோம பரிபூரண சதானந்த ஞானபகவ-

சம்பு சிவ சங்கர சர்வேச....அற்புத அகோசர நிவர்த்தி ஆன....குருவே!

(குணமற்ற நோயற்ற களங்கமற்ற பற்றற்ற கட்புலனாகாத மோட்சவடிவமான-

வடிவமற்ற எதனோடும் சேராத அசைவற்ற சொல்லால் விளக்கரிய இரண்டற்ற நித்திய கட்டுண்ணாத-

சொரூப அப்பாற்பட்ட பெருவெளியே! நிறைந்த சதாஇன்புற்ற தெய்வீக-

அன்ப மங்கள நலவே! இறையே!....வியப்பான புலன்களுக்கு எட்டாத துறவே!....ஆசானே!)

பார்க்க: மோனகுரு +குணங்குடி+மச்சரேகை+

முத்துப்பேட்டை பீர் மஸ்தான் பாடல்கள்.

"குருமணியை" .....

ஆயிரம் பேர் உகந்தானும்-ஆரூர் அமர்ந்த அம்மானே!....

அங்கமலத்து அயனோடு மாலும் காணா வனலுருவாம் நின் பாதம் போற்றி!(திருநாவுக்கரசு நாயனார்)

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்- முருகனுக்கும் "உருத்திர" பசுபதிக்கும் அடியேன்-

"செம்மையே" திருநாளைப் போவார்க்கும் அடியேன்...

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன் .....

திரு நின்ற செம்மையே!(சுந்தரமூர்த்தி நாயனாரின்' திருத்தொண்டத்தொகை).

சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகிச் "செழுஞ்சுடராய்த்" தீயாகி நீருமாகிப்- புவனாகிப் புவங்கள் அனைத்துமாகிப் பொன்னாகி மணியாகி முத்துமாகிப்- பவனாகிப் பவனங்கள் அனைத்துமாகி.....

யாவரும் அறிதற்கு அரிய ஆன்றனை-மூவரின் முதலாகிய மூர்த்தியை ...

கருமணியைக் கனகத்தின் குன்றொப்பானைக் கருதுவார்க்காற்ற வெளியான் தன்னைக்-குருமணியை.....

பற்றற்றார் சேர் "பழம்பதியை".....

முந்தித் தானே முளைத்தானை.....

இம் மூவுலகுக்கும் அன்னையும் அத்தனுமாய் அழல்வணா நீ இலையோ?....

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய "செம்மேனி" எம்மான்!(திருநாவுக்கரசு நாயனார்).

சிவன் அவன் -என் சிந்தையுள் நின்றதனால் -அவன் அருளாலே அவன் தாள் வணங்கி....

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா....

ஆதியனே அந்த நடுவாகி யல்லானே....

ஈசன் அடி போற்றி!எந்தை அடி போற்றி!...

வான நாடரும் அறியொணாத நீ! மறையில் ஈறு முன்தொடர் ஒணாத நீ!...

முன்னைப் பழம்பொருட்கும்- முன்னைப் பழம்பொருளே!...

சோதியே! சுடரே! சூழ் ஒளி விளக்கே!சுரிகுழல் பணி முதலை மடந்தை பாதியே!பரனே!

(மாணிக்கவாசக சுவாமிகள்).

ஏகநாயகனை இமையவர்க்கு அரசை-என்னுயிர்க்கு அமுதினை எதில்,

"போக நாயகனை"(சேந்தனாரின்' திருவீழிமிழலை).

13472/45

தனதற்றோழா! சங்கரா! சூலபாணியே! தாணுவே! சிவனே!,

கனக நற்றூணே! கற்பகக் கொழுந்தே! (திருமாளிகைத் தேவரின்' திருவிசைப்பா).

சத்தியாய்ச் சிமவாய் உலகெலாம் படைத்த தனி முழு முதலுமாய்-அதற்கோர் வித்துமாய் ஆரூர் ஆதியாய்(பூந்துருத்தி நம்பிகாடநம்பி).

பொய்யா நரகம் புகினும் துறக்கினும் போந்து புக்கிங்கு-

உய்யா உடம்பினோடு ஊர்வ நடப்ப பறப்ப என்று(சேரமான் பெருமாணாயனாரின்' பொன் வண்ணத்தந்தாதி).

அரியோடு நான்முகத்தோன் ஆதிசுரர்க்கு எல்லாம் தெரியாது-செந்தழலாய் நின்ற ஒருவன்(ஆளுடையபிள்ளையாரின்' திருமும்மணிக்கோவை).

ஆதியாய் நடுவுமாகி- அளவிலா வளவுமாகிச்,

சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி....

கற்பனை கடந்த சோதி!கருணையே உருவமாகி-அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்!(சேக்கிழார் நாயனார்).

முஹ்யித்தீனாம் என் குரு பதம் சிரத்தின் மேற் கொள்வாம்(குணங்குடியார்).

சிவன் அடியே சிந்திக்க-திரு பெருகும் சிவஞானம்,

பவம் அதனை அற மாற்றும் பாங்கினிலே ஓங்கிய ஞானம்,

உவமை இல்லாக் கலைஞானம் -உணர்வரிய மெஞ்ஞானம்(திரு ஞானசம்பந்த மூர்த்த நாயனார் புராணம்).

தத்துவக் குப்பையை தள்ளுங்கடி-வேத சாத்திரப் பொத்தலை மூடுங்கடி -முத்தி தரும் "ஞானவஸ்துவை" வா என்று-மூட்டிக் கும்மி அடியுங்கடி (வாலைச்சாமி சித்தர்:146).

சிவன் எனும் நாமம்-தனக்கே உடைய செம்மேனி அம்மான்(நாவுக்கரசர்).

சிந்தனைக்கரிய சிவமே போற்றி....செம்பொருள் துணிவே! சிவபெருமானே!(திருவாசகம்).

செம்பொருளாகிய சிவம் எனலாமே(திருமந்திரம்).

செம்மேனிப் பேராளன்(காரைக்கால் அம்மையார்).

கிமு 4000 ல் வாழ்ந்த ஹரப்பா நாகரீகத்தார்-யோகிகளுக்கு குருவான சிவனையே வாங்கியதாக-ஆய்வாளர்கள் கணிக்கின்றனர்.

கிமு 2500ல் திகழ்ந்த சிந்துவெளி நாகரீகத்தினர் பயன்படுத்திய-சிவலிங்கங்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கிமு 1500ல் தவழ்ந்த மொகஞ்சதாரோ மக்கள்-(சிவ)சக்தியை வழிபட்டதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்,அவர்கள் புழங்கிய,பொருட்கள்,முத்திரை ,சிலை மற்றும் எழுத்துக்கள் மூலமாக.

ஆக -சிவசோதி வழிபாடே-ஆதியானது என உய்த்துணரப்படுகிறது.

சுடர் விட்டுளன் எங்கள் சோதி(ஞானசம்பந்தர்).

மாசறு சோதியை(நாவுக்கரசர்).

என் மனத்துள்ளே எழுகின்ற சோதியே...

அருவாம் ஒருவனே(மாணிக்கவாசகர்).

சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே(காரைக்கால் அம்மையார்).

தாணுவே- சிவனே!(திருவிசைப்பா).

ஆய பதிதான்-அருட் சிவலிங்கமாம்

(மறைமலையடிகள்).

பிறப்பு என்னும் பேதமை நீங்கச்-சிறப்பு என்னும் ○"செம்பொருள்" காண்பது அறிவு(திருக்குறள்:358).

○சிவன்.

12ஆதித்தர்+11உருத்திரர்+

8வசுக்கள்+2மருத்துவர்=

33தேவர்கள்.

உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கைப்-பலர் புகழ்
●மூவரும்(திருமுருகாற்றுப்படை).

●உலகை படைத்து காத்து அழிக்கும் @ "அயன் அரி அரன்" மூவரும்-ஒருவரே.

செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும்,

மெய் வகையால் நான்காகும்-விதித்த பொருள் எனக் கொண்டே,

இவ்வியல்பு-சைவநெறி அல்லவற்றுக்கு இல்லை என,

மெய் வகையால் பொருள் "சிவன்" என்றருளாலே உணர்ந்தெழுந்தாய்! (சேக்கிழாரடிகள்).

யாம் இரப்பவை-பொருளும் பொன்னும் போகமும் அல்ல,

நின்பால்-அருளும் அன்பும் அறனும் மூன்றும்,

உருளிணர்க்கு அடம்பின் ஒலி தாராயோ?(பரிபாடல்-5:78).

தொடங்கற்கண் தோன்றிய "□முதியவன்" முதலாக(கலித்தொகை:1).

□பிரமன்.

பொதி(கை)யில் மேய புராணனை(அப்பர்-4:15).

தென்னவற் பெயரிய துன்னருந்துப்பிற்-

தொன்(மை) முதுகடவுள் (மதுரைக்காஞ்சி-40:42).

●தென்னவன் மலை எடுக்க(நாவுக்கரசர்-4:43).

●சிவன்,அகத்தியன்,தென்திசைக்கோனான கூற்றுவன்.

தென்திசை ஆண்ட தென்னவன் வாழி....தென்னனை வாழ்த்தி(சிலம்பு-17).

தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன் கோயில்,

நல்ல விருந்தாயினான்(சிலம்பு).

திருவாதிரை நாளுக்குரிய தலைவனாக சிவனையும் & ^திருவோண நாளுக்குரிய தலைவியாக திருமாலையும் வணங்கல்-தென்னிந்தியர்களின் மரபாகும்/March-19 & April-19.

(^or thirukkeddai naazh).

பயனுள்ளதும் அநுபவப்பூர்வமான செயலை நிகழ்த்தும் ஆற்றலைப் பெற்றதுதான்-நிஜமான பொருள். ஆகவே ஆன்மா அல்லாத அனைத்துமே மாயை-தர்மகீர்த்தி.

நமது புலன்களின் மீது -இறையால் வலுவாய்த் திணிக்கப்பட்ட கருத்துக்களே-நிஜமான பொருட்கள்.இவை இறையின் எண்ணங்களாதலால்-இவற்றை மாயைகளுடன் இணைத்து கருதக்கூடாது-பெர்க்லி.

ஒவ்வொருவனும் ஒருவித மாயைக்கு/பிரமைக்கு செயற்படுவதால்-அவனது செயல்களும் பிறவும்- அவனைப்பற்றியவரையில்தான் தொடர்புடையவை-தர்மோத்தரர்.

அசேதனமான/உணர்வேதுமில்லாத அநாதி பிரகிருதி/ஆதிஇயற்கையே உலகத்திற்கு முதற்காரணம்-கபிலர்.

(நம் எண்ணங்களைத் தவிர-வெளியே ஸ்தூலமாக உள்ள பொருட்கள் அனைத்தும்-நிஜமாக இருப்பவையே-சுபகுப்தர்/பாஹ்ய அர்த்த சித்தி).

உலகம் என்பது மாயை.அழியக்கூடியதே பிரதானம்.அழிக்கப்பட முடியாதது-ஆன்மா.இதற்கு மேற்பட்டு இருக்கும்- இறையுடன் இணைவதால்-இறுதியில் உலகம் என்ற மாயை அகன்றுவிடுகிறது-சாங்க்யம்.

கொன்றை(பூமாலை) வேந்தன் (சிவ)செல்வன் அடியினை-

என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே-கொன்றை வேந்தன்.

'சிவாயநம' என்று சிந்தித்து இருப்போர்க்கு,

அபாயம் ஒருநாளும் இல்லை-நல்வழி.

ஆதிபரன்(சிவன்) வாமான் கருணை மணியுதரம் பூத்த-

முதற் கோமான்-நீதிவெண்பா.

முதலில் விரிந்தது "இருட்டு" ,

கும்மிருட்டு-சொல்லொணாத இருட்டு....

ஆதியில் தோன்றியது-இறையின் திருவுள்ளம் மட்டுமே-படைத்தவனின் இதயத்தில் விளைந்த முதல் வித்து அதுவே....

உண்மை அறிந்த யோகிகள்-

உலகம் தோன்றி பல்லாண்டுகள் பின்னரே ஜனித்ததால்-

மெய்ப்பொருளை உணர்ந்தவர் யார்?-அறிந்தும் உரைப்பவர் எவர்?-

எங்கும் நிறைந்த "செம்பொருளே!" (ரிக் வேதம்).

என்றுமே இருந்திராத குரல்கள் இன்று-

"செம்பொருள்" மூலத்திலிருந்து கிளம்பி மெய்யை பேசட்டும்...

கண்ணுக்குத் தென்படுகிற நூலில்-கண்ணுக்குத் தெரியாத இழையைப் பற்றி-எவன் உள்ளுணர்கிறானோ? அவனே மெய்ப்பொருளை புரிந்தவன்-அதர்வண வேதம்.

சித்தன் போக்கு சிவன் போக்கு:58

கொடிநிலை,^கந்தழி, வள்ளி என்ற,

வடு நீங்கு சிறப்பின் முதலான மூன்றும்,

கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே-தொல்காப்பியம்:பொ:27.

^சிவன்

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பா,

முத்தியான முதலைத் துதி செய-திருவிளையாடற் புராணம்.

அருவமும் உருவமுமாகி-அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்,

பிரமமாய் நின்ற சோதிப்-பிழம்பதோர் மேனியாக-கச்சியப்ப சிவாச்சாரியார்.

அருவமாய் உருவமாய் அனாதியாய் ஒன்றாய்,

ஐம்பெரும் பூதமாய் வேறாய்த்,

தெரிவரும் பொருளாய்த் தெரிபவையாகிச்,

செங்கண் மால் 'அயன்' என உரைக்கும்,

இருவரும் காணா மறைப் பொருளாகி-அதிவீரராமப் பாண்டியன்/சிவபரத்துவம்.

துதியும் துதிக்கப்படுவோனும் துதிக்கும் அவனும் உலகீன்ற,

விதியும் விதியை அளப்போனும் இவர்கள் அறியா விழுப்பொருளாம்,

பதியுமாகி எவ்வுயிர்க்கும் உயிராய் அவற்றின் பற்றில்லா,

முதல்வ! நின்னை உணர்ந்து எவ்வாறு?எளியேன் ஏத்த முயல்வதுவே?-காசிகாண்டம்.

"அவன் அவள் அது" எனும் அவை மூவினைமையின்,

தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்,

அந்தம் ஆதி என்மனார் புலவர்-

மெய்கண்டார்/சிவஞானபோதம்.

^ஆறாறும் ஒன்று ஒன்றா(ய்) நாடி உணர்ந்து ஓதில்-அதில் உற்று அறிவாய்,

நின்ற பொருள்தானே காண் நீ-மெய்கண்ட தேவர்.

^ஆறாறு தத்துவமாய்(ஞாபு:527)

^

5பஞ்சபூதங்கள்+

5 பஞ்சேந்திரியங்கள்+

5 கன்மேந்திரியம்+

9 ஒலி தொடு ரூப சுவை நாற்ற வசன தான கமன ஆனந்த-உணர்வுகள்+

4 அகம் அறிவு நினைவு முனைப்பு-கரணங்கள்+

1 உள்ளம்+

5 இரை செரி நீர் மல வெந்நீர்க்-குடல்கள்+

2 வினை=36

- அஞ்செழுத்தே ஆனந்த தாண்டவமும் ^ஆறாறுக்கு அப்பாலாம்,

மோனந்தமா முத்தியும்-மணவாசகங்கடந்தார்.

- كهيعص

சித்தாந்தம்?

சித்த=(பூர்வபகஷ/எதிர் கோட்பாடு)வாதத்தால் சமைந்த,

அந்தம்=முடிவு.

உபநிடத்துக்களின் காலம் கிமு7 ஆவது நூற்றாண்டுக்கும் முற்பட்டது.இந்திய தத்துவநுட்ப @ நவ்ய நியாய தர்க்க சாஸ்திர நூல்கள்-கிபியில் தோன்றியதே.

முழு முதலான அநாதி மெய்ப்பொருளுக்கு-பிரம்மம்/ஆத்மா/ஹக்/சூன்யம்/பாழ்/பரம சத்தியம்/பரிபூரணம்/வெறுமை/பழம்பொருள்/ஞானம்/பிரக்ஞை/அறிவு/கரு/இயற்கை/பிரகிருதி-என உபநிடத்துக்கள் பெயர் சூட்டுகின்றன.

ஆத்மா என்பதுதான்-முழுமுதல் நிஜமானது.எண்ணம் காரணம் கருத்துப்பூரணம் சக்தி- அனைத்திற்கும் இதுவே ஆதாரமாக சமைகிறது.ஆத்மா-தன்னை (படைப்புகளாக)வேறுபடுத்திக் கொள்வதால்-தனது நிஜத்தன்மையை இழப்பதில்லை.முந்தைய நிலைக்கு திரும்பி வரும்போது-தான் தேடிக்குவித்த (விலாயத்@) சுரங்கங்களுடன் -உயர்ந்த நிலையை எத்துகிறது-ஹெகல்.

(இவ்வுலகம்- கற்பனையான அறிவற்றதோர் அருவுருவம் மட்டுமே.உடலானது-ஆத்மாவிற்கு உள்ளுணர்வு சிறையாகும்-பிளேட்டோ).

புத்தமத மூல நூற்களின் 5000க்கும் மேற்பட்ட மொழி பெயர்ப்புகள்-சீன திபெத்திய மங்கோலிய மொழிகளில்-தற்போதும் கிடைக்கின்றன.ஹுரூஃபுல் முதஆதிதாத் @ குறியீட்டு சொற்களால்-இந்த "ரகசிய ஞானம்" மூடலாகவே பாதுகாக்கப்பட்டன.இவற்றின் திரிக்கப்பட்ட தத்துவ கருத்துக்களே-இந்தியாவில் மிகுதம் உலாவுகின்றன. ஏனெனில் பௌதத்தின் முகமூடி தரித்த வேதாந்தமே-அத்வைதம்.

தூய ஆன்மாவே சத்தியமானது, மாறும் உலகம் போலியான தோற்றமே - என்பதே தென்னிந்திய பௌத்தரான 'புதாதபாலிதர்' என்பவரின் வாதம்.இதுவே பழைய கிரேக்க zeno வின் கருத்தும்.ஆனால் தென்னிந்திய பௌத்தரான- 'பவ்யர்' -இதனை நிரூபிக்கும் உத்திகளில் மட்டும் மாறுபடுகிறார்.

தன்னிலிருந்தே உளதாக ஆதல்,

வேறான பொருளிலிருந்து உளதாக ஆதல்,

மேற்படி இரு வழிகளிலும் உளதாக ஆதல்,

மேல்குறித்த மூன்றுக்கும் அப்பாற்பட்டு எதிர்பாரா வழியில் உளதாக ஆதல் @ 4வழிகள் மூலமே-ஒரு பொருளின் இருப்பை அவதானிக்க இயலும்.ஐந்தாவதான சாத்தியக்கூறு அறவே இல்லை.ஆனால் தர்க்கயுக்தியில் இவையனைத்தும் நீர்த்துப்போய்விடும்.ஆக உலகில் எதுவுமே உளதாக இல்லை- (காரண காரியங்களை மறுக்கும்) நாகர்ஜுனர்.

என் நாயகனே! நீ புறப்பட்டிருந்தாய்! நானும் இருந்தேனே!(ஞாபு:83)

ஒரு பொருளுக்கு-அதீனமாக அதைச் சார்ந்த இருத்தல்/உளது ஆதல்-மெய்யான இருத்தல் ஆகாது-ஸ்டெர்பாட்ஸ்க்.

அனைத்துமே நிஜத்தன்மைகளை இழந்தவையே.இதனை அறியாது-பொய்யான பொருட்கள் மீது பற்று வைப்பதால்தான்-மக்கள் கோணலான அறிதலுக்குள் புகுகிறார்கள்-பிரக்ஞா பாரமி.

உலகை-அது உளதான ஒன்றாகவோ அல்லது உளது அற்ற ஒன்றாகவோ கருதாமல்-அது நிலைத்து நிற்காமலும் ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் ஒன்று என கருதுங்கள்-புத்தபிரான்.

தன்னிறைவு உள்ளவன்-நீ.உனது விதியை-நீயே செதுக்கும் கலைஞனும் நீயே- யஜுர் வேதம்.

அப்போது புவியுமில்லை-வானுமில்லை...

இருள் எங்கும் இருள்...

வெப்ப சக்தி -தனியனாய்ச் சனித்தது ...

மருவும் "காமஇச்சை" -முதலாய் முகிழ்த்தது...

அசத்துக்கும் சத்துக்கும் இடைபயில்-உறவு துளிர்த்தது -ரிக் வேதம்.

மூப்பில்லா முதல்வன் 'அக்கினி'

ஞானவாரிதி...

அனைத்திலும் விரவி-'இந்திரியங்களில்' நிலைத்து-சத்து சித்து ஆனந்தத்தால் அமைந்தோன்...

இந்திர விஷ்ணுவின் மூலம்...

சத்திய காரணன்-சாம வேதம்.

சித்தன் போக்கு சிவன் போக்கு:59

*தென்புலத்தார்" தெய்வம்-குறள்

தில்லையுட் கூத்தனே- 'தென்பாண்டி' நாட்டானே-மாணிக்கவாசகர்.

"தென்திசை" துணிந்து நின்று திருப்பதம் அறிகுவாயே!(சிவஞான தீபம்:41)

'தென்திசைக்' கைலாசமாம் பொதிகை வாசனே!

நாதனே!உமது பாதார விந்தங்களை நாடினேன்!முஹ்யித்தீனே(அகத்தீசன் சதகம்:95).

தென்கயிலை =பொதிகை மலை.

"தென்னாடுடைய" சிவனே! போற்றி!(திருவாசகம்).

தென்=தெற்கு,அழகு,இசை,

இருள்,சோலை,செழுமை.

^அத்தனை ஒத்துத் தவத்தோர் பலர்க்கும் அரசன் என்னும்,

வித்தகப் பேறு பெற்று வீறார் பொதிகையில் மேயமுனி(தமிழலரங்காரம்:96)

^சிவன்

ஞாயிறு=அருக்கன், ஆதித்தன்,ஆதவன்,ஆரணன்,எல்லவன், ஏகச்சோதி, உலகின் ஆதரம், சுடர்ப்பிரான், செங்கண்,செஞ்சுடர்,தற்பரன்,தொன்மையோன், புங்கவன், மாமணி,முதல் பரஞ்சுடர்....(ஞாயிறு ஆயிரம்).

மனம் என்னும் மாடு அடங்கின்-...முத்தி வாய்த்ததென்று எண்ணேடா(இடைக்கடார்)

"தான்" அற நின்ற இடம்....சைவம் கண்டாயே(அகப்பேய்ச் சித்தர்)

நாட்டத்தைப் பற்றி "நடுவணை" சேர்வோர்க்கு-வாட்டங்கள் எதுக்கடி?(குதம்பைச் சித்தர்).

சுத்த வேதாந்த "வெட்டவெளியினைத்" தேறு(கடுவெளிச் சித்தர்).

நான்கு வேதம் என்றும்- நூலாம் என்றும்....தேவர் என்றும் -தேவி என்றும் -ரவிதான் என்றும்.....நாட்டினார் உலகத்தோர் பிழைக்கத்தானே(அகஸ்தியர் ஞானம்).

தெய்வம்தான் என்பது ஒன்றுடன் பேதம் உண்டோ? ,

ஓதிய பால் அதில் ஒன்றாகி அதில்,

உற்பத்தி நெய் தயிர் மோராச்சு (கொங்கணச் சித்தர்)

^ஆலம் உண்ட ~கண்டனார் அகத்துளே இருக்கவே-

காலன் என்று சொல்லுவீர்-கனாவிலும் அது இல்லையே(சிவவாக்கியார்)

^நஞ்சு

~சிவன்

ஆதி எனை ஈன்ற குரு பாதம் காப்பு,

அத்துவிதம் பிரணவத்தின் அருளே காப்பு,

நீதியாம் ஆரூட ஞானம் பெற்ற,

நிர்மலமாம் சித்தருடைப் பாதம் காப்பு(காகபுசுண்டர் உபநிடதம் 31/1).

அகட்டினால் ^ஐவர்களை ஈன்றாள் அம்மன்....ஐவருக்கும் குருமூலம் ஆதிமூலம்-கடக்கோடி கற்பமதில் நின்ற மூலம்-கன்னி இவள் சிறுவாலை கன்னிதானே!(காகபுசுண்டர் காவியம் 33/1,29).

^நான்முகன்/மலரவன்,திருமால்/மலரவன்,அரன்,மகேசன்,சதாசிவம்.

^ஈர்எட்டினில் வேகமுடன் கண்டு உணருவீர்,

வாசி முனி மைந்தா! "மருவு" பிரமத்தில் ,

மோசம் வாரா(காகபுசுண்டர் குறள் 16/15-16).

^16ஆம் அகவையில்

தேக பாச பவ பந்தம்-அப்பொருள்,

சிற்றின்பமானது சிச்சீ ~கந்தம்(கஞ்சமலைச் சித்தர்:12)

~நாற்றம்

பந்தம் கடந்தவனே சித்தன்.....நாதாந்த வெட்டவெளியாய் இருக்கும்போதே -நல்லறம்தேடி அலையாதே...பார்த்துத் தெளிந்தவனே-சித்தன்.(கல்லுளிச் சித்தர்/மெய்யறிவுப் பாடல்கள்16:16 & பேரின்பக் களிப்பு 50/29,50).

எங்கும் முச்சுடராகிய சிற்பரத்தில்- "வாலை திரிபரை அம்பிகை" பாதத்தை,

மனதில் கொள்வாய் ஆனந்தப் பெண்ணே&

அகாரம் உகாரத்துடன் பொருந்த-அது ^யகாரமானது அறிந்து கொண்டு,

~சிகாரமான தெளிவினிலே நின்று&

(திரு)மாலும் திரு(மகளு)வும் வசித்திருக்கும் இடம்,

வணங்கி இப்பால் செல்லும் போது,

மேலும் °உருத்திரன் ○ருத்திரி சேவையை-

மேவியே காண்பாய்!

(சங்கிலிச் சித்தர்:1,4,9).

^உயிர்

~சிவன்

○ அரன்

○அரனி

ஆதி பராபரையே!அம்பிகை மனோன்மணியே!சோதிச் சுடரோளியே!சுத்த நிராமயமே!(சத்தியநாதர் பாடல்35/1)

பொன் பூத்த நீலப் புயல் வண்ணனும் பொறிவாய்,

மீன் பூத்த நான்முகனும் வேதாவும்-தென் பூத்த,

செக்கச் சடையானும் தேசு பெறவே உருவாய்,

ஒக்கத் தனி வந்து உதித்த பிரான்(திரிகோணச் சித்தர்:2-3)

Meaning: திருமால்+நான்முகன்+

செங்கதிரோன் +

உருத்திரனும்- உரு பெற வைத்த சிவனே!

திருமூலர் காலாங்கி போகர்-தென்பொதிகைக் ^குருமுனி தன்வந்திரியர்,

கருவூரார் இடைக்காடர் அத்திரி-கலைக்கோடர் மச்சமுனி புலத்தியரே,

சுந்தரானந்தர் கபிலர் கொங்கணர்-சூதமுனி கோசிகர் வேதமுனிவர்,

நந்தீசர் சட்டைமுனிவர் தன்னை-நான் தொழுதேனடி -தாள் பணிந்தேன் (மச்சேந்திர நாதரின் நொண்டி சிந்துப்பாடல்:2-3).

^அகத்தியர்

அருவும் உருவும் திருவும் பலவுமாய் (ஆன)ஆதி சிதம்பரத்தைக்,

கருவும் குருவும் கண்டு அறிந்தோர்கள்-கையால் எழுதுவரோ?....வாய் கொண்டு சொல்லுவரோ?(ஏகநாதர் @ பிரம்மானந்தச் சித்தர்:9)

(நீறு)பூச்சும் வெறும் பேச்சும் பூசையும் கைவீச்சும்-ஏச்சுக்கு இடந்தானே-ஞானம்மா!ஏதொன்றும் இலைலையடி

&

காட்டில் இருந்தாலும் கனக தவம் செய்தாலும்,

காட்டில் குரு இல்லாமல்- ஞானம்மா!

கண்டறிதல் ஆகாதே(பிண்ணாக்குச் சித்தர்:11,16)

ஆயிரம் பேர் சித்தருடன் அனுதினமும் பாடி-ஆனந்தத் திருநடனம் ஆடுவோமே கூடி...சித்தி பெற்ற முத்தர்களை எத்தினமும் அறிவோம்-சீவகலை இன்னதென்று நாட்டமுடன் தெரிவோம் (வகுளி நாதர்@ மௌனச்சித்தர்:5,10).

ஆதிசிவமான குரு விளையாட்டை -யான்,

அற்ந்துரைக்க வல்லவனோ? விளையாட்டை,

சோதி மயமான சத்தி என் ஆத்தாள்-சுய,

சொரூபத்து அடங்கி நின்ற விளையாட்டை

&

வாலையான சிறு பெண்ணாம்-வயது வந்ததோர் பெண்ணாம்,

^பாலை மங்கைதானடா-பருவம் வந்த ~வழலைதான் (கடேந்திர நாதர்:1,40)

^அழகு

~வழலை பாம்பு போன்று பளபளக்கும்.

وَثِيَابَكَ فَطَهِّرْ

நீர் உமது ^ஆடைகளை சுதூய்மைப்படுத்திக் கொள்வீராக!(குர்ஆன்/74:4)

^அடிபணிதல்,இறை நம்பிக்கை,உள்ளம்,ஆத்ம ஞானம்.

முன்னாள் இறைவன்-அருள் நந்திதனுக்கு இயம்ப,

"நந்தி" -கோதில் அருள் சனற்குமாரர்க்கு கூற,

குவலயத்தின் அவ்வழி-எம் குருநாதன் கொண்டு (சிவஞானசித்தி).

பிரமாணங்கள் தோற்றுவிக்கும் மாயத் தோற்றமும்-அறிவுக்குத் தென்படும் பொருட்களின் பொய்த் தோற்றமும்-கனவில் காண்பது/ஜாலவித்தை/கானல்நீர் போன்ற மாயமே(கௌதமர் சூத்திரம்).

பொருட்களை உள்ளது உள்ளவாறே அறிந்து கொள்வதானது-கனவில் அதனை அறிந்துகொள்வது போன்றதே.அறிதல் & அறியும் பொருள் என்ற இரண்டின் இயல்புகளும்-ஒன்று சேர்ந்தே அமைந்துள்ளன(சுபகுப்தர்).

ஞாபகத்தில்-நமக்கு கடந்தகாலம் தெரிகிறது,ஆசையில்-வருங்காலம் புலனாகிறது.இதற்கான அடித்தளம்:ஏதோ ஒன்று உளதாக வேண்டும்-என்ற எதிர்பார்ப்புதான்.யோகிகளால்-

எதிரே இல்லாதவற்றையும் பார்க்க இயலும்(குமரிலர்).

(இதனை செய்யலாம்/செய்வேன்-என ஒன்றை நினைப்பதுவும், நினைவில் வருவனவும்-ஏற்கனவே கண்டுணர்ந்தவைதான்,நிஜமானதுதான்-வாத்ஸ்யாயனர்).

(அறிவு இல்லை/அஞ்ஞானம் என்பதும்-ஒருவனை செயல்பட வைக்கும்-பிரபாகரர்).

உள்ளுணர்வுதான்-ஆத்மா,ஆத்மாவின் சாரம்.ஆத்மா மட்டுமே-நிஜமானது,பௌதீக உலகம்-நிஜமானதன்று-அத்வைதம்.

பரிணாமங்கள் தோன்றுவதற்கு முந்திய வெளிப்படா நிலையே-அவ்யக்தம்/குன்குதாத்.அவ்யக்தத்திலிருந்து முதலில் துளிர்த்தது-மஹத்து/அறிவு/நூர்.இதிலிருந்தே 'நான்' என்ற உணர்வு தோன்றியது.தொடர்ந்து: மனம்-

ஐம்புலன்கள்-உறுப்புக்கள்-பஞ்சபூதங்கள் தோன்றின...

பிரபஞ்சம் தோன்றுவதற்குக் ஆதாரமான-ஆதிப்பிரகிருதி/பிரதானம்- மட்டுமே ஜடமான ஒன்று.ஸத்துவம்/(புலப்படுத்தும்)உணர்வு- ரஜஸ்/சக்தி- தமஸ்/மந்தம் @ முக்குணங்களால் ஒன்றுக்கொன்று விஞ்சாத சமநிலையில் இது தொடங்கிற்று.இதன்பிறகே-ஓய்ந்திருந்த பிரகிருதி-கணநேரம்கூட ஓயாமல் மாறிக்கொண்டே சுழல்கிறது.பல்கிப்பெருகும் அது இறுதியில்-சமநிலைக்கும் ஓய்வு நிலைக்கும் மீண்டுவிடுகிறது....

பிரதானம் என்பதிலும்-உணர்வுடைய ஆத்மாக்களான பறபல ஆண் புருஷர்கள்/ஞானங்கள் உண்டு.

-சாங்கிய சாத்திரம்/bn seal,stcherbatsky,dharmakeerthi,garbey,doss Gupta,shuklaaji.

பிரகிருதியின் முக்குணங்களில் சமநிலை குலைந்து-ஏற்றத்தாழ்வு நிலையை எய்தும்போது-செயற்பாடுகள் உருவாகின்றன @ சாங்கியத்தையும் & உடலே ஆத்மாவும் உணர்வும் ,ஆத்மா சுவனம் நுழையாது @ லோகாயதர்களின் கொள்கைகையையும், சங்கரர் மறுக்கிறார்(rhysdavids,haripathrar,

gunarthanar,jayanthapattar,vasaspathi mithrar,naadavar).

இறந்தால் அங்கண்-நீதிபெறும் உயிர்தனையோ? விண்ணோர்,

நெறிசேர் உடலையோ? கேட்பார்? பின்னே(ஞாபு:24).

தொடக்கத்தில் இருந்த/எல்லாம் அறிந்த அந்த ஆதிமூல "ஸத்" :நான் பல்கிப் பெருக வேண்டும் என நினைத்து 'அக்கினியை'/ஒளியை உண்டாக்கியது.அக்கினியிலிருந்து நீரும் & நீரிலிருந்து உணவும் படைக்கப்பட்டன (உத்தாலகர்).

உலகம் முழுக்க கொழுந்துவிட்டு எரிகிறது,அதில் புகை கவிழ்ந்திருக்கிறது,இந்த நிலையற்ற ஓட்டத்தால்-உலகம் முழுதுமே நடுங்குகிறது.இந்த உலகின்பொருட்கள்-எவ்வாறு இல்லாமல் போகின்றன,என ஞானத்தில் காண்கிறானோ? அவனது கண்ணில்-அது இருக்கிறது என்பதும் இல்லை.(புத்தபிரான்).

தடையின்றி ஓடும் நீர் பீரவாகமும் & தன்னையே விழுங்கும் திரிச்சுடரும்-உலக இருப்பின் இருத்தலுக்கான உதாரணம்(heraclitus).

மகாபுருஷர்களிலும் மூன்று பிரிவுகள் உண்டு:

1.உருவம்/பொருளாக இருப்பவை/உடல்.

2.அருவம்/பொருள் தன்மை அற்றவை/மனோலயம்.

3.அருவுருவம்/வடிவம் அற்றவை/உணர்வு.

(சொருபம்-மெய்ப்பொருளுக்குரியது)-புத்தர்.

அருப ரூப சொருப-ஆதி அநாதி சோதி ஒன்றாகவே(ஞாபு:375)

உருவுமிலார் அருவுமிலார்-உருஅருவும் ஆனார்-வள்ளலார்.

அருவாகி உருவாகி அருவுருவம் அற்ற-அறிவு ஆகார மோனமாகி-மு.சதகம்:23

சோதியாய் தோன்றும் உருவமே-அருவாம் ஒருவனே(திருவாசகம்:7).

பிறப்பென்னும் பேதைமை நீங்கக்-சிறப்பென்னுஞ்,

(மகாதவசி) "செம்பொருள்" காண்பது அறிவு(குறள்:27).

பொய் கண்டார் காணாப்- புனிதமெனும் "அத்துவித" -

மெய்கண்ட நாதன் அருள் மேவும் நாள் எந்நாளோ?(தாயுமானவர்:எக:4).

பானைக்கு அசல் காரணம் மண் போல்-உலகின் முதற்காரணம் (அதிசூக்குமப் பொருளான)மாயையாகும். உலகில் நிகழும் காரியங்கள் அனைத்தும்-மாயையின் காரியமேயாகும். இந்த (தத்துவ) காரியங்களை-தனு/பருவுடம்பு-(அந்தக்)கரணம்/மனம்-

புவனம்/இயங்கும் இடம்-போகம்/நுகர்ச்சி @ என சைவசித்தாந்தம் நான்கு தூலப்பொருட்களாகப் பிரித்து & தத்துவங்களுடன் இணைத்துப் பேசும்.

உலக சக்திகளின் தொகுப்பே-மாயை எனப்படும்.

A.சுத்த/ஊர்த்துவ/மகா/விந்து/சூக்குமம்-

B.அசுத்த/அதோ/மிச்சிர/மோகினி/மயங்க/தூலம்-

C.(மூலப்)பிரகிருதி/மான்/மகத்/அவ்யக்தம்/மிகவும் தூலம்

@ மாயையை மூன்றாகப் பகுப்பர்.

14372:60/சித்தன் போக்கு சிவன் போக்கு.

Dr muhiyideen katheeja qathiri

A.சுத்த மாயையின் காரியங்களை- 'விருத்தி' என்றும் & அசுத்த மாயையின் காரியங்களை "பரிணாமம்" என்றும் அழைப்பர்.துணி-குடிலாக மாறுவதை விருத்திக்கும் & மண்-பானையாதலை பரிணாமத்திற்கும் உதாரணமாகக் கொள்ளலாம்.

சுத்த மாயையால் தோன்றும் -பொருள் பிரபஞ்சங்களே -ஐந்து சுத்த சிவ தத்துவங்களாகும்:

1.சிவம்/நாதம்,

2.சத்தி/விந்து,

3.சதாசிவம்/சதாக்கியம்,

4.ஈசுரம்/மகேசுரம் ஃ,

5.சுத்த வித்தை/வித்தியேசுரம்.

1=சொருபம்/தடத்தநிலை/தடத்த சிவன்.

2=அருவம்/ஒடுக்கநிலை/இலய சிவன்.

3=அருவுருவம்/போகநிலை=போக சிவன்.

4,5=உருவம்/அதிகாரநிலை/அதிகார சிவன்.

B.அசுத்த மாயையினால்:ஒன்றிலிருந்து அடுத்தடுத்து தோன்றும் ஆன்ம சக்திகளான- 7வித்தியா தத்துவங்கள் வருமாறு:

(முக்)காலம்/கிரியா சக்தி,

நியதி/நுகர்தல்/வினைப்பயன்,

கலை/கலித்தல்/(ஆணவமலத்தை) நீக்குதல்,

வித்தை/ஞான சக்தி,

அராகம்/இச்சா சக்தி,

புருடன்/போகம்/மூலப் பிரகிருதி(C),

(காரியப்படாத) மாயை.

C. மூலப்பிரகிருதியை தொழிற்படுத்துதலை-24ஆன்ம தத்துவங்களாக விளிப்பர்:

(4அந்தக்கரகணம்) சித்தம், புத்தி, அகங்காரம், மனம்

+

(5ஞானேந்திரியங்கள்) மெய் வாய் செவி கண் மூக்கு

+

(5கன்மேந்திரியங்கள்) மொழி கால் கை எருவாய் கருவாய்

+

(5தன்மாத்திரைகள்) சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம்

+

(5பூதங்கள்) பிருதுவி அப்பு தேயு வாயு ஆகாயம்.

புருட தத்துவத்தில்-நின்றே பிரகிருதி புவனங்களை ஆளும். புருட தத்துவத்தை இதயம் போன்றும்,(வெளிப்படாது நின்ற) அவ்யக்தமாகிய பிரகிருதியை இடப்பாதியாகவும், (வெளிப்பாட்ட) வியக்தமாகிய குணதத்துவத்தை வலப்பாதியாகவும் பாவித்து அவற்றிற்கு முறையே: "உருத்திரன்-மால்-அயன்" @ குணமூர்த்திகளை தோற்றுவிப்பர்.

சிவனின் வலப்பக்கம் பிரம்மனும், இடப்பக்கம் மாயோனும், இதயத்தில் உருத்திரனும் தோன்றியதாக, புராணங்களின் கருத்துக்கள்-இதன் தாக்கமே.

5பூதங்கள்+5கன்மேந்திரியங்கள்+5ஞானேந்திரியங்கள்=

*" *தூல சரீரம்* "/அன்னமய சரீரம்(food+water).*

*5தன்மாத்திரைகள்+3அந்தக்கரணங்கள்(மனம்-அகங்காரம்-புத்தி)=" *சூக்கும சரீரம்* "/பிராணமய சரீரம்(oxygen/rooh).*

1அந்தக்கரணம்(சித்தம்)+7 வித்தியா தத்துவங்கள் =

*" *பர சரீரம்* " /குண சரீரம்/மனோமய சரீரம்/கஞ்சுக சரீரம்/காரண சரீரம்.ஆக சரீரங்கள்-மூன்றாகும்.*

இதில்:

கஞ்சுக(cloth)/விஞ்ஞானமய(ஆன்ம அறிவு+ஆன்ம இச்சை)

+

*காரண(reason) சரீரம்/ஆனந்தமய சரீரம் -இரண்டையும் தனியாகப் பிரித்து 3+2=5 சரீரங்களாக/ *ஐங்கோசங்களாகவும்* விரிப்பர்.பீர்முஹம்மது அப்பா அவர்கள்:காரண+ஆனந்தமய சரீரத்தை-ஒன்றாகக் காண்கிறார்கள்.*

*உண்ணுடல் எடுத்த *நாலும்* -ஒன்றுபட்டிருக்கும் நாளில்,*

மண்ணுடல் அழிந்தால்-அந்த இடத்தினில் தரித்து நிற்கும்(பீரப்பா/திநெநீ:68).

சூக்குமம் காரண மகாகாரணத்தோடு-

(சரீரம்) துலங்கிடற்கு அருள் புரியவும்,

ஏற்றபடி ஆன்ம வடிவு என்முகத்து எதிர்நின்று - இலங்கிடற்கு அருள் புரியவும்(மாசித்தர் குணங்குடி மஸ்தான் ஸாஹிப்/அச:65).

தூலசரீரம் நீங்குவதே- உலகியலில் இறத்தல் ஆகும்.பிற சரீரங்கள் யாவும்-இறையுடன் கலக்கும் -முக்தி காலத்தில் நீங்கும்.

தூலசரீரம் கழன்றதன் பின்னர்-

புண்ணியர்-பூதசார சரீரத்தையும் & தீயவர்-யாதனா சரீரத்தையும்-வானுலகில் எடுப்பர்.இங்ஙனம் இரு வேறு உயிர்களாக பிரிப்பவனையே-,தென்திசைக் கடவுளான "கூற்றுவன்" என்பர்.

உறங்குவது போலும் சாக்காடு-உறங்கி,

விழிப்பது போலும் பிறப்பு(குறள்:339).

வானில் தனது நிழல் உருவ சாயலைக் காணும்-சாயாபுருஷ தரிசனம்,சரக்கலையில் உண்டு.

60தாத்துவிகம்+36 தத்துவங்கள்/உண்மைகள்=96 தத்துவங்களின் கூறுகளை: எமது "ஞானப்புகழ்ச்சியின் 96தத்துவங்கள்" என்ற pdf(no 15061)ல் கண்டு தெளிக.

"பன்மார்க்கச்" சிவனுடனாம் பெற்றி ஞானப்-

பெருமையுடையோர் சிவனைப் பெறுவார் காணே!...

யார்க்கும் ஈனமிலா ஞானகுருவே குருவும்- இவனே ஈசனவன்தான் என்றும் இறைஞ்சி ஏத்தே!

(சித்தியார்/8:22, 12:5).

முன்செய் தவத்தின் முறையின் வழியே-

முடிவில்லா "மெய்ஞ்ஞானம்" கொண்டல்லோ வந்தேன்(ஏனாதி சித்தர்).

ஆணவத்தோடு அத்துவிதமானபடி "மெய்ஞ்ஞானத்"-

தாணுவினோடு அத்துவிதம் சாரு(ம்) நாள் எந்நாளோ?(தாயுமான அடிகள்).

اللهم أرني حقيقة الأشياء كما هي

இறைவா!எல்லாப் பொருட்களின் யதார்த்தத்தையும்- அதன் (உண்மையில்) உள்ளபடி காட்டு!(இமாமுல் அஃளம் நாயகம்)

பொருள் இயல்புகளை -உள்ளவாறு உணரும் தத்துவத்தின் குறியீடே-

"உண்மை ஞானம்" என சைவசித்தாந்தம் பகரும்.

தத்துவம்/பாசம்,ஆன்மா/பசு, சிவம்/பதி @என்பதன் அடிப்படையில்-உண்மை ஞானத்தை:

தத்துவரூபம், தத்துவ தரிசனம் தத்துவ சுத்தி,

ஆன்ம ரூபம்,ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி,

சிவரூபம்,சிவதரிசனம்,

(சக்தியை அறியும்)^சிவயோகம்,

(சிவத்தை அறியும்)~சிவபோகம் @பத்தாகப் பகுப்பர்.

(ரூபம்=கேட்டல்,அறிதல்,

தரிசனம்=ஐயமாக அறிதல்,ஓர்தல்,சிந்தித்தல்,

சுத்தி=தெள்ளென அறிதல்,வியப்புறல்,தெளிதல்.

^சிவனுடன் இன்புறுதலால்-சுத்தியை-

யோகம் எனப்பட்டது).

~நிட்டை கூடல்.

14372:61/சித்தன் போக்கு சிவன் போக்கு

பழனி போகர் சித்தர்

"ஜெனன சாகரம்" - என்ற நூலில் கூறுவதாவது:

மிலேச்சர் உண்டானவை கூறல்:

விதமான "துலுக்கர் மதம்" ஒன்று உண்டாக்கி,

ஆரப்பாவம் மதத்தினில் நிறைந்து நின்றே....

'தான்' என்ற ஆதியிலே நந்தி ஆனேன்,

தவம் செய்து சித்தன் 'அயன்' மாலும் ஆனேன்,

வேனென்ற சுப்ரமணிய ரூபம் ஆனேன்,

விண்ணவர் சேனாபதி இந்திரனும் ஆனேன்,

நான் என்ற கிருஷ்ண வடிவாகி நின்றே,

**நபி ரூபமாய்* உலகம் எங்குமானேன்!*

வானென்ற பராபரமாய் நின்று கொண்டேன்,

*மாநிலத்தில் *போகர்* என்று வாழ்ந்திட்டேனே!(323-324)*

Pdf 14400-14402/faqrudeen valiullah @ bogar

நிலையாத மாயை நிலை குலைய-நிலைகுலையாத நெறி தந்த ஞானகுருவை....

பற்பலம் விதம் கொண்ட 'விந்து' நாதத்துள்-

பதிந்து முளை பருவமாகி....

கங்குல் பகலற்ற அருள் தங்கும் எங்கெங்கு நிறை-

காரணக் கடவுளாகி....

சித்தனே! சித்தர் தொழும் முத்தனே! செவியில்-

உபதேசம் எற்கு அருள் புரியவும்...

சித்தர்கள் கணம் எல்லாம் எனக்கு அருள் இரங்கவும்-

சித்தம் வைத்து அருள் புரியவும்....

செத்த சவம் என்னக் கிடக்கவும் -

சாகாது செத்திடற்கு அருள் புரியவும்...

மண்ணுள்ள சித்தரொடு தவராஜ சிங்கமே!-

வர வேண்டும் என்றன் அருகே....

போதும் என வாழ்வது-

"உன் சித்தம் என் பாக்கியம்" எப்போதும் எற்கு அருள் புரியவும்...(குணங்குடி அப்பா)

பூதங்கள் ஐந்து,

புலன்கள் ஐந்து,

கர்மேந்திரியங்கள் ஐந்து,

மனம் ஒன்றொடு,

ஆகக் கலைகளோ? "பதினாறு"-பிப்லாதர்.

(முப்பத்து)ஆறாவது தத்துவம் எது?...

ஆறாறுக்கு அப்பாலாம் மோனந்தமாம் முத்தியும்(மணவாசகங்கடந்தார்).

'ஆறாறும்' ஒன்று ஒன்றா நாடி உணர்ந்து ஓதில்-

அதில் உற்று அறிவாய்-நின்ற பொருள்தானே காண் நீ(மெய்கண்டதேவர்).

'ஆறாறு' தத்துவமாய் ஐயிரண்டு வாயுவாய்...

பண்ணுமறை வேதப் "பழம்பொருளே" எண்ணரிய,

மெய்ஞ்ஞான வித்தே!விளக்கொளியே! மெய்ச்சுடரே!(மீனாட்சியம்மை கலிவெண்பா).

5ஞானேந்திரியங்கள்+5கர்மேந்திரியங்கள்+1மனம்+5புலன்கள்+

8பிரகிருதி சடங்கு (பிரகிருதி+மஹத்+அகங்காரம்+பஞ்சபூதம்)=24 தத்துவங்கள்.

செழுஞ்சுடர் நற் சோதிமிக்க உருவே!

என் உறவே!என் ஊனே!

ஊனின் உயிரே!உள்ளத்தின் உள்ளே நின்ற "கருவே" (திருத்தாண்டகம்)

செண்டாடும் விடையாய் சிவனே! என் செஞ்சுடரே!...

மன்னே! மாமணியே!மழபாடியுள் மாணிக்கமே!(சுந்தரமூர்த்தி சுவாமி).

ஏத்துகின்ற ^காயத்திரி இசைத்திடும் அந்தத்-

தோத்திரம்தனை ஒரு தரம் துதித்துளோர் எல்லாம்-

பாத்தனாகிய சிவன் திருநாமங்கள் அனைத்தும்-

நாத்தழும்பற வழுத்திய பலத்தை நண்ணுவரால்...

இந்நூலே பரப்பிரமம்...

இந்நூலால் அத்வைதம் ஒன்றே தோன்றும்(ரிபுகீதை).

^அயன் மனைவி

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்,

சகல உயிர் சீவனுக்கும் அதுதானாச்சு,

புத்தியினால் அறிந்தவர்கள் புண்ணியோர்கள்,

பூதலத்தில் கோடியிலே ஒருவர் உண்டு...

தெவிட்டாத மவுன 'சிவயோகம்' செய்தார்(அகத்தியர் ஞானம்).

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருளது ஆகித்,

தொண்டர்கள் "குருவுமாகித்" துகளறு தெய்வமாகி (சண்முக கவசம்).

ஆதியில் இவ்வுலகம்-பிரம்மமாக இருந்தது.பிரம்மம் மட்டுமே இருந்தது.அது பரிணாமம் பெற்றிருக்கவில்லையாதலால்- சிறந்த வடிவங்களை எடுக்க முனைந்தது.இந்திரன் வருணன் சேமன் ருத்ரன் ஈசன்...ஆகியோரும்-அந்த வடிவத்தினரே(பிரஹதாரணியக உபநிடதம்).

ஞானம் என்பது அதியியற்கை என்ற இயற்கைக்கு அப்பாற்பட்டது பற்றிய அறிவே(பிளேட்டோ).

வைதீக மரபுப்படி-மூன்று வேத விரோதப்பிரிவுகள் மட்டுமே உள்ளன:

பொருள் முதல் வாதம்,பௌத்தம்,சமணம்(புலனடக்கம்/துறவு).

வைதிகத்தின் 6 தத்துவங்கள்:

பூர்வ மீமாம்சை,உத்தர மீமாம்சை(வேதமுடிவு), சாங்கியம்,யோகம்,நியாயம்(தர்க்கமுறை),வைசேஷிகம்.

ஞானமும்/இர்ஃபான்/மோட்சம் & கன்மமும்/யங்ஞும்/சடங்கு/செயல்பாடும்-ஒன்றுக்கொன்று நேர் எதிரானவை.செயல்பாடு-ஞானத்திற்கு தடையாகவே அமைந்துள்ளது.சுருதி/வேதவாக்கிற்கு உட்பட்டு சிந்தித்தறிதல் பயனளிக்கக்கூடியதே-சங்கரர்.

(Since கருமம்-இருமையை தோற்றுவிக்கும்).

மெய்ப்பொருள்-மனத்தை கடந்தவன் எனத்தெரிந்தும்-அவனை அறிய முற்பட்டேன்!,அவன் எழுத்தில் அடங்கக்கூடியவன் அல்லன்-எனப்புரிந்தும் பாடல்களால் அவனை விளக்கினேன்!,அவன் எங்கும் வியாபித்திருக்கிறான்-என உணர்ந்தும் அவனை தேடி அலைந்தேன்!எனை மன்னித்துவிடு மண்பாளா!(ஆதி சங்கரர்).

தேகம் அழியாத நற்பாகம் படைத்த -

மாசித்தர்கள் அந்த கோடி...

சிவஞான அருள் நேசர் கோடானு கோடி-

உபதேசிகள் அநந்த கோடி(மு.சதகம்:91,99)

ஆதி அந்தம் கடந்த உமையாள் தன் பாதம்,

அகண்ட பரிபூரணமாம் ஐயர் பாதம்,

சோதி அந்தம் கடந்த கணபதியின் பாதம்,

தொழுது இறைஞ்சிக் கரம் குவித்துப் போற்றி செய்து,

ஆதி அந்தம் கடந்த "நந்தி" பாதம் என்றும்,

வாலை மனோன்மணியம்மை பாதம் என்றும்,

ஓதி அந்தம் கடந்து அண்டம் இரண்டதாக,

ஒன்றுமறியா அறிஞன் உரை செய்தானே (சேகனாப் புலவர்).

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்,

ஆறு கோடி நாராயணர் அங்ஙனே,

ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்,

ஈறு இலாதவன் (சிவப்ரம) ஈசன் ஒருவனே(அப்பர்/தேவாரம்/5:100).

14372:62

14372:63

சிவனைக்குறித்து கம்பர் இராமகாதையில்

:கவிமொழியாக 168இடங்கள் உட்பட 395 இடங்களில் பாடுகிறார்:

சிவன்,சிவனார்,ஊழி முதல்வன்,முழுமுதற் கடவுள்,ஈறிலான், ஊழி நெருப்பின் உருத்தன்,ஊழியின் உருத்திரன்,உமைக்கு ஒரு பாகன், செஞ்சடைக் கடவுள்,தேவதேவன், பரஞ்சுடர் ஒருவன்,மூவா முதல் ஈசன்,கண்ட சங்கரன்,ஏறு அமர் கடவுள்,முக்கண் தேவன்,பித்தனாகிய ஈசன்,இருண்ட கண்டத்து அமரர்கோன், தாணு....

4336பாடல்களைக் கொண்ட-(வைணவர்) வில்லிப்புத்தூர் ஆழ்வாரின் வில்லியில்:சிவனைப் பற்றிய குறிப்புகள் 270இடங்களில் காணக்கிடக்கின்றது:

சங்கரன்,சிவன்,அரன்,ஆதி,ஆதிபகவன்,

உருத்திரன், கண்ணுதற் கடவுள்,மாது ஒரு பாகன்,உம்பர் நாயகன்,யார் அடி படாதவன், பிறப்பிலி, இறப்பிலி, பசுபதி அருளிய பகழி, பவநாசகக் கடவுள்,ஞான ஒளிர் மேனியன், உமை ப(ர்)த்தா,ஐயன்,செழுஞ்சுடரோன்,தாணு,நிமலன்,புராரி, வாதி,வாமன்,வேடன்...

நாள் நட்சத்திரம் லக்கின நுட்பங்கள் தெரியார்க்கு வேண்டி-உமாதேவிக்கு சிவனால் கற்பிக்கப்பட்டதே- "சரநூல்" கலை.அகத்தியர் ஔவையார் பூரணானந்தர் ஸூஃபிபீர்முகமது போன்றவர்களால்-இதுகுறித்து பாடல்களால் விளக்கமாக பாடப்பட்டுள்ளது. தவிர காலசரம் ,சூஷ்ம சரம்,மூலசரம் எனும் பெயர்களிலும் சரநூல்கள் உள.

*கடலைவிட பரந்த இக்கலையின் மூலம்- *பிறை சம்பந்தமான குறிப்புகளை* கணிக்கலாம்.*

இடகலை=இடது நாசி/சந்திர/பெண்.

பிங்கலை =வலது நாசி/சூரிய/ஆண்.

சுழுமுனை=இரு நாசிகளிலும்/அக்கினி....ஓடும் சுவாசம்/சரம்/அஜபா.

சரம் ஓடும் துளைக்கு-பூரணம் என்றும் & எதிர் துளையை-சூனியம் என்றும் பகர்வர்.

**சுக்கிலபட்சமாகிற அமாவாசையின் பிரதமை* முதல்(துவிதியை-துரிதியை) 3நாளைக்கு வளர்பிறை காலையில் தொடர்ச்சியாய்-இடகலை ஓடும்.*

சதுர்த்தி முதல்(பஞ்சமி-சஷ்டி) 3நாளைக்கு பிங்கலை நடந்தேறும்.

இங்ஙனம் 3+3 என -சுக்கிலபட்சத்தில் மாறி மாறி ஓடும்:

சப்தமி-அஷ்டமி-நவமி=இடகலை,

தசமி-ஏகாதசி-துவாதசி=பிங்கலை,

திரயோதசி-சதுர்தசி-பௌர்மணி=பிங்கலை.

*Similarly *கிருஷ்ணபட்சமான பௌர்ணமிக்கு அடுத்த பிரதமை முதல் (துவிதியை-திரிதியை)* வரை-தேய்பிறை முதல் 3 நாளைக்கு காலையில் தொடர்ச்சியாக பிங்கலை ஓடும்.அடுத்த 3நாளைக்கும் (சதுர்த்தி-பஞ்சமி-சஷ்டி) இடகலை நடந்தேறும்.இங்ஙனம் கிருஷ்ண பட்சத்தில் 3+3 என மாறி மாறி ஓடும்.*

திங்கள்+புதன்+வெள்ளி காலையில் இடகலை ஓடும்.இதர 4நாட்களில் பிங்கலை ஓடும்.ஆனால்-

**வளர்பிறை வியாழனில் மட்டும்-சந்திர* /இடகலை ஓடும்.இதனை வைத்தும் பிறை கணக்கை ஒப்பு நோக்கலாம்.*

பஞ்சாங்கப்படி:அமாமாசைக்கு அடுத்த பிரதமை திதி முடிந்து-பகலின் இறுதியில் 3மணி நேர கால அவகாசம் இருந்தால் மாத்திரமே-(மூன்றாம் பிறை@) நிலவைக் காண இயலும்.

இந்த 2025 வருட ரஜப் மாதம்29 (30.1.2025 thursday)மாலை -பிரதமை முடியும் முன்பே-பிறை தெரிந்ததாக தமிழகத்தில் அறிவித்து விட்டனர். உண்மையில் தமிழக கேரளப் பகுதிகளில் பிறை தெரியாததால்-600km தூரமுள்ள ஆந்திர பிறையைக் காரணம் காட்டி முடிவு செய்துள்ளனர்.

வெய்யோன் சிவனின் சிகப்பு நிற சுழுமுனை நேரம்-தியானம் நிட்டை சமாதி ஃபனா யோகத்திற்கு உகந்தது.

ஆரணத்தில் அரும் பொருளாய் உறைந்த நாதி,

அகண்ட பரிபூரணமாய் நிறைந்த சோதி,

"காரணத்தின் அகக் காரணனைத்" துதித்து நாளும்,

கதி முஹம்மது இறஸுலைக் கருத்துள் வைத்து,

வாரணத்தின் சதுயார்கள் பதங்கள் போற்றி!,

மற்றும் ஒளலியாமார்கள் பதம் வணங்கி வாழ்த்தித்,

*தாரணியோர்க்கு உணர்வு உதிப்பத் *திரு மெஞ்ஞானச், சரநூலை* முறை முறையாய்ச் சாற்றுவேனே -பீர்முகம்மது ஞானியின் (மறைக்கப்பட்ட) முதல் பாடல்.*

கண்ட "பெருமந்திரமே" (சம்பந்தர் அப்பர் சுந்தரர் @) மூவர் பாடல்,

கை காண மந்திரம் கண்ணுதலோன் கூறல்(உமாபதி சிவம் திருமுறை கண்ட புராணம்:13).

கன்னல் ரசச் செந்தமிழின்(பீரப்பா/திமெசநூ:1).

தனது உரையே-சிவனின் உரைதான்-என சம்பந்தரே சாட்சி பகர்தலால்-அன்னை ஏவாள்(@ ஹவ்வா உம்மா பேசிய) தொன்மைத் தமிழின் மந்திரங்களை ஆராய்தல் அறிவுடைத்து.

மூலமந்திரம் உட்பொருளாய் நிறைந்து(ஞாபு:234).

உற்றவர் பெற்றவர் (உறவு)அற்றவர்,

அற்றவர்க்கு ^அற்றவன்-அல்லவர்க்கு அல்லவன்,

அந்தம் ஆதி இல்லவன்(இருபா இருபஃது:5).

^கலந்தவன்

முக்திதனில்- மூன்று முதலும் மொழியக்கேள்,

சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் ^அணு-மெத்தவே,

இன்பம் கொடுத்தல் இறை-(பேரின்ப)த்தை விளைவித்தல் <மலம்(உண்மை விளக்கம்:50).

^உயிர்

<தளை.

மருள் பெருகும் "மாய்கை மூன்று" -அதனில் ஒன்று மண் புவி நம்முடல் ஒன்று-

ஆகையால் 'வத்தும்' அமைத்து ஆள்பவனே(ஞாபு:579).

(ஆணவம் கன்மம் மாயை@) திரிமலமும் அகல-உயிர் ^அருள் சேர்(மருவுதலே) *முத்தி* (சிவப்பிரகாசம்:50).

^மெய்யன்

மாதர் போகம்,

5கந்தங்கள் அறுதல்,

முக்குணங்கள் அழிதல்,

வினைகள் கெடல்,

ஆணவமலம் அழிதல்,

உடல் அழியாதிருத்தல்,

ஆன்மா-விவேகம் பெறல்,

ஆன்மா அழிதல்,

உயிர் பசு கரணம்- கெடுதல்,

உயிர் சாகுதல்@10ம் பழிசேர் முத்தி கோட்பாடுகள்,என மேற்கண்ட பாடலின் துவக்கத்தில்-உமாபதி சிவனார் சாடுகிறார்.

14372/64

சித்தன் போக்கு சிவன் போக்கு:64

(பக்குவம் அடையாத உயிர்க்கு)அறியாமை உள் நின்று அளித்ததே காணும்-
குறியாகி (பக்குவம் எய்திய உயிர்க்கு) நீங்காத கோ(திருவருட் பயன்:41)

*The same Lord Who never separate,was sustaining you,unseen,in your bandha condition,appears as visible *GURU* (JMN).*

தம் முதல் "குருவுமாய்" தவத்தினில் உணர்த்த(சிவஞானபோதம்).

கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்-
குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு(குமரகுருபரர்).

அருபரத்து ஒருவன் அவனியில் வந்து-
'குருபரனாகி' அருளிய பெருமை(மாணிக்கவாசகர்).

~ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு(தொல்:53).
~அத்தன்,ஆத்தன்,ஆதம்.

'அவா' இல்லார்க்கு-இல்லாகும் துன்பம்(குறள்:368).

- சிவத்தைப் பேணல்-தவத்தி(ன)ர்க்கு அழகு(கொன்றை வேந்தன்:28).
- சிவனை.

இனியது கேட்கின்- "தனி" நெடுவேவோய்,
இனிது இனிது- "ஏகாந்தம்" இனிது,
அதனினும் இனிது- "ஆதியைத்" தொழுதல்-ஔவை மூதாட்டி.

யானாகிய என்னை விழுங்கி வெறுந்-

தானாய் நிலை நின்றது தற்பரமே(கந்தரநுபூதி:28)

சித்த வைத்திய நூற்களின் துவக்கத்தில் இடம்பெற்ற "கடவுள் வாழ்த்துச் செய்யுள்"களிலும்-அநேக முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டுள்ளாதலால்-

அவற்றுள் சிலதை ஈண்டு காண்போம்:

காரண 'மனோன்மணியைக்' கருத்தில் வைத்து-

கவனமுடன் போற்றியேதான் (நந்தீஸ்வரர்).

சீரான பராபரத்தில் பரமாய் நின்று-

திரிபுவனந்து ஆக்கியவை ஆளாய் நின்ற-

பேரான வஸ்து எனும் 'விமலர்' பாதம் பேணியே நமஸ்கரித்து(வைத்திய சில்லரைக்கோர்வை/அகஸ்தியர்).

பாரப்பா 'வாலைதனைத்' தியானம் செய்யப்-

பாங்கான நவகோணமிட்டுச் சூழ(பூஜாவிதி -37/போகநாயனார்).

ஆதிவேதாந்த "மனோன்மணியே" காப்பு!

அருளான முப்பாழாம் வெளியே காப்பு!

சோதியிலே முளைத்தெழுந்த சுடரே காப்பு!(மச்சமுனி சூத்திரம்-11).

அடியாகி அண்டர் அண்டத்து அப்பாலாகி-

அகாரம் என்னும் எழுத்து துவேத பாதமாகி-

முடியாகி நடுவாகி மூலம் தன்னில்-

முப்பொருளும் தானாகி முதலுமாகிப்-

படியாகி முப்பாழற்று படிக்கும் அப்பால்-

படி கடந்த பரஞ்சோதிப் பதியுமாகி,

அடியாகி 'மூலமதே அகாரமாகி' -

அவன் அவளாய் நின்றநிலை யணுவதாமே (திருமூலர் நாதாந்தக் குறிப்பு-11).

ஒப்புகிறேன் "மாயம்" எல்லாம் மனமே ஆச்சு(கொங்கணர் முக்காண்ட சூத்திரம்-17).

சக்தியல்லோ நூறு பங்கு- "சிவன்தான் ஒன்று" ,

சார்வாக இருந்து கொண்டு உலகமெல்லாம்,

முத்தியல்லோ கொடுத்தாண்டு ரட்சித்தார்கள்(கொங்கணர் பூஜாவிதி-15).

சோதி எனும் துய்யவெளிக் "குருவே ஐயா!"

சொற்பெரிய கைலாசமயமே-ஞானம்!(கைலாசச் சட்டமுனி நாயனார் சூத்திரம்-52)

மூலவட்டமான குரு பாதம் காப்பு!

முத்திக்கு வித்தான முதலே காப்பு!

மேல வட்டமான பரப்பிரமம் காப்பு!

வேதாந்தம் கடந்து நின்ற "மெய்யே காப்பு!" (உரோமரிஷி சூத்திரம்-100).

ஆறாகும் முப்பத்தாறுக்கு அப்பால் அனாதி மூலம்,

கூறாத கூறியதாகிக் "குருபதம் தெய்வம் மூன்றாய்" ,

பேறாத மூவர் பாதம் பேரொளி தானாய் நின்ற,

"ஆறாறுக்கப்பால்" நின்ற ஆதியாம் சோதி மூலம்(திருவள்ளுவர் நாதாந்தத் திறவுகோல்-97:66).

வெளியதனில் வெளியாகி-நாதத்துள்ளே ,

விலகி நின்ற 'வாலைப்பெண்' ஆதி காப்பு!(கருவூரார் பூஜாவிதி-30)

ஆதி அந்தம் நடு இருந்த பர மெஞ்ஞானம்-

அகண்ட "பரிபூரணமே" அதீத தாது(தெட்சணாமூர்த்தி பட்சணி-110).

காதலன் ஒருவன் மரணத்தருவாயில் புன்னகைத்தவாறு இவ்வாறு இரைந்து புலம்பினான்:

ஆஹா!வாழ்நாள் முழுக்கப் போற்றினேன்.இப்பொழுதுதான்-அந்த கட்டழகி தனது முகத்திரையை நீக்கினாள்.

சிரஞ்சீவியான காதல்ரச இன்பங்களை-ஊனக்கண்களால் பருக இயலாது(ஹக்கீம் ஸனாயி-ரலி).

வேகமாக கவி இயற்றும் இப்புலவன்,

நபியையும் "அலியையும்

அதிகம் நேசிக்கிறான்" என்று குற்றம் சாட்டுகிறார்கள்,

அவ்விருவர் மீதான எனது கவிதையால்,

(பகவியான)ஆயிரம் பேர்களை என்னால்

பாதுகாக்க இயலும்,என்பது அவர்களுக்கு விளங்கவில்லையே!-

ஃபிர்தவ்ஸி(கிபி.935).

அகர முதலானை&

அகர முதலின் எழுத்தாகி நின்றாய்(ஞானசம்பந்தர்/1:88:5 & 7:3:7).

பிறப்பு என்னும் ^பேதைமை நீங்கச்- சிறப்பு என்னும்,

"செம்பொருள்" காண்பது அறிவு(குறள்:356).

^ஆணவமலம்

வீடுபேறு

பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்(குறள்:349).

"செம்பொருள்" துணிவே-சீருடைக் கழலே-செல்வமே-சிவபெருமானே!(மணிவாசகர்).

செம்பொருளான சிவம்(திருமந்திரம்:2563).

எனதுரை தனது உரையாக நிமலன் என எழில் கொள்வது இயல்பே(ஞானசம்பந்தர்/1:76:1).

"குரு" நீ என்னும் குணக்குன்றே!(திருமாளிகைத் தேவர்).

குணம் என்னும் குன்று ஏறி நின்றார்&

மெய்ப்பொருள் கண்டார்(திருவள்ளுவர்:29,356/கிமு:31).

ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்-உபசாரம் உறவு சீலம்,

வழுக்கிலாத்தவம் தானங்கள்-

^வந்தித்தல் வணங்கல் வாய்மை-

அழுக்கிலாத்துறவு அடக்கம்,

அறிவொடு (இறைவியை)அர்ச்சித்தல்-ஆதி

இழுக்கிலா (16)அறங்கள்(சிவஞான சித்தியார்:113)

^பெரியோர் துணைகோடல்(qur'aan/9:119).

மாற்றிப்பிடிக்க மருந்து என்ன? சொல்லடி சிங்கி?-

அது- "மாளாமல் மாண்டு" மறந்தும் இருப்பதே சிங்கா!(பீரப்பா/ஞாரகு:61)

14372/65

சித்தன் போக்கு சிவன் போக்கு:65

எட்டிரண்டு அறியாத மூடனாய்-இரு வினைக்கு ஈடாகி நின்று அழுவனோ?(முச:77) &

எட்டிரண்டும் உன்னதென்றும் ஏழை அறியாதபடி-

வெட்டவெளிப் பேதையென விட்டாய் நிராமயமே!(நிக:246)-குணங்குடியார்.

*அ+உ @ எட்டும் இரண்டும்- நாம் அறிந்ததே. *நவீன 8+2* ப்பார்ப்போம். கவனச்சிதறல் இன்றி-இதில் ஊன்றினால் மாத்திரமே-காலனின் வலையிலிருந்து தப்பிக்க இயலும்.*

*1.அகீதா/ *கொள்கை* சம்பந்தமாக-மாதுருதி+அஷ்அரி -இருவரின் கருத்தியல்கள்.*

*2. *சரியை* /சீலம்/ஷரீஅத் சம்பந்தமாக -4இமாம்களின் ஆழஅகல நுட்பங்கள்.*

*3.(அத்வைத+துவைத) *ஞானம்* /இர்ஃபான் குறித்தான தெளிவான வழிகாட்டல்கள்.*

*4.முச்சுடர் சம்பந்தமான *சைவசமய* சித்தாந்தங்களில்-பிற கலாச்சார தாக்கங்கள்.*

*5.மகாபுருஷர்களான *சித்தர் இலக்கிய* கோட்பாடுகள்.*

*6. *தமிழ் ஸுஃபி* பாடல்களில் ஒழிந்துள்ள-சித்தர்கண தெளிவுகள்.*

*7.சித்தர்கண அதிபதி *பீரப்பா* அவர்களின் அனைத்து ஆக்கங்களின் சாராம்சம். குறிப்பாக:*

பிஸ்மில்குறம், ஞானமணிமாலை, மஃரிபத் மாலை, ஞான முச்சுடர் பதிகங்கள்.

*8.பீரப்பா ஆண்டகையின் உம்முல்கிதாபான @ *ஞானப்புகழ்ச்சி* பகரும்-சிவகுருவாய் சர்வசமய வடிவாய் படியளக்கும் கோமான்(267,362,368,397,560).*

+

*1.படைப்பினத்திற்கும் படைத்தவனுக்குமான - *நிஜ பிணைப்பு?* .*

*2. *கருக்குருவுக்கும்* இறைக்குமான பந்தம்?.*

சரியை-ஞானம்/சீலம்-அறிவு வரை நால்வகை பிரிவுகளை மட்டுமே ஞான இலக்கியங்கள் அலசும்.ஆனால் பீரப்பா அவர்கள் 'முஹப்பத்' @ பிணைப்பு/மருவுதல் குறித்து ஐந்தாவதாக அடுக்குகிறார்கள்(156).

இல்மு+ஐன்+ஹக் @ 3 உறுதியான அறிவுகளைப் பற்றியே-தத்துவநூல்கள் விவாதிக்கும்.ஆனால் சிகரக்கலை அறிவான-ஹகீகத்துல் யகீனான- "திக்ருல் யகீன்" @ ஈர்பங்கில் கேட்கும் ஓசையையும் நான்கவதாக இணைக்கிறார்கள்(614,639).

மாசித்தர்களின் மகாவாக்கியங்களுக்குமான குறிப்புகளை-எளிதில் ஞானப்புகழ்ச்சியில் உரசலாம்:

திருநந்தி வாசமுள்ள அருள் என்று காண-

உயிர் "திருமந்திரம்" தருகவே(441).

'திருவாசகம்' கேட்டு உருகார்?(212).

மறை தரும் முகம் அறுவகை-அதில் ஒரு முகம் "உமைஞ்சுடராய்"...

சிவலோகமது ஆறும் (380,426)

உனைத் தேடியே-தரையில் ஸுஜூத் இட்டு தளர்வது ஏனோ?....

"சிரம் இல்லா ஸுஜூத்" செய்து கேட்பன் (154,135).

பசுபாசத்து ஆதி முதலோனே:

1.அநாதியே

2.அல்லாஹ்வே

3.ஜோதி(யே) இறையோய்(462).

யானே பிரம்மன்!

யானே சுத்தன்!

யானே சித்தன்!

யானே புத்தன்!

யானே ஆனந்தம்!

யானே பேரின்பன்!

யானே மூலம்!

யானே பரிபூரணன்!-பிரம்ம அனுபவ உபநிசத்.

வெற்றுச் சதையா நீ?

வெற்று உடலா நீ?

சூக்கும காரண

பந்தம் மட்டும்தானா?

பேரான்மாவுடனல்லோ?

உனக்கு பந்தம்!

பொய்யுடல் தாண்டிய பரிபூரணம்

வசமாகும் உனக்கு

தன்னை அறிந்தவன்

தண்மை உணர்பவன்-விசாரபிந்து உபநிசத்.

பரிபூரண பிரக்ஞை நீ!

என்றுமுள ஆன்மா நீ!

மாறிலி நீ!

அழிவிலி நீ!

அமர் உன்னதம் நீ!

அச்சமற்ற ஆன்மம் நீ!

ஆனந்தத்தில் திளை

உந்திபற நீ-இக்கணம்-ஆனந்த பிந்து உபநிசத்.

வேதப்பொருள் இன்னதென்று "வேதம் கடந்த-

மெய்ப்பொருளை" கண்டு மனம் மேவ(பாம்பாட்டிச் சித்தர்).

بينـــــي وبينــك إنّـــــي ينازعني

فـــــــــــارفع بلطفك إنّي من البين

_

الحلاج رضي الله عنه

"ஏகம்" என்ற வஸ்தானது-'யூகமாய்' தனித்திருக்கும் நேரத்து- "தாகம்" எனும் அவா ஏற்படுகிறது.அந்த பேரின்பத் தாகத்தைத் தணிப்பதற்காக - 'தேகம்' என்ற கரணங்களை ஏற்கிறது."மோகம்" எனும் பெயரில் அதில் மூழ்கிக் குளித்ததை - "போகம்" என்று பகர்வர்.அதிலும் துன்பங்கள் துளிர்க்கும் போது- 'சோகம்' என்ற நாமத்தைத் தரிக்கிறது. அதில் நின்றும் விடுபட்டதும்- "யோகம்" என்ற நிலையைப் பெற்று- "ஞானம்" எனும் உன்னதநிலையை அடைகிறது.

இதனால்- ஜீவ பிரம்ம ஐக்கிய சாட்சாத்கார சமாதி நிலையைப் பெறும்போது- மீண்டும் "ஏகம்" எனும் முந்தைய அழகுப்பெயரை பெறுகிறது....(மகானந்தபாபா கிர்கிரி அவர்களின்'அத்வைத கானத்தின் சாராம்சம்).

பகுது அஹதாகக் காலியாமே!(ஞானப்புகழ்ச்சி:17).

ஹா-என்று எவர்க்கும் உயிர் ஆனந்தமாய் வகுத்து-

ஹீ-என்று நிற்க நிலை ஈந்தோனே-

ஹூ-என்ற கோமானே!(ஞான விகட சமர்த்து).

உருவை அருவை ஒளியை வெளியை

இருளை சிவம் என்று இராதே! --மருளைப்

பிரிந்தறிவிற் கண்டதனைப் பின்னமற எங்குஞ்

செறிந்த பொருள்தானே சிவம்!.

(சிவபோகசாரம் - 17)

இதனாற்றான் அனைத்து சித்தர்களுமே இறுதியில்- "முஹ்யித்தீன் என்ற சமுத்திரத்தில் மூழ்கி இறவா வரம் பெற்றனர்.*

வெய்யவன் முஹ்யித்தீனும்(612) &

அநாதி ஜலால் வெய்யவனாம்(618)- ஞாபு.

اَللّٰهُم صل على سيدنا محمد وآله حق قدره ومقداره العظيم

Dr muhiyideen katheeja qathiri

Refer:13472/41-50

qadhiriyyathulidhroosiya@gmail.com

சித்தன் போக்கு சிவன் போக்கு:66

ஞானப்பாடல்களை-தோற்ற அளவில் எளிதாகக் காண்பவர்கள்-ஏமாளிகளே!.

அந்த நிசப்தத்தின் சங்கீதத்தை/வல்லானின் வசீகரத்தை/சத்திய சமிக்ஞைகளை - சுவாசிக்க முயல்தல் வேண்டும், "ஞானப்பாட்டையின் நுட்பங்களை" உள்வாங்க வேண்டும்.இல்லையேல் அது வெறும் -சடங்கு சார்ந்த கதைவாசிப்பாகவே அமையும்.ஏனெனில் ஒரே பாடல் வரிகள்-படிப்பவரின் மனத்தடாகத்திற்கேற்ப/மெய்த்தேடலின் வேகத்திற்கேற்ப-அர்த்தத்தினை விரிந்து கொடுக்கும் தன்மை பயத்தது.

أنا أحبّ الحبّ والحبّ يُحبّني..

فتحتُ ذراعيَّ للحبِّ والحبُّ احتضنني.

جلال الدين الرومي

நான் காதலை 💙 நேசிக்கிறேன்,காதலும் என்னை நேசிக்கிறது, காதலுக்காக எனது கைகளை விரித்தேன்,காதல் என்னை ஆரத்தழுவியது-ரூமிநாயகம்.

முச்சந்தி வீதியிலேச் சென்று,இச்சையுடன் இருக்கும் பொருளதை...(மஹ்பூப் மனோன்மணிக் கீதம்/அல்லாமா அஹ்மத் மீரான் வெள்ளி ஆலிம்).

என்றன் "சிவயோகக்" கண்ணிற் படலத்தை நீக்கு-உனைத் தேர்வதற்கே (ஞானப்புகழ்ச்சி:314).

Dr muhiyideen katheeja qathiri.

19.03.2025/ H.1446 Ramazaan-18.

. . . .

மிகுதி பயன்பட்ட நூல்கள்

A. ஞானம்:

The Secret of the Secret/British library catalozing.

ஞானப்புதையல்/*Tpct*

Fuyoozhaatur rabbaaniyya,Insaan kaamil,fusoosul hikam,futhoohaatul makkiyya,minan, lathaayiful minan,khamriyya/Allame library, Lebanon.

ஒழுவில் ஒடுக்கம்/கண்ணுடைய வள்ளல்.

கைவல்ய நவநீதம்/ஶ்ரீ தாண்டவராய சுவாமிகள்.

சித்த வேதம்/சிவானந்த பிரஹம்ஸர்.

சிவஞான தீபம்/ஜமாலிய்யா யாஸீன் அபூஸாலிஹ் நாயகம்.

சிவஞான போதம்/மெய்கண்ட தேவர்.

முஸ்லிம் அத்வைத மூலமொழி/முஹம்மது அப்துர்ரஹ்மான்.

ஞானத்தின் திறவுகோல்/qit

இச்சை மஸ்தான் பாடல்கள்/malayalam

+

B. சிவம்:

சிவபோகசாரம்/குருஞான சம்பந்தர்.

சிவஞானபோதச் சிற்றுரை/சிவஞான சுவாமிகள்.

சைவ சித்தாந்தம்/இராமாநுசாச்சாரி.

சித்தாந்த வினா விடை/சி.அருணை வடிவேல் முதலியார்.

சிவஞானபோதச் சொற்பொழிவுகள்/VP காந்திமதிநாத பிள்ளை.

மெய்கண்ட சாத்திரம் பதினான்கு/மெய்கண்டார் முதலியார்.

பதிபசு பாசுரத் தொகை/மறைஞான சம்பந்தம்.

சிவஞானபோத ஆராய்ச்சி/மறைமலையடிகள்.

இருபா இருபஃது,உண்மை விளக்கம் சிவப்பிரகாசம்,திருவருட் பயன்/சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

சைவ சித்தாந்தப் பெருமன்ற மாநாட்டுத் தலைமைப் பேருரைகள்/சை.சி. பெருமன்றம்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சிவன்/ச.இரேணுகா.

பதிபசுபாசத் தொகை/மறைஞான தேசிகன்.

+

C.தத்துவம்:

இந்திய தத்துவ ஞானம்/கி.இலட்சுமணன்.

தத்துவஞான அநுபவ விளக்கம்/மீனாட்சி சுந்தர சுவாமி.

உன்னை அறி/ரமண மகரிஷி.

ஆதி மெய் உதய பூரண வேதாந்தம்/காதர் பாட்சா மெய்வழிச்சாலை ஆண்டவர்கள்.

+

D.சித்தர்கள்:

அகஸ்தியர் கௌமதி நூல்400/*Tamilnadu Digital Library e-books.*

அகத்தியர் ஞான காவியம்/*Roja MR library.*

பெரிய ஞானக் கோவை/*universal library*

திருமந்திரம்/திருமூல நாயனார்.

திருவருட்பா/இராமலிங்க சுவாமிகள்.

திருப்பாற்றிரட்டு/தாயுமான சுவாமிகள்.

அப்துல்வதூத் ஐதுரூஸ் மச்சரேகை சித்தன் திருப்பாடல்கள்/Srilanka.

மஹ்பூப் மனோன்மணிக் கீதம்/Srilanka.

+

E.islamic:

Islamic Encyclopedia/Adone Publishing Group.

Tafseer Jeelaani/Muhiyideen sheiq.

Tafseer sheiqul Akbar/Ibnu Arabi Sheiq.

உலூமித்தீன்/கல்வத்து நாயகம்.

வேதபுராணம்/பெரிய நூஹ் வலியுல்லாஹ்.

குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் உரை/மா.வடிவேலு முதலியார்.

பீர்முகம்மது அப்பா பாடல்கள் உரை/நெய்னா முஹம்மது பாவலர்.

வேதாந்த பாஸ்கரன்- முகம்மது இப்ராஹீம் கருணையானந்த பூபதி சுவாமிகள்.

மெஞ்ஞானத் திறவுகோல்/தே.ப.அப்துர் ரஹ்மான் மஸ்தான்.

மெய்ஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம்/பீர்முகம்மது மஸ்தான் பாவா.

நான் கடவுள்/ஹாஜா ஸெய்யித் ஹுஸைன் பரஞ்சோதி மஹான்.

மஸ்னவி ஷரீஃப்/மௌலானா ரூமி.

முஸ்லிம் தமிழ் புலவர்களின் "ஞானப்பாடல்கள்" /jnmjstg

○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○

ஆதி நாயனையே பணி செய்திட்டும்,
அஞ்சும் ஆறும் அறியாத புல்லனை,
நீதி என்று வணங்கிடவோ?சொல்லு!,
*நித்தமும் *யா மஹ்பூபு ஸுப்ஹானியாம்* ,*
துய்யவன் "ஹய்யுல் ஃகய்யூமதானவன்",
ஏது பாதையிலுமே வெளியாக்கிடு!(பீரப்பாவின்' ஞானக்குறம்:37).
يا من سواك

يقول مولانا ابن عربي:

كُل حبٍ يُنبِتُ في القلب هـو غَيّثٌ من الله.
وكل فِرَاقٍ يَصَعَقُ القلب هو حُبٌ من الله.
فالله يجعلك مُحِبَاً لتقترب..
ويجعلك مُفَارِقَاً لِتَحتَرِق..
ومـا بين الحُبِ والإحتراق يُولَدُ ؛

العشق... 🤍 ...

இதயத்தில் வளரும் ஒவ்வொரு காதலும் -இறையின் ஆசீர்வாதம்.

இதயத்தைத் திகைக்க வைக்கும் ஒவ்வொரு பிரிவும்-இறையிடமிருந்து வரும் காதல்.

தன்னை நெருங்கி வரும்படி-இறை உங்களை காதலின் வடிவமாக ஆக்குகிறான்.

உங்களை எரிக்கவே-அவனை விட்டும் உங்களை பிரிக்கிறான்.

காதல் மற்றும் எரித்தல்-இடையே பிறந்ததே- ❤️ ...நேசம்.

-முஹ்யித்தீன் இப்னு அரபி ஆண்டகை.

கட்டுரை ஆசிரியரின் நூல்கள் :

குணங்குடியாரின்-ஆநந்தப் பத்து & எங்கே சென்றாயோ? & துறவுநிலை.

கீலானி ஆண்டகையின் கிலாபத்.

ஞானத்தின் திறவு கோல்.

சிகரக்கலை அறிவு.

சிகரக்கலை ஞானம்.

மச்சரேகை சித்தர் பாடல்கள்...compressed

பீர் மஸ்தான்' மெய்ஞ்ஞான- -பரிபூரணக் களஞ்சியம்...cmprsd.

தணிகை மணிபிரானின்- சிவஞான தீபம்....cmprsd

றஸூல்பீவியின்' ஞானாமிர்த- சாகரம்...cmprsd

தாயுமானவர்- பாடல்கள்...cmprsd

ஸிர்ருல் அஸ்ரார்.

இறைத்தூதர் இப்றாஹீம்- -இறைநேசரானதின் ரகசியம்.

ஸலவாத்தின் சன்மானம்.

பகுதாது பகலவனின் படிக்காத- -பதிவுகள் பதினேழு.

காலை மாலை அவ்ராதுகள்.

குத்பு நாயகத்தின்- -ஸலவாதுக்கள் zip.

ஸலவாதுல் ஹர்ப்.

குத்பு நாயகத்தின் ஹிஸ்புகள்.

இஸ்லாத்தின் அஸ்திவாரம் அபூதாலிப் நாயகம்.

வலிமார்களிடம் உதவி தேடல்-ஸுன்னத்.

சீர் பிரிக்கப்பட்ட ஞானப்புகழ்ச்சி.

எளிய தமிழில் ஞானப்புகழ்ச்சி.

பீரப்பாவின்- ஞானக்குறம்.

பீரப்பா ஈரட்டக மாலை.

பீரப்பா நாவடி சிந்து.

முஹ்யித்தீன் பாமாலை...compiled.

ஹஸனைன் மௌலித் தமிழில்.

மறைக்கப்படாத லைலதுல் கத்ர்.

குத்பிய்யா கஸீதாக்கள்.

மன்னர் முஆவியாவின்- மறுபக்கம்.

தேவ்பந்திகளின் இருட்டடிப்புகள்.

அரைவேக்காடு ஆலிம்- அறுவருக்கு மறுப்பு.

துஆ ஸைஃபீ.

துஆ முஃஃனீ.

துஆ ஹைதர்.

துஆ ஹய்யுல் கையூம்.

துஆ ஹிஃஃப்ள்.

துஆ ஸிர்ருஷ் ஷரீஃஃப்.

துஆ ஸபாஸிப்/மஹ்தி.

துஆ இமாம் ஹுஸைன்.

அஹ்மதுல்லாஹ் பைத்.

ஜீலானி ஆண்டகையின்- திருநாமங்கள்.

அஜ்மீர் ஆண்டகை பெயர்கள்.

நாகூர் ஆண்டகை திருநாமங்கள்.

பாவா காஸிம் வலி பைத்.

ஹல்லாஜ் ஆண்டகை கஸீதா.

மோனகுரு மஸ்தான்- பாடல்கள்.cmprsd

ஞானியாரப்பாவின்-கீதாமிர்தம் & -திருநிதானம்.

ஏகன்- -அல்லாஹு.

நாதாக்களின் உரூஸ் தினங்கள்.

தரீகதுல் ஜலாலிய்யதுல்- -காதிரிய்யா அவ்ராதுகள்.

பிழையின்றி எழுதலாமே.

சித்தன் போக்கு சிவன் போக்கு.

சாயுச்சிய சந்தனச் சாரல்

Muhiyideen sheiq basic awrad